ஸ்ரீ:

ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்மியம்

(திருமாந்துறை ஸ்தல புராணம்)

1972

ஸ்ரீ:

ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்மியம்

(திருமாந்துறை ஸ்தல புராணம்)

பிரசுரிப்பவர் :

ஆங்கரை கந்தசாமி கணேசன்

1972

புத்தகம் (இலவசமாக) கிடைக்குமிடம் :

SHRI A. K. GANESAN,
III - I - 27, Lajpat Nagar - III,
New Delhi - 24.

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ், ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதிகள்
ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதிகள்.

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य श्रीमच्छंकर भगवत्पादप्रतिष्ठित श्रीकाञ्चीकामकोटि पीठाधिप जगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्र सरस्वती श्रीपादादेशानुसारेण श्रीजयेन्द्रसरस्वती श्रीपादैः

अघहर (आङ्गरै) ग्रामाभिजन स्कन्दस्वाम्यार्यपुत्राय श्रीमते गणेशार्याय क्रियते नारायणस्मृतिः ।

भवता प्रकाश्यमानमाम्रवणक्षेत्रमाहात्म्यं स्कान्दपुराणे अगस्त्यसंहितायां क्षेत्रखण्डान्तर्भूतं सत् सप्तविंशत्यध्यायैः त्रिशिरःपुरी समीपविराजमाने आम्रवणक्षेत्रे लिङ्गरूपेण आविर्भूतस्य आम्रवणेश्वरस्य महिमानं वर्णयति ।

पुत्रार्थं मृगण्डुमुनिना, शापविमोचनार्थं ब्रह्मणा, इन्द्रेण, मरुतान्तेन च, स्वपितुरुद्धारणार्थं वेदमित्रेण, दक्षयज्ञ-गमनापराधनिवृत्तये सूर्येण, सूर्यतेजःसहनार्थं संज्ञादेव्या, रात्रीश्वरत्वप्राप्तये चन्द्रेण, स्वाशुचित्वनिवृत्तये समुद्रेण च आम्रवणेश्वरस्य पूजनम्, मृगपोतसंरक्षणार्थं गौरीशम्भ्वोर्मृगरूप-

धारणम् , गायत्रीसरिन्महिमा , श्वेतकेतुमहीशेन आलयनिर्मापण-मित्यादयः कथाभागाः निरूप्यन्ते ।

तत्र तत्र कथामध्ये साधुलक्षणम् , गृहस्थधर्माः, स्त्रीधर्माः, शिवोत्कर्ष इत्यादयो विषया अपि सुहृत्सम्मिततया उपदिश्यन्ते ।

आस्तिकाः एतद्ग्रन्थसाहाय्येन एतत्क्षेत्रमहिमानं जानन्तः श्रीबालाम्बिकासमेत श्रीमदाम्रवणेश्वरमाराधयन्तः सर्वाण्यपि मङ्गलान्यवाप्नुयुरित्याशास्महे ।

यात्रास्थानम्-कायंकुलम्
(केरलप्रान्तः)
विरोधकृत्फाल्गुन बहुल सप्तमी ।

नारायणस्मृतिः ।

|| ஸ்ரீ: ||

முத்ரா

ஸ்ரீ முகம்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்ய ஸ்ரீமத் சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிப ஜகத்குரு ஸ்ரீமத் சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களின் ஆதேசத்தை யனுசரித்து ஸ்ரீமத் ஜயேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால்,

ஆங்கரை ஸ்ரீ கந்தஸ்வாமி அய்யரின் புத்திரர் ஸ்ரீகணேசய்யரின் பொருட்டு நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

உங்களால் வெளியிடப்படும் ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்ம்யம் என்னும் இந்நூல் ஸ்காந்த புராணத்தில் அகஸ்த்ய ஸம்ஹிதையில் க்ஷேத்ர கண்டத்தில் உள்ளது. 27 அத்தியாயங்கள் கொண்ட இது திருச்சிராப்பள்ளிக்கு அருகிலுள்ள ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ரத்தில் லிங்கரூபமாக ஆவிர்பவித்துள்ள ஸ்ரீ ஆம்ரவணேசுவரரின் மஹிமையை வர்ணிக்கிறது.

புத்திர லாபத்திற்காக மிருகண்டு முனிவரும், சாபம் நீங்குவதற்காக பிரஹ்மா, இந்திரன், மருதாந்தன் இவர்களும், தன் பிதாவுக்கு ஸத்கதி கிடைக்க வேதமித்ரனும், தக்ஷயாகத்திற்குச்

சென்றதாலுண்டான தோஷம் நீங்க ஸூர்யனும், ஸூர்யனுடைய தேஜஸ்ஸைப் பொறுத்துக் கொள்ளும் சக்தி கிடைக்க ஸம்ஜ்ஞாதேவியும், இரவிற்கு அதிபதியாக ஆவதற்கு சந்திரனும், தனக்கு ஏற்பட்ட அசுத்தி நீங்க ஸமுத்திரராஜனும் ஆம்ரவணேச்வரரைப் பூஜித்த வரலாறு, மான் குட்டிகளைக் காப்பாற்ற கௌரியும் சம்புவும் மான் உருவம் தரித்தது, காயத்ரீ நதியின் மஹிமை, ச்வேதகேது மஹாராஜா ஆலயம் கட்டிவைத்தது இது முதலான கதைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஆங்காங்கு கதையின் நடுவில் ஸாதுக்களின் லக்ஷணம், க்ருஹஸ்த தர்மம், ஸ்த்ரீ தர்மம், சிவனின் உத்கர்ஷம் முதலான விஷயங்களும் நண்பன் எடுத்துக் கூறுவதுபோல மனதில் நன்கு பதியும்படி இனிமையாக உபதேசிக்கப்படுகின்றன.

ஆஸ்திகர்கள் இந்நூலின் உதவியால் இந்த க்ஷேத்திரத்தின் மஹிமைகளை அறிந்து ஸ்ரீ பாலாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆம்ரவணேச்வரரை ஆராதித்து எல்லா மங்களங்களையும் அடைய வேண்டுமென்று ஆசீர்வதிக்கிறோம்.

முகாம்: காயங்குளம் (கேரளம்)
விரோதக்ருத், பால்குன
க்ருஷ்ண ஸப்தமி

நாராயண ஸ்ம்ருதி

பொருளடக்கம்

		பக்கம்
ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அருளிய ஸ்ரீமுகம்	...	i–iv
பொருளடக்கம் :	...	v–vi
முகவுரை	...	vii–xii
அத்யாயம் 1 ஆம்ரவண க்ஷேத்ர மஹிமை	...	1–9
,, 2-5 மிருகண்டு மஹரிஷி தவம் செய்து புத்ரனை அடைந்த வரலாறு	...	9-32
,, 6–8 மார்க்கண்டேயன் தீர்க்காயுஷ்யம் அடைந்த வரலாறு	...	32–57
,, 9–11 ப்ரஹ்மா சாப விமோசனம் பெற்ற வரலாறு	...	58–73
,, 12–14 இந்திரன் சாப விமோசனம் பெற்ற வரலாறு	...	74-96
,, 15-16 கஹோலஸுதன்-மருதாந்தன் பாப விமோசனம் பெற்ற வரலாறு	...	96-109
,, 17-18 வேதமித்ரன் வரலாறு	...	109-120
,, 19 ஸூர்யன் பூஜித்த வரலாறு	...	121-124
,, 20 ஸம்ஞாதேவி அர்ச்சித்த வரலாறு	...	124–129
,, 21 சந்திரன் ராத்திரிக்கதிபதியான சரிதம்	...	129–132
,, 22 ஸமுத்ர ராஜன் தோஷம் நிவர்த்தி பெற்ற வரலாறு	...	132–137

,, 23 மான் குட்டிகளை சிவன் பார்வதி ரக்ஷித்த வரலாறு ... 137-142
,, 24 காயத்ரீ நதியின் மஹிமை ... 143-148
,, 25 ஸுவ்ரதன் வரலாறு ... 149-152
,, 26-27 சோழராஜா ச்வேதகேது ஆம்ரவணேச்வரருக்கு கோயில் கட்டிய வரலாறு, ஆம்ரவண க்ஷேத்திர மாஹாத்மியத்தின் பலச்ருதி ... 152-160
,, திருஞானசம்பந்தர் திருமாந்துறைத் தேவாரம் ... 161-163
,, திருமாந்துறைத் திருப்புகழ் ... 164

முகவுரை

திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள திருமாந்துறை ஸ்தலத்தின் மஹிமையைக் கூறும் 'ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்மியம்' என்னும் ஸம்ஸ்கிருத நூல் சமீபத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகத்தின் முகவுரையில், 'இந்த மாஹாத்மியத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்று உள்ளது, அது ஸ்ரீ ஆம்ரவணேச்வரர் கிருபையால் சீக்கிரம் வெளியாகும்' என்று கூறப்பட்டது. ஸ்ரீ பாலாம்பிகா ஸமேத ஸ்ரீ ஆம்ரவணேச்வரர் அனுக்ரஹத்தால் அதை அச்சிடும் காரியம் நிறைவேறி 'ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்மியம்' தமிழில் வெளியிடப்படுகின்றது.

காவேரி நதியின் வடகரையில் பிரம்மாவினால் நிர்மிக்கப்பட்ட காயத்ரீ என்னும் புண்ய நதியுடன் கூடிய, பிரம்மானந்தபுரம், ஆம்ரவணம், அகாபஹாரி, மிருகண்டீச்வரபுரம் மிருகதீர்த்தபுரம், என்ற பல பெயர்களைக்கொண்ட இத்தலத்தில் உள்ள, சுத்த ரத்னேச்வரர், மிருகண்டீச்வரர், ஆம்ரவணேச்வரர், என்ற நாமாக்கள் கொண்ட ஸ்வயம்புவான மஹாலிங்கமூர்த்தியை பிரம்மா, இந்திரன், மிருகண்டு முனிவர், கஹோலர் பிள்ளை மருதாந்தன், வேதமித்ரன், போன்ற பலர் பூஜித்து ஸ்ரீ ஆம்ரவணேச்வரரின் அருளைப்பெற்ற சரிதங்கள் இந்தப் புராணத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

மிருகண்டு மஹரிஷி இத்தலத்தில் தவம் செய்து பிள்ளையைப்பெற்றதும் மார்க்கண்டேயர் தீர்க்காயுஸை அடைந்ததும், பிரம்மா பொய் வார்த்தை சொன்னதினுல் வந்த சாபத்தை இங்கு தவம் செய்து நிவர்த்தி செய்து கொண்டதும், இந்திரனுக்கு கௌதமரால் ஏற்பட்ட சாபம் ஸ்ரீ ஆம்ரவணேச்வரரை பூஜித்ததால் விமோசனம் ஆனதும், இப்புராணத்தில் மிக அழகாக சொல்லப் பட்டிருக்கின்றது. கஹோலர் பிள்ளை மருதாந்தன் அடைந்த மாத்ருகமன தோஷம் இத்தலத்தில் நீங்கிற்று. வேதமித்ரனின் பிதாவின் அஸ்தி இந்த க்ஷேத்ரத்தில் சுத்தரத்னமாயிற்று. ஸூர்யன், ஸம்ஞாதேவி, சந்திரன், ஸமுத்ரராஜன் முதலிய வர்கள் ஸ்ரீ ஆம்ரவணேச்வரரை பூஜித்து அவர் கிருபையைப் பெற்ருர்கள். மான் ரூபந்தரித்து, சிவனும் பார்வதியும் இத்தலத்தில் மான் குட்டிகளை ரக்ஷித்தார்கள் இத்தலத்தில் சோழராஜா ச்வேத கேது என்பவன் ஸ்ரீ ஆம்ரவணேச்வரருக்கு கோயில் கட்டி ஸ்ரீ பாலாம்பிகாதேவியை பிரதிஷ்டை செய்து மஹாபிஷேகம் செய்து வைத்து, பிராமணர்களுக்கு கோ பூ ஸ்வர்ண தானங்கள் செய்து, நித்யபூஜை வகையருவுக்கு ஏற்பாடு செய்து சிலகாலம் வசித்து, பின்னர் தன்னூர் சேர்ந்து ஸ்ரீ ஆம்ரவணேச்வரர் அனுக்ரஹத்தால் குணசாலியான பிள்ளையைப் பெற்ருன்.

ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ரத்தின் மாஹாத்மியத் தைக் காட்டும் மேலே சொன்ன விருத்தாந்தங்கள் எல்லாம் இந்த ஸ்தல புராணத்தில் ஈசுவர பக்தியை

ஊட்டும் வகையில் கூறப்பட்டிருக்கின்றன. இப் புராணம் அங்கங்கே பக்தர்கள் நற்கதியை அடைவ தற்கு உபயோகமாயுள்ள விஷயங்களையும் சொல்லு கின்றது. ஞானத்தையும் ஈசுவரபக்தியின் அவசி யத்தையும் 'ஸத்'துக்களின் குண விசேஷங்களை யும் இது காட்டுகின்றது. இதில் மிக அழகான வர்ணனைகளும் உள்ளன.

இந்தப் புராணத்தில் பதினாருவது அத்தியாயத் தில் மருதாந்தன் தன் தோஷம் தீர்ந்த பிறகு திரு மாந்துறைக்குக் கிழக்கு திக்கில் ஒரு லிங்கத்தை ஸ்தாபித்துக் கோயில் கட்டி பிராமண கிராமம் ஒன்றையும் ஏற்படுத்தினதாக சொல்லப்பட்டிருக் கின்றது. இந்த கிராமம் திருமாந்துரைக்கு கிழக்கில் ஒரு மைலில் உள்ளது. இதன் பெயர் 'அகம் ஹர' ('அஹ் ஹர') என்றதிலிருந்து மருவி இப்பொழுது 'ஆங்கரை' என்றுள்ளது. இந்த கிராமத்தில் மருதாந்தன் கட்டிய கோவிலின் இறைவன் தற் பொழுதும் அவன் பெயரால் 'மருதாந்தேச்வரர்' என்று அழைக்கப்படுகிருர்.

பக்தர்கள் இந்தப்புராணத்தைப் படித்து பகவத் அனுக்ரஹத்தைப் பெறவேண்டுமென்று ஸ்ரீ பாலாம்பிகாஸமேத ஸ்ரீ ஆம்ரவணேச்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு திருமாந்துறை ஸ்தலத்திற்கருகில் உள்ள நகர் கிராமத்தில் பெருமாள் கோவில் அர்ச்சகராயிருந்த காலஞ் சென்ற ஸ்ரீ திருவேங்கடம் அய்யங்காரால் செய்யப்

பட்டது. இது 1935க்கு முன்னமேயே செய்யப்பட்டு திருமாந்துறை கோயில் கும்பாபிஷேகத்தின் போது இதை வெளியிடுவதற்கு யோசித்து அந்தக் கோயில் மானேஜர்கள், காலஞ்சென்ற ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர், ஸ்ரீ அ. சுந்தரம் அய்யர், இவர்கள் பொதுஜனங்களுக்கு இந்த விஷயமாக ஒரு வேண்டுகோளும் தயாரித்தார்கள். ஆனால் புத்தகம் வெளியிடப்படவில்லை. இந்த மொழி பெயர்ப்பு இது எழுதப்பட்ட நோட்டுப் புத்தகங்களின் உருவிலேயே இருந்தது. இந்த நோட்டுப் புத்தகங்கள் மேலே சொல்லப்பட்ட மானேஜர் காலஞ்சென்ற ஙகர் ஸ்ரீ சுந்தரமய்யர் வீட்டில் இருந்தன. அவைகளை நான் சில வருஷங்களுக்கு முன் அவர் மனைவியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். அது முதல் அதை அச்சிட்டு வெளியிடுவதற்கு ஸ்ரீ ஆம்ரவணேச்வரர் அனுக்ரஹத்தைப் பிரார்த்தித்து, இப்பொழுது அவர் கிருபையால் என் ஆசை நிறைவேறியது.

காலஞ்சென்ற ஸ்ரீ திருவேங்கடம் அய்யங்கார் அவர்கட்கு ஸம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் நல்ல ஞானம் இருப்பதோடு, புராணப்பயிற்சியும், திட ஈசுவர பக்தியும் இருந்திருக்கவேண்டுமென்று மொழி பெயர்ப்பிலிருந்து ஊகிக்கவேண்டியிருக்கிறது. அவர் மொழி பெயர்ப்பு ஸம்ஸ்கிருதத்திலுள்ள புராணத்தின் கருத்துக்கு ஒத்தும், வாசிப்பவர்களுக்கு நற்குணங்களும் ஈசுவர பக்தியும் ஏற்படுவதற்கு அனுகூலமான வகையிலும், அழகான தமிழில் அமைந்திருக்கின்றது. இந்தத் தமிழ்

மொழிபெயர்ப்பை நமக்குத்தந்து, நாம் எல்லோரும் ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ரத்தின் மஹிமையை தெரிந்து கொள்வதற்குக் காரணபூதர்களான காலஞ்சென்ற ஸ்ரீ திருவேங்கடம் அய்யங்காருக்கும், மேலே சொன்ன காலஞ்சென்ற திருமாந்துறைக் கோயில் மானேஜர்களுக்கும் நாம் எல்லோரும் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்ம்யத்திற்கு ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் பரமானுக்ரஹத்துடன் அளித்துள்ள ஸ்ரீமுகம், அதன் தமிழ் மொழி பெயர்ப்பும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஜகத்குரு இருவர் சரணாரவிந்தங்களிலும் நான் நமஸ்கரிக்கிறேன்.

இந்தப் புத்தகத்தை அச்சிடும்பொழுது மொழி பெயர்ப்பையும் அச்சுப் பிரதிகளையும் நன்கு சோதித்து புஸ்தகத்தை முடிந்தவரையில் சுத்தமாக வெளியிடும் பொறுப்பை ஏற்ற ஸ்ரீரங்கம் வேதாந்த வித்வான், வ்யாகரண சிரோமணி பிரம்மஸ்ரீ *K. S.* வெங்கடராம சாஸ்திரி அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன்.

அழகிய முறையில் சீக்கிரமாக அச்சடித்து புத்தகத்தைத் தயாரித்துக் கொடுத்த ஸ்ரீரங்கம் ஸ்ரீ வாணீ விலாஸ அச்சகத்தாருக்கும் என் நன்றி.

இந்த 'ஸ்ரீ ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்மியம்' தமிழ் மொழி பெயர்ப்பை அச்சிட்டு எல்லோரும்

அதைப் படித்து பகவதனுக்ரஹம் பெறவேண்டும் என்ற எண்ணத்தை எனக்குத் தந்து அந்தக் காரியம் நிறைவேறும்படி அனுக்ரஹித்த என் குல தெய்வமான ஸ்ரீ பாலாம்பிகா ஸமேத ஆம்ரவணேச்வரரின் பாதாரவிந்தங்களில் நான் நமஸ்கரிக்கின்றேன்.

ஓம் தத்ஸத் பிரம்மார்ப்பணமஸ்து.

புதுடில்லி,
4—12—72.

ஆங்கரை கந்தசாமி அய்யர் புத்ரன்
கணேசன்.

திருமாந்துறை ஸ்ரீ ஆம்ரவணேச்வரர்

ஸ்ரீ பாலாம்பிகாஸமேத ஆம்ரவணேசாய நம:

ஆம்ரவணக்ஷேத்ர மாஹாத்மியம்

முதலாவது அத்யாயம்

—:O:—

ஹர ஹரேதி ஹரேதி ஹரேதி வா
சிவ சிவேதி சிவேதி சிவேதி வா ।
பவ பவேதி பவேதி பவேதி வா
பஜ மந: சிவமேவ நிரந்தரம் ॥

நைமிசமென்னும் புண்யாரண்யத்தில் எப்பொழுதும் சிவநாம பஜனம் செய்துகொண்டு இனிது வீற்றிருக்கும் ஸூதமுனிவரிடம் சென்று சௌனகாதி மஹரிஷிகள், ஸ்நான ஸந்தியாவந்தனுதி நித்யகர்மாநுஷ்டானங்களை அனுஷ்டித்துவிட்டு, அவரவர்களுக்குத் தகுந்த ஆஸனங்களிலமர்ந்துகொண்டு, மறுபடியும் சிவபெருமானது மஹிமையைக் கேட்கவேண்டும் என்னும் ஆசையுள்ளவர்களாய் அஞ்ஜலிபந்தம் செய்துகொண்டு மிகுந்த வணக்கத்துடன் பிரச்னம் பண்ணினுர்கள்.

'ஹே மஹாத்மன்! வியாஸமஹரிஷியின் முக்ய சிஷ்யராய் விளங்காநின்ற ஸூதமஹரிஷியே! தங்களது முகமாகிற தாமரைப் புஷ்பத்தினின்றும் பெருகுகிற சிவகதைகளாகிற அமிருதத்தை

அருந்திக்கொண்டு இருக்கிற நாங்கள் அல்லவோ கிருதார்த்தர்கள்! நாங்கள் யாவரும் மஹா புண்யவான்கள். ஹே மஹானுபாவா! தங்களால் சொல்லப்பட்ட கங்கை முதலான தீர்த்த மாஹாத்மியம், க்ஷேத்ரமாஹாத்மியம் முதலியவைகளைக் கேட்டும் எங்களுக்கு மேலும் கேட்க வேணுமென்ற ஆசையானது அடிக்கடி எங்களைத் தூண்டுகிறது. ஹே பிரபோ! தாங்கள் பூலோகத்தில் ஸகல ஜீவராசிகளும் உய்யுமாறு அவதரித்திருக்கும் ஸாக்ஷாத் சிவபெருமானே தவிற வேறில்லை. ஆகையால் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

ஹே சூதபுத்ரா! இப்பூமியின்கண் தெற்கு திக்கிலிருக்கின்ற தண்டகாரண்யத்தில் காவேரி நதியின் வடக்கு பாகத்தில் காயத்ரீ என்ற நதி ஒன்று உண்டென்றும் அதன் கரையில் ஆம்ர வணம் (மாந்தோப்பு) ஒன்று உண்டென்றும் அதில் அநாதியாய் ஸ்வயம் வ்யக்தமான சிவலிங்கம் ஒன்று உண்டு என்றும், அதைப் பார்த்த மாத்திரத்தில் சகல பிராணிகளுடைய பாபங்களெல்லாம் நாசமடையுமென்றும் சுருக்கமாக முன்னால் தங்களால் சொல்லப்பட்டதல்லவா.

ஹே மஹர்ஷே! அந்த க்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தை விஸ்தாரமாக எங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். ஹே பிரபோ! முன்னால் சத்யவதீ புத்ரரான வியாஸரிடத்திலிருந்து தங்களுடைய பிதாவானவர் பதினெண் புராணங்

களையும் கற்றுக்கொண்டார் அப்படிப்பட்ட தங்கள் தகப்பனுரிடமிருந்து தங்களாலும் சகல புராணங் களும் கற்றுக்கொள்ளப்பட்டன ஆகையால் தாங்கள் அப்பேர்ப்பட்ட புராணங்களை தங்கள் முகாரவிந்தத்திலிருந்து கேட்க வேண்டுமென்ற ஆசையுள்ளவர்களாய் இருக்கிறோம். தெரிவிக்க வேண்டும்' என்று மிகுந்த வணக்கத்துடன் பிரச்னம் பண்ணின சௌனகாதி மஹரிஷிகளைப் பார்த்து ஸூதரானவர் மிகுந்த ஆனந்தத்தினல் மயிர்க்கூச்செரிந்து ஆம்ரவண நாதரை மனதால் ஸ்மரித்து, மிகுந்த வணக்கமுள்ளவர்களாயும், தபோதனர்களாயுமிருக்கிற நைமிசாரண்ய வாசி களான சௌனகாதி ரிஷிகளைப்பார்த்து சொல்கிருர்.

"ஹே சௌனகாதி முனிவர்களே! அந்த ஸ்தலத்தின் மகிமையை உரைக்க ஆயிரம் நாவைப் படைத்திருக்கிற ஆதிசேஷனலும் முடியாது என்ருல் ரொம்பவும் மந்தனுயிருக்கிற யான் எவ்வாறு சொல்லப்போகிறேன். இருந்தாலும் ஏதோ எனக்குத் தெரிந்தவரை கொஞ்சம் சொல் கிறேன் சாவதானமாகக் கேளுங்கள்.

முன் ஒரு காலத்தில் தபஸ்விகளுக்குள் சிரேஷ்டராயும், மஹாசிவபக்தராயும், பிராம்மண சிரேஷ்டருமான மிருகண்டு மஹரிஷியானவர் இந்த க்ஷேத்ரம் வந்து சிவலிங்கத்தை நியமத் தோடு ஆராதனம் செய்து மார்க்கண்டேயரைப் புதல்வராக அடைந்து மஹாதுர்லபமாயிருக்கிற முக்தியையும் அடைந்தார்.

ஹே மஹர்ஷிகளே! முன் பிரம்மாவானவர் சிவஸந்நிதியில் பொய் சொன்ன தோஷத்தால் சிருஷ்டிபண்ணும் வகையறியாமல் மயங்கிப் பின் இந்த க்ஷேத்ரத்தில் நியமத்தோடு சிவபூஜை செய்து மறுபடியும் முன்போல் லோகத்தை ஸ்ருஷ்டிக்கும் சக்தியைப் பெற்ருர்.

முன் ஒரு காலத்தில் தேவேந்திரனுனவன் மன்மத பாணத்தாலடிபட்டு அஹல்யையைச் சேர்ந்த தோஷத்தால் சரீரம் முழுவதும் யோனி த்வாரமேற்பட மனதில் வியாகூலமடைந்து பக்தியுடன் ஆம்ரவணநாதரை பூஜை செய்ததால் அந்த த்வாரங்கள் நேத்ரங்களாக மாறி ஸந்தோஷமடைந்தான்.

ஹே விப்ரர்களே! கஹோளகனென்ற பிராம்மணனின் புத்திரன் தன் தாயாரைப் புணர்ந்த தோஷத்தால் வியாகூலமடைந்து ஆம்ர வணக்ஷேத்ரம் வந்து ஆம்ரவணேசரை தரிசித்ததால் பாபவிமோசனமடைந்து தன் தாயோடு கூட மோக்ஷமடைந்தான்.

ஒருகாலத்தில் வேதமித்ரன் என்னும் பிராம்மணன் தன் தகப்பனுரின் அஸ்தியை (எலும்பை) எடுத்துக்கொண்டு காசிக்குப் போகவேணுமென்கிற எண்ணத்தோடு புறப்பட்டு ஆம்ர வணத்தின் வழியாக வர ஆம்ரவண லிங்கத்தை தரிசித்தவுடன் அஸ்தியெல்லாம் சுத்த ரத்னமாகப் பிரகாசித்தது.

மேலும் ஸூர்யசந்திரர்கள் இந்த ஆம்ர வணநாதரை பக்தி சிரத்தையுடன் பூஜித்து அவருடைய அனுக்ரஹத்தால் பகல் காலத்திற்கு ஸூரியன் அதிபனுகவும், இரவுக்கு சந்திரன் அதிபனுகவும் ஆனுர்கள்.

ஸூர்யன் பத்னியான ஸம்ஞாதேவி ஸூரிய னுடைய தேஜஸ்ஸை ஸஹிக்கமுடியாமல் குதிரை ரூபம் எடுத்து ஆம்ரவணக்ஷேத்ரம் வந்து லிங்கத்தை ஸந்தோஷமாக ஆராதித்த பலத்தால், குதிரை உருக்கொண்ட ஸூரியனுடன் சேர்ந்து சிறந்த வைத்யநிபுணர்களான அச்வினீ தேவதை களையும் தேஜஸ்ஸை ஸகிக்கும் திறனையும் பெற்ருள்.

முன் ஒரு காலத்தில் ஸமுத்ரராஜன் வார்த் யச்வ மஹரிஷியின் தபஸ்ஸுக்கு விக்னம் செய்ய அதற்கு அவர் கோபித்து ஹே ஸமுத்ரராஜனே! இன்றுமுதல் அபரிசுத்தனுகக்கடவாய் என்று சபிக்க உடனே ஸமுத்ரராஜன் வருத்தமடைந்து ஆம்ரவணம் வந்து மஹத்தான தபஸ் செய்து ஈச்வரானுக்ரஹத்தால் பர்வகால (அமாவாஸை-பௌர்ணமி) ங்களில் பரிசுத்தனுகவும், ஸேதுவில் எப்பொழுதும் சுத்தனுகவும் ஆனுன்.

ஒருகாலத்தில் இந்த க்ஷேத்ரத்தில் பார்வதீ பரமேச்வரர்களிருவரும் மான் ரூபமெடுத்து மான் குட்டிகளை ஸம்ரக்ஷித்தார்கள்.

ஹே சௌனகர்களே! கேளுங்கள். இன்னு மொரு ஆச்சர்யகரமான விஷயம் சொல்கிறேன்.

கேட்கிறவர்களுக்கு ஸகல பாபங்களும் விமோசனம் ஆகும். தெற்கு திக்கில் தண்டகாரண்யத்தில் ஸஹ்யமலையினின்றும் பிரவஹிக்கிற காவேரிநதி யானது நதிகளுக்குள் மஹாச்ரேஷ்டமாயும், ஸகல ஸுராஸுரர்களினுல் பூஜிக்கப்பட்டதாயும், ஸகல ஜனங்களது பாபங்களையும் க்ஷணமாத்திரத்தில் சாம்பலாக்கும்படியான மஹிமையுடையதாயுமிருக்கிறது. அந்த நதிக்கு வடக்கு திக்கில் மங்களகரியான காயத்ரீ என்னும் நதி ஒன்றுண்டு. இந்த காயத்ரீநதியானது பிரும்மாவினுல் தன் யாகம் நிறைவேறும்பொருட்டு ஸ்ருஷ்டிபண்ணப்பட்டது. ஸாதுக்களுடைய மனதைப்போல் களங்கமற்றதாயும், மனோக்ஞமாயுமிருக்கிற அந்தத் தீர்த்தத்தில் தபோதனர்களான பெரியோர்கள், காலத்தில் ஸ்நானம் செய்து நியமமாக அதன் கரையில் உயரக் கைகளைத் தூக்கி அஞ்ஜலிபண்ணிக்கொண்டு ஸூரியனை உபாஸிக்கிருர்கள். அந்தந்த காலங்களில் அக்னிஹோத்ராதிகளைச் செய்யும் பிராம்மணர்களின் கிருஹங்களிலிருந்து வெளிவரும் புகையால் சூழப்பட்டதாயும், சிறந்த புஷ்பம், பழம் இவைகளின் பாரம் தாங்கமுடியாமல் வணங்கிக்கொண்டிருக்கிற புண்யவிருக்ஷங்களினுல் சூழப்பட்டதாயும், புண்ய மிருக, பக்ஷிகளுடன் கூடியதுமான ஓர் க்ஷேத்ரம் இதன் கரையில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ருத்ர ஸந்நிதியில் பொய் சொன்னதால் மிகவும் துக்கமடைந்த பிரும்மாவானவர் இந்த க்ஷேத்ரத்தை அடைந்தவுடன் ஸகல துக்கங்களும் நீங்கி ஆனந்தபரிதரான

படியால் இதற்கு ப்ரும்மானந்தபுரம் என்று ஒரு பெயர் உண்டு.

ஹே ரிஷிகளே! மேலும் இந்த க்ஷேத்ரத்தில் மிகுதியான மாந்தோப்பு அதிகமாயிருப்பதால் ஆம்ரவணமென்று ஒரு திருநாமம் உண்டு. இன்னமும் கஹோளகனுடைய புத்ரனின் மாத்ருகமன தோஷம் விலகியபடியால் இதற்கு அகாபஹாரி என்றொரு திருநாமமும் உண்டு.

இன்னமும் இந்த லிங்கத்தின் ஸமீபத்தில் மான் முதலிய மிருகங்கள் சத்ருபாவமன்னியில் விளையாடிக்கொண்டிருக்கும். மிருகண்டு என்கிற ரிஷியால் ஆராதிக்கப்பட்டபடியால் இந்த லிங்கத்திற்கு மிருகண்டீச்வரர் என்கிற திருநாமம் உண்டு. பிரும்மாவானவர் பூஜித்து ஆனந்தமடைந்தபடியால் ப்ரும்மானந்தேச்வரர் என்றும், இந்த லிங்கமானது கிருதயுகத்தில் சுத்த ரத்னமயமாய் பிரகாசித்தபடியால் சுத்த ரத்னேச்வரர் என்றும், மாவிருக்ஷத்தினடியில் அவதரித்தபடியால் ஆம்ரவணேச்வரர் என்றும் பல திருநாமங்கள் உண்டு.

பிரும்மாவினால் காயத்ரீ என்கிற நதியானது நிர்மாணம் செய்யப்பட்டபடியால் பிரும்மதீர்த்தபுரம் என்றும் இந்த ஸ்தலத்தில் ஈசுவரர் மிருகரூபமாயிருந்தபடியால் மிருகதீர்த்தபுரம் என்றும் ரிஷிகள் சொல்லுகிறார்கள். இந்தப் புண்ய நாமங்களை எவர்கள் நினைக்கிறார்களோ, எவர்கள்

சொல்லுகிறுர்களோ அவர்கள் ஸகல பாபங்களி லிருந்து விடுபட்டு சிவலோகத்தில் எப்பொழுதும் வஸிக்கிறுர்கள்.

லோகத்தில் பிரும்ம தீர்த்தத்தில் ஸ்நானமும் ஆம்ரவணேச தர்சனமும் மிகுதியான தபோபலம் உள்ளவர்களுக்கன்றி ஸாமான்யர்களுக்குக் கிடைப்பது அரிதாகும். எவர்கள் இந்த லிங்கத் தின் சிரஸில் ஒரு பில்வ தளத்தையாவது ஸமர்ப்பித்து பூஜிக்கிறுர்களோ அவர்கள் ஸாக்ஷாத் ஈச்வரனுகவே ஆகிறுர்கள். இது ஸத்யம், கொஞ்சமேனும் ஸந்தேஹமில்லை.

எந்தப் புருஷன் இந்த ஆம்ரவணேச்வரரை பூஜித்து ஒரு பிராம்மணனுக்கு ஒரு கபளமாவது அன்னம் கொடுக்கிறுனே அவனுக்குக் கேதார க்ஷேத்ரத்தில் பதினுயிரம் பேருக்கும் கயா க்ஷேத்ரத் தில் பதினுயிரம் பேருக்கும் தயிர், நெய், பால் பாயஸம் முதலிய பக்ஷ்ய போஜ்யங்களோடு அன்னம் போட்டால் எந்தப் பலனே அந்தப்பலன் கிடைக்கிறது. ஹே ரிஷிகளே! இந்த ஈச்வரனுக்கு உத்ஸவம் நடக்கிறபோது ஒரு கபளம் அன்னம் கொடுத்தானேயாகில் அவனது புண்யத்தைத இவ்வளவுதானென்று சொல்லமுடியாது. இந்த ஸ்தலத்தில் நந்தவனம், தடாகம், உத்யான வனம் முதலிய ஸத்கார்யங்களை எவர்கள் செய் வார்களோ, அவர்கள் தேவராஜனுடைய உத்யான வனத்தில் எப்பொழுதும் வஸித்துக்கொண்டிருப் பார்கள். இந்த ஸ்தலத்தை எவர்கள் புஷ்ப

சந்தனம், மாவிலைத்தோரணங்களால் அலங்கரிக்கிருர்களோ, அவர்கள் ஸ்வர்க்கலோகத்தில் இருக்கிற தேவகங்கைக் கரையில் எப்பொழுதும் அப்ஸரஸ்திரீகளோடுகூட ஸுகமனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

முதல் அத்யாயம் முற்றும்.

இரண்டாவது அத்யாயம்

—:O:—

இவ்வாறு ஸூதர் சொன்னதைக்கேட்டு சௌனகாதி ரிஷிகள் ஆனந்தமடைந்து மறுபடியும் கேட்டார்கள்.

'ஹே மஹாநுபாவா! முன் ஒரு காலத்தில் இந்த க்ஷேத்ரத்தில் மிருகண்டுவானவர் தபஸ் செய்ததாகச் சொன்னீர்களல்லவா. அந்த ரிஷியானவர் எக்காரணத்திற்காக தபஸ் செய்தார்? அதன் விபரத்தை எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேணும்' என்று கேட்ட ரிஷிகளைப்பார்த்து ஸூதர் தெரிவிக்கிருர்.

"ஹே ரிஷிகளே! ஸத்யசந்தராயும், ஜிதேந்திரியராயும், அஹங்காரமில்லாதவராயும், சகல ஜீவ ராசிகளையும் தன்னைப்போல் பார்க்கிறவராயும், பரம தயாளுவாயும், நிர்மலமான சித்தமுள்ளவராயும், தோஷமற்றவராயும் உள்ள மிருகண்டு என்ற பிராம்மணோத்தமருக்கு வெகு நாட்களாகியும், புத்ரனில்லாமல் இருந்தபடியால் மிக்க துயரமடைந்து

நாம் தபஸ் செய்து வம்சவிருத்திகரனுயுள்ள ஒரு புத்ரனை அடையவேண்டுமென்று கருதி எந்த க்ஷேத்ரத்தில் தவம் செய்தால் சீக்கிரம் நமது எண்ணம் பலிக்குமென்று ஆலோசித்து ஒவ்வொரு க்ஷேத்திரத்தையும் தரிசித்துவரும் காலத்தில் கோடி சூர்ய பிரகாசம் உள்ள த்ரிலோக சஞ்சாரி யான நாரதரை வழியில் பார்த்து சந்தோஷ மடைந்து ஆசனமளித்து அர்க்யபாத்யாசமனுதி களால் அவரை உபசரித்து தன் அபிலாஷை நிறை வேறும் பொருட்டு கேட்டார்.

'ஹே நாரத மஹர்ஷியே! உலகிற்கு நன்மை யைச் செய்பவரே! உங்களுக்கு இவ்வுலகில் தெரியாததொன்றுமில்லை. ஹே மஹானுபாவா! வெகுகாலமாகப் புத்திரன் இல்லாதவனுய் துக்க மடைந்துகொண்டிருக்கிறேன். அத்யயனம் செய் யாத பிராம்மணன்போலும், அதிதிஸத்காரம் செய்யாத கிருஹஸ்தன்போலவும், தானத்திற்கு யோக்யமில்லாத தனம்போலும், நான் சோபை இல்லாதவனுயிருக்கிறேன். ஐயனே! சந்திரன் இல்லாத இரவுபோலும், தாமரைப் புஷ்பமில்லாத நீரோடைபோலவும், சிறகுகளில்லாத பக்ஷிபோல வும் நான் ஸந்தோஷமில்லாதவனுக இருக்கிறேன். ஏ பிரபுவே! வாஸனையில்லாத புஷ்பம்போல வும், பூததயை இல்லாத தபஸ்போலவும், குணம் இல்லாத பத்னியைப்போலவும், நற்குணமில்லாத வித்வானைப்போலவும், வித்வான்களில்லாத ஸபை யைப்போலவும், அரசனில்லாத ராஜ்யம்போல வும், லக்ஷ்மியில்லாத கிருஹம்போலவும், நீர்

இல்லாத நதியைப்போலவும், பக்தியில்லாத மனம் போலவும், அங்கஹீனமான ரிஷபத்தைப்போல வும், தைர்யமில்லாத முயற்சியைப்போலவும், துதிக்கையில்லாத யானையைப்போலவும் நான் ஸந்தோஷமில்லாத மனதை உடையவனாக இருக்கிறேன்.

ஹே தேவரிஷியே! அடியேனிடத்தில் பரம க்ருபை செய்து நற்குணமுள்ள புத்ரனையடை வதற்கும், கடைசியில் மோக்ஷானந்தம் பெறு வதற்கும் தபஸ் செய்வதற்கு ஏகாந்தமாயுள்ள ஓர் ஸ்தலத்தை அடியேனுக்குச் சொல்லவேண்டும்' என்று பன்முறை வணங்கிக் கேட்கும் மிருகண்டு மஹர்ஷியைப் பார்த்து ஸகலத்தையும் ஞான திருஷ்டியினால் அறிய வல்லமையுள்ளவரான நாரத மஹாமுனிவர் புன்னகைசெய்துகொண்டு சொல்கிறார்.

'ஹே மிருகண்டு முனிவரே! உம்மால் சொல்லப் பட்ட யாவும் ஸத்யமே; ஸந்தேஹமில்லை. புத் என்ற நரகத்தினின்றும் பிதாவைக் காப்பாற்று கின்றபடியால் புத்திரன் என்று மஹரிஷிகளால் சொல்லப்படுகிறான். உலகில் புருஷனானவன் பிறக்கும்பொழுதே தேவதைகள், ரிஷிகள், பித்ருக்கள் ஆகிய மூவருக்கும் கடன்காரனாகப் பிறக்கிறான். யாகத்தினால் தேவதைகளையும் வேதம் ஓதுவதினாலும், தபஸ் செய்வதினாலும், ரிஷிகளை யும், புத்ரோத்பாதனத்தினால் பித்ருக்களையும் திருப்திசெய்வித்து கடனை நீக்கியபிறகே மோக்ஷம் அடைவதில் மனதைச் செலுத்தவேண்டுமென்று

பெரியோர்களால் சொல்லப்படுகிறது. மேலும் அக்னிஹோத்ரம், வேதாத்யயனம், பூர்ண தக்ஷிணை யுடன் யாகம் செய்வது இம்மூன்றும் சேர்ந்தாலும் கூட புத்ரோத்பத்தியினுல் உண்டாகும் புண்யத் தின் பதினுறில் ஒரு பங்குக்குக்கூட இணையாகாது. மேலும் புத்ரனில்லாத கிருஹம் சூன்யம் என்று சொல்லப்படும். புத்ரனில்லாத ஸம்பாத்யமும் தேவதைகளுக்குரியதாகாது. புத்ரனில்லாதவ னுடைய வம்சம் நாசமடைகிறபடியால் புத்ரன் இல்லாதவன் பரிசுத்தியற்றவனுவான். ஆகையால் புத்திமான்களால் எந்தப் பிரகாரத்தினுலாவது புத்திரன் உண்டாகும் நிமித்தம் முயற்சி செய்யத் தக்கது.

ஹே மகாமுனியே! புத்திர நிமித்தமாக முயற்சி செய்கிற உமக்கு சீக்கிரத்தில் உமது அபீஷ்டத்தை செய்கிறதான ஓர் புண்ய க்ஷேத்ரத்தைச் சொல் கிறேன். லோகத்தில் கங்கை, யமுனை, கிருஷ்ணு, துங்கபத்ரை, கோதாவரி, சரயூ முதலான நதிகள் பதிவ்ரதையானவள் தன் நாயகனை எவ்வாறு அடை கிருளோ அவ்வாறே சமுத்ரத்தை அடைகிருர்கள்.

அப்படி இருந்தபோதிலும் தெற்கு திக்கில் வாசம் செய்கிற ஜனங்களின் பாக்யவசத்தினுல் பிரவஹிக்கிறதாயும், ஸஹ்ய பர்வதத்தினின்றும் உற்பத்தியானதாயும் புண்ய தீர்த்தத்தை உடையதுமான காவேரி நதி, பார்த்த மாத்திரத்தில் சகல பாபத்தையும் நிவர்த்தி செய்கிறது. இரு கரைகளிலும் பயிர்களினுல் அலங்கரிக்கப்பட்ட

தாயும், தொடர்ந்து பல புண்ய க்ஷேத்ரங்களினுல் அலங்கரிக்கப்பட்ட இரு கரைகளையுடையதாயும், மா, கமுகு, பலா, தென்னை இவைகளினுல் அலங்கரிக்கப்பட்டதாயும், உள்ள காவேரி, தான் ஒன்ருக இருந்தாலும் அனேகப் பிரிவுகளாகப் பிரிந்து சோழமண்டலத்தைச் செழிப்பிக்கின்றது.

இக்காவேரி தீரத்தில் பிறந்தவர்களான ஸகல ஜனங்களும் புண்யத்தையே செய்கிறவர்களாக இருக்கிருர்கள். காவேரி தீரத்தில் பிறந்த பக்ஷி களும் அத்தீர்த்தத்தை பருகுவதினுல் சாத்விக குணமுள்ளவைகளாக இருக்கின்றன. அந்நதியில் பிராம்மணுேத்தமர்கள் அக்னி ஹோத்ராதிகளைச் செய்துகொண்டும், வேதாத்யயனம் செய்து கொண்டும், முக்கண்ணராயும், நாசமில்லாதவராயு மிருக்கிற சாம்பசிவ மூர்த்தியை பக்தியுடன் ஸதா பூஜித்துக்கொண்டும், தியானித்துக் கொண்டும், அவருடைய கதைகளைப் படித்தும், கேட்டும் பிரும்மானந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக் கிருர்கள். மேலும் அந்த இடத்தில் வசிக்கும் பிராம்மணுேத்தமர்கள் வ்ருதா காலக்ஷேபம் செய்வ தில்லை. வீண் வார்த்தை பேசுவதுமில்லை. காவேரி நதிக்கரையில் உண்டாயிருக்கிற பசு, பக்ஷி, மிருகாதிகள்கூட, அந்நதி ஜலக்காற்று அவைகள் மேல் வீசுவதினுலேயே மோக்ஷத்தை அடை கின்றன என்ருல் ஸ்நானபானம் செய்யும் மானிடர் கள் அடையும் புண்யத்தை எவ்வாறு சொல்ல முடியும்?

ஹே மிருகண்டோ! அந்நதியின் வடகரையி லிருக்கிற திருவானைக்காவுக்கு (ஜம்பூ க்ஷேத்ரம்) கிழக்கு திக்கில் கொஞ்சம் ஈசான பாகத்தில் ஆம்ர வணக்ஷேத்திரம் என்ற ஒரு பெரிய க்ஷேத்திர மிருக்கிறது. அந்த க்ஷேத்திரத்தில் புண்ய தீர்த்த முள்ள காயத்ரீ என்னும் நதி பிரவஹிக்கிறது. இந்த நதியானது முன்காலத்தில் பிரும்மாவினுல் தான் யாகம் செய்வதற்காக தேவலோகத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. அந்த காயத்ரீ என்கிற நதியில் ஸ்நானம் செய்து ஆம்ரவணேசரைத் தரிசித்த மாத்திரத்தில் சகல பாபங்களிலிருந்தும் மனுஷ்யன் விடுபடுகிருன். நீண்ட ஆயுளையும் அடைகிருன். அதில் கொஞ்சம்கூட சந்தேக மில்லை. ஹே மிருகண்டோ! பிரும்மாவிற்கு பரமானந்தத்தை உண்டுபண்ணினபடியால் பிரும்மானந்தபுரம் என்று சொல்லப்படும் அந்த க்ஷேத்ரமானது சித்த சாரணர்களினுல் சேவிக்கப் படுகிறது.

ஹே மிருகண்டோ! தன்னை ஆச்ரயித்த பக்தர் களுக்கு போகம், மோக்ஷம் இரண்டையும் அளிக்கும்படியான சுத்தரத்னேச்வரரென்று திரு நாமமுள்ள அழகிய லிங்கமொன்று இருக்கிறது. அந்த இடத்தில் தபஸ் செய்ய நினைத்தமாத்திரத் திலேயே அவனுடைய அபீஷ்டங்கள் நிறைவேறு கின்றன. ஹே மிருகண்டோ! ஆகையால் அவ்விடத் தில் வாஸம் செய்துகொண்டு மனதில் சம்புவைத் தியானம் செய்வாயாகில் உனது அபீஷ்டம் அதி சீக்கிரம் நிறைவேறும். ஆகையால் நீ சீக்கிரம்

காவேரிதீரத்திலிருக்கிற ஆம்ரவணக்ஷேத்ரம்சென்று சுத்தரத்னேச்வரரை மனதில் தியானித்து தபஸ் செய்வாயாக.

ஹே மிருகண்டு முனீச்வரரே! அந்த க்ஷேத்திரத்தில் ஸாதுக்கள் எல்லா விஷய சுகங்களிலும் நிராசையுள்ளவர்களாய் காமக்ரோதாதிகளை ஜெயித்து ஜிதேந்த்ரியர்களாய் சூதவனேசரைத் தியானித்துக்கொண்டு அனேகவிதமாக சதா காலமும் தபஸ் செய்துகொண்டிருக்கிறார்கள். இவர்கள் முடிவில் உத்தமமான புண்யலோகத்தை அடைகிறார்கள்.

இவ்விதமாக நல்லகுணம் நிறைந்தவராயும், தேவலோகத்திலிருந்து வந்தவருமான நாரதர், புதல்வனையடைய தபஸ் செய்யவேண்டுமென்ற எண்ணமுள்ளவராயிருக்கிற மிருகண்டு மகரிஷிக்கு நிர்மலமான அந்த க்ஷேத்திரத்தின் மகிமையை உபதேசித்தார்.

இரண்டாம் அத்தியாயம் முற்றும்

மூன்றும் அத்யாயம்

சௌனகாதி மஹரிஷிகளே! இவ்வாறு நாரதரானவர் ஆம்ரவண க்ஷேத்ரத்தின் மகிமையை உபதேசித்ததும் இதைக்கேட்டு மிருகண்டு முனிவர் கூறுகிறார் :—

"லோகத்தில் ஸாதுக்கள் என்பவர்கள் யார்? அவர்கள் என்ன காரியம் செய்துகொண்டிருப்பார்கள்? இவைகளை அடியேனுக்கு விஸ்தாரமாக உபதேசிக்கவேணும்".

இதைக்கேட்டு நாரதர் சொல்கிறார் :—

"எப்பொழுதும் ஸத்வகுணம் நிறைந்தவர்களே ஸாதுக்கள் என்று சொல்லப்படுகிறார்கள். இருள் சூரியனிடம் நெருங்காததுபோல இவர்களிடம் தமோகுணம் ஒருக்காலும் நெருங்காது. ஸம்மானத்தால் ஸந்தோஷத்தையோ அவமானத்தால் தாபத்தையோ அடையாமல் கங்கையின் ஆழமுள்ள மடுபோல் கலங்காமலிருப்பார்கள். தன்னைப்போல் ஸகல பிராணிகளையும் பார்ப்பார்கள். எப்பொழுதும் பரோபகார சிந்தையுடையவர்களாயும், பிறரது துக்கத்தை சகிக்காதவர்களாயும், பரநிந்தை செய்யாதவர்களாயும், அசூயை இல்லாதவர்களாயும், ஆசையை ஒழித்தவர்களாயும், சத்ரு, மித்ரன் என்ற பேதமில்லாதவர்களாயும் பொறுமையுள்ளவர்களாயுமிருப்பார்கள்.

மேலும் தங்கள் தங்கள் வர்ணுச்ரமங்களுக்குரிய கர்மானுஷ்டானங்களைச் செய்கிறவர்களாயும், அதிதி ஸத்காரம் செய்கிறவர்களாயும், மனோ வாக்கு காயங்களினுல் பிறருக்கு துக்கம் உண்டு பண்ணுமலும் நியாய மார்க்கத்தைச் சொல்லியும், தர்ம மார்க்கத்தையே அனுஷ்டானம் பண்ணிக் கொண்டும் தாய், தந்தை, குரு இவர்களுக்கு சுச்ரூஷை செய்துகொண்டும், இதிஹாஸ புராணுதிகளை பாராயணம் பண்ணிக்கொண்டும், அதன் அர்த்தத்தைக் கேட்டும், சொல்லிக்கொண்டும், கிடைத்தமட்டில் திருப்தியடைந்தும், பிறர் சொத்தில் இச்சையின்றியும் ஸாதுக்கள் இருப்பார்கள்.

ஹே மிருகண்டோ! மேலும் ஸாதுக்கள் பரஸ்திரீகளைப் பார்க்கவும் மாட்டார்கள். மனதிலுைம் ஸ்மரிக்கமாட்டார்கள். எல்லோருக்கும் அனுகூலம் செய்துகொண்டும், பரலோக சாதகமான ஸத்கர்மானுஷ்டானம் செய்துகொண்டும், ஸ்திர புத்தியுள்ளவர்களாயும், ஆபத்துக் காலத்திலும் சஞ்சல மற்றவர்களாயுமிருப்பார்கள்.

உலகில் பிராம்மணர்களுக்கு ஸ்மிருதியில் நாற்பது ஸம்ஸ்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பாகயக்ஞமென்றும், ஹவிர் யக்ஞமென்றும், சோமயக்ஞமென்றும், பெரியோர்கள் சொல்லுகிருர்கள். அதில் ஜாதகர்மாதி கிரியைகள் பாகயக்ஞமென்றும், அக்னிஷ்டோமம் முதலிய கிரியைகள் சோமயக்ஞமென்றும், அக்னிஹோத்ரம் முதலியவைகள் ஹவிர்யக்ஞமென்றும் சொல்லு

கிருர்கள். நிஷேகம் முதல் ச்மசானம் (ஜீவோத் க்ரமணம்) வரையுள்ள நாற்பது ஸம்ஸ்காரங்களையும் வேதார்த்தம் அறிந்த ஸாதுக்கள் உரிய காலங் களில் அனுஷ்டிப்பார்கள். சகல ஜீவராசிகளிடத் திலும் அன்புள்ளவர்களாக இருப்பார்கள். ஒரு பொழுதும் கபடத்தைச் செய்யமாட்டார்கள். அஹங்கார மமகாரமில்லாதவர்களாயும் சுக துக்க மற்றவர்களாயுமிருப்பார்கள்.

மேலும் சாதுக்கள் ஈசுவர பூஜையில்லாமல் சாப்பிடமாட்டார்கள். தீர்த்த பானம்கூட பண்ண மாட்டார்கள். எந்த புருஷனுனவன் சிவலிங்கார்ச் சனமில்லாமல் புஜிக்கிருனே, அவன் அமேத்ய கிருமியாய் பிறந்து கேவலம் மலமாம்சாதிகளை புசித்துக்கொண்டிருப்பான். எவர்கள் ஈசுவரனை சதருத்ரீய மந்திரங்களால் பக்தியுடன் ஆராதிக் கிருர்களோ அவர்கள் கோடிக்கணக்கான பாபங் களினின்றும் விடுபட்டு இப்பூவுலகில் அனேக சுக போகங்களையனுபவித்து முடிவில் சிவலோகம்போய் பிரும்மானந்த சுகம் அனுபவித்துக்கொண்டிருப் பார்கள். ஹே மிருகண்டோ! சிவார்ச்சனத்திற்கு சமானமான புண்ய கர்மா வேறெதுவும் கிடையாது. ஒரு தடவை சிவனை நமஸ்கரித்தாலும், ஒரு க்ஷண காலம் அர்ச்சித்தாலும் இதற்கு அனேகமாயிரம் யாகங்களும், அனேகமான கிருச்சிரசாந்திராயணுதி விரதங்களும் இணையாகமாட்டாது.

எந்தப் புருஷனுனவன் பிரணவத்தோடு கூடிய சிவபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு ரிஷப

ராஜாவான நந்திகேச்வரருடைய வ்ருஷணத்தை இரண்டு கரங்களினுலும் ஸ்பர்சித்துக்கொண்டு இரண்டு கொம்புகளின் நடுவழியாக சிவலிங்க மூர்த்தியைத் தரிசிக்கிருனே அவன் ஸகல பாபங் களினின்றும் விடுபட்டு ஜீவன் முக்தனுகிருன். எவனெருவன் பிராதக் காலத்தில் சிவதர்சனம் பண்ணுகிருனே, அவன் ஸகல பாபங்களினின்றும் விடுபட்டு ஸ்வர்க்க லோகத்தை அடைகிருன். எவன் மத்யான்னத்தில் தரிசிக்கிருனே அவன் அச்வமேத யாகம் செய்த பலனையும், சாயங்காலத் தில் தரிசிக்கிறவன் புண்ணிய புருஷனுகவும், பிரதோஷ காலத்தில் தரிசிக்கிறவன் இம்மூன்று காலத்திலும் தர்சித்த பலனையும் அடைவதோடு கூட சிவலோகத்தையுமடைகிருன்.

ஹே மிருகண்டு ரிஷியே! சாதுக்கள் எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் என்னுல் சொல்லப்பட்ட இந்த சிவ தரிசன பூஜைகளினின்றும் நழுவ மாட்டார்கள். சாம்பசிவ மூர்த்திக்கு மேற்பட்ட தாகவோ, ஸமமாகவோ உள்ள தெய்வமானது எங்கும் கிடையாது. ஆகையால் எவர்கள் ஈசுவர னிடம் பக்தியுள்ளவர்களோ, ஈசுவர பக்தர்களிடத் திலும் பரம ப்ரேமையோடு கூடியிருக்கிருர்களோ அவர்களுடைய ஜன்மாதான் ஸபலமானது.

ஹே மிருகண்டு ரிஷியே! லோகத்தில் பிரதி தினம் ஸ்நானம் ஸந்த்யாவந்தனம், ஒளபாஸனம் ஜபம், தேவபூஜை, அதிதிஸத்காரம், வைச்வதேவம் ஆகிய இந்த ஆறு கர்மாக்களையும் பிராமணர்கள்

அவச்யம் செய்யவேண்டியது. வைச்வதேவம் செய்து முடிந்ததும் எவன் அன்னார்த்தியாய் தன் வீட்டுக்கு வருகின்றானோ, அவன் தனக்கு நண்பனாயிருந்தாலும், சத்ருவாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும், பண்டிதனாயிருந்தாலும் அவனை விசேஷமாய் பூஜிக்கவேண்டியது. அவன்தான் அதிதி என்னப்படுவன். இப்பேர்ப்பட்ட அதிதி ஸத்காரம் பண்ணாமல் அனேகமாயிரம் நெய் குடங்களினாலும் அனேகம் ஸமித்துக்களினாலும், அநவரதம் ஹோமம் செய்தாலும், அவ்வளவும் வியர்த்தமே யொழிய பிரயோஜனப்பட மாட்டாது. இவ்விதமான சுருதி ஸ்மிருதிகளின் அபிப்பிராயங்களை நன்கு தெரிந்து ஸாதுக்கள் அதிதிகளை ஒருநாளாவது பூஜிக்காமல் இருக்கமாட்டார்கள்.

ஹே மிருகண்டு ரிஷியே! உத்தராயணம், தக்ஷிணாயனம், வ்யதீபாதம், விஷு, புரட்டாசி மாஸ கிருஷ்ணபக்ஷம், சந்திர சூர்ய கிரஹணங்கள், அமாவாஸ்யை, மாகமாஸத்தில் அஷ்டகை இது முதலிய புண்ய காலங்களில் பரம பக்தியுள்ளவர்களாய் பித்ருக்களை உத்தேசித்து சிராத்தம், தர்ப்பணம் முதலியவைகளைச் செய்வார்கள்.

இவ்விதம் ஸாதுக்கள் ஸத்கர்மானுஷ்டானம் செய்து ஸகல பாபங்களும் நீங்கியவர்களாய் புண்ய காலங்களில் தீர்த்த யாத்திரை முதலியவைகளும் செய்வார்கள். இன்னும் பணக்காரர்களான ஸாதுக்கள் கோடைகாலத்தில் ஜனங்கள் நடக்கும்படியான பாதைகளில் குளுமையான நிழலைத் தரக்கூடிய

மரங்களைப் பயிர்செய்து வளர்ப்பது, தெப்பக்குளம் வெட்டுவது, ஆங்காங்கு ஜனங்கள் தங்குவதற்கு புஷ்ப சோலைகள் ஏற்படுத்துவது, ஜனங்கள் தாக விடாய் தணிப்பதற்கு தீர்த்தசாலைகள் வைப்பது, தேவாலயங்கள் மடங்கள் கட்டுவது முதலான பரோபகாரமான புண்யங்களையும் செய்வார்கள். இன்னும் விபவமிருக்கும் விஷயத்தில் பிரதிதினமும் மஹாதானங்களையும் செய்வார்கள்.

ஆகையால் ''ஹே மிருகண்டோ! மனிதர்களுக்கு ஆயுளும் ஐசுவர்யமும் மின்னலைப்போல் இப்பவோ நாளையோவென்று நிலையில்லாமல் இருக்கிறபடியால் எப்பொழுதும் ஸத்கர்மாநுஷ்டானங்கள் செய்து விரத சீலர்களாய் ஈசுவரனை உபாசித்து மோக்ஷானந்தத்தை அடைகிறார்கள்''. இவ்வாறு நாரதர் மிருகண்டு மகரிஷிக்கு ஸாதுக்களின் லக்ஷணத்தையும் அஷ்டாங்கயோகங்களையும் உபதேசித்து தன் இருப்பிடமான தேவலோகத்தை அடைந்தார்.

மூன்றாவது அத்யாயம் முற்றும்

நான்காவது அத்யாயம்

—:O:—

சௌனகாதி மகரிஷிகளே! இவ்விதமாக மிருகண்டுவிற்கு உபதேசித்து மஹதீ என்கிற வீணையைக் கையில் பிடித்துக்கொண்டு சிவபக்த சிகாமணியான நாரதர் தேவலோகம் சென்றபிறகு மிருகண்டு மஹரிஷியானவர், ரிஷிகள் தேவதைகள் இவர்களால் சேவிக்கப்படுகிறதாயும் ஆச்சர்யகரமாயிருக்கிற மணல்களோடு கூடினதுமான காவேரி தீரம் சென்று அதன் வடபாகத்திலுள்ள காயத்ரீ நதியின் வடகரையில் நல்ல புஷ்பபலங்களோடு கூடின சிறந்த விருக்ஷங்கள் அடர்ந்ததும் வண்டுகளின் ரீங்கார சப்தம், பக்ஷிக்கூட்டங்களுடைய சப்தம், மயில் கூட்டங்களின் நடனம் இவற்ருல் சிறப்புற்றதும் சமரிமான் முதலிய மிருகங்களினுல் சூழப்பட்டதும், கிரௌஞ்சம் ஹம்ஸம், சக்ரவாகம், மீன், முதலே, ஆமை இவைகளுடன் கூடிய பல தடாகங்களுள்ளதும், தாமரை, மல்லிகை முல்லே இவைகளின் வாஸனேயுடன் கூடியதுமான ஆம்ரவணத்தில் ஸ்வயம் வ்யக்தமாயும் ஆதியில்லாததாயும் சுத்தரத்னேச்வரரென்ற பெயரோடு கூடியதுமான லிங்கத்தை மிருகண்டுவானவர் பார்த்தார்.

அனேகம் தபஸ்விகள் ஞான யக்ஞங்களினுல் இந்த லிங்கத்தை பூஜிக்கிருர்கள். கர்மடர்களான பிராம்மணேத்தமர்கள் அக்னிஷ்டோமம் முதலான யாகங்களினுல் உபாஸிக்கிருர்கள். இந்த லிங்கத்

தின் ஸான்னித்தியத்தால் இந்த க்ஷேத்ரமானது அதிபரிசுத்தமாய் விளங்குகிறது. மேலும், இந்த க்ஷேத்ரத்தில் அணுவளவு தர்மம் செய்யப்பட்ட போதிலும் ஆலம் வித்தைப்போல் விருத்தியடைகிறது.

மிருகண்டு முனிவர் இந்த சுத்தரத்னேச்வர லிங்கத்தை நியமவிரதாதிகளினுல் பூஜித்து பிராணுயாமத்தினுல் சுவாசத்தையடக்கி, இந்திரியங்களை அதன் வழியே போகவொட்டாமல் தடுத்து, சித்தத்தை சஞ்சலமில்லாமல் அடக்கி, தன் கால் பெருவிரலை பூமியின்கண் ஊன்றி மிகவும் கடுமையான தவம் செய்ய ஆரம்பித்தார். இவ்விதமாக மிருகண்டு முனிவர் ஜடை மரவுரி தரித்துக் கொண்டும் மனதில் நாகாபரணராயும் சந்திரசேகரராயும் இருக்கிற சாம்பசிவ மூர்த்தியை தியானித்து ஆஹாரமில்லாதவராயும் கோடைகாலத்தில் பஞ்சாக்னி மத்தியிலும், பனிகாலத்தில் கழுத்தளவு ஜலத்திலுமிருந்துகொண்டு தீவ்ரமான தவத்தைச் செய்தார். சிறிதுகாலத்தில் ததேக தியானபரராய் அசைவற்ற மரம்போலாகிவிட்டார்.

இவ்விதம் நிச்சலராய் தவம் செய்யும்படியான மிருகண்டு ரிஷியைப்பார்த்து தேவேந்திரன் முதலிய தேவதைகள் யாவரும் நடுநடுங்கி மிகுதியான வருத்தத்தையடைந்து 'ஐயோ, இந்த மிருகண்டு ரிஷியானவர் கடுமையான தபஸ்ஸை செய்கிருரே, நம்முடைய ஸ்தானத்தை அடைந்துவிடுவாரோ' என்ற எண்ணத்தால் தவத்திற்கு

இடையூறு செய்கின்ற அனேகம் ராக்ஷஸர்களை அனுப்பினார்கள். அவர்கள் அதிசீக்கிரத்தில் ஆயுத பாணிகளாயும் பயங்கரமான சரீரத்தோடு கூடின வர்களாயும், மிருகண்டு தவம் செய்யுமிடம் சென்று வாயைப் பிளந்துகொண்டு அவரைச் சுற்றி நின்று பயமுறுத்தினார்கள். நெருப்பைப்போல் பிர காசிக்கிற அஸ்திரங்களை அவர்மேல் எறிந்தார்கள். இவர்கள் எய்த அஸ்த்ரங்களில் ஒன்றுவது அவரிடம் அணுகவில்லை. அவர் ஈச்வர தியான பரராய் இருந்தபடியால் ஒன்றையும் அறியாதவரா யிருந்தார்.

இவ்விதம் தேவராஜனால் அனுப்பப்பட்ட அரக் கர்கள் பயனற்றவர்களாயிருக்க, தேவேந்திரன் அரக்கர்களை போகச்சொல்லி மன்மதனைக்கூப்பிட்டு "ஹே மன்மதா! நீ அனேகமாயிரம் அப்ஸரஸ் களோடு பூவுலகம் சென்று மிருகண்டுவின் தவத் திற்கு விக்னம் செய்துவரக்கடவாய்" என்று ஆக்ஞாபிக்க, மன்மதன் தேவேந்திரன் ஆக்ஞை யை சிரமேற்கொண்டு மிருகண்டு மகரிஷி தவம் செய்யுமிடம் வந்து செங்கரும்புவில்லை வளைத்து, நாணேற்றி அரவிந்தம் முதலான பஞ்சபாணங் களையும் மிருகண்டு ரிஷியின்மேல் வர்ஷித்தான்.

இவ்வாறு மலரம்புகளை வர்ஷித்தவுடன் தென்றல் காற்று வீசவும் குயில்கள் இனிமையாகக் கூவவும், ஆங்காங்கு மனதைக் கவரும்படியான வாசனை வீசவும் இவரைச் சுற்றி நான்கு பக்கங் களிலும் மிக்க செளந்தர்யமுள்ள ரம்பை, ஊர்வசி,

திலோத்தமை முதலான தேவ ஸ்திரீகள் திவ்ய மான வீணையெடுத்து மனோக்ஞமாகக் கானம் பண்ணவும் ஸர்வாபரண பூஷிதைகளாய் செவ்விள நீர் குலைக்குச் சமானமான கொங்கையையுடையவர் களாயும், தாமரை மலருக்கு நிகரான முகமுள்ளவர் களாயும், முத்துக்கள்போன்ற பல் வரிசையுடைய வர்களாயும், அன்னத்தை பழித்த நடையுள்ளவர் களாயும் மின்னலொத்த இடையுள்ளவர்களாயு மிருக்கிற அந்த ஸ்திரீகள் புனுகு, ஜவ்வாது, அத்தர், பன்னீர் முதலிய வாசனைத் திரவியங்களால் கலக்கப் பட்ட சந்தனங்களை பூசிக்கொண்டு ஸ்தனபாரங்கள் கொஞ்சம் தெரிந்தும் தெரியாமலும் துகிலை நீக்கி திவ்யகானம் பண்ணிக்கொண்டு எதிரிலும் பின் பக்கத்திலுமிருந்துகொண்டு மிருகண்டு மஹரிஷியி னுடைய சஞ்சலமற்ற மனதையும் கொஞ்சம் சலன மடையும்படி செய்துவிட்டார்கள்.

இவ்வாறு மன்மத பாணத்தினுல் கொஞ்சம் மனம் சலனமடைந்ததும் மிருகண்டுவானவர் சரே லென்று தியானத்தைவிட்டு எழுந்து என்ன காரண மென்று சுற்றுமுற்றும் பார்க்க மன்மதன், வசந்தன் அப்ஸரஸ்திரீகள் முதலானோர்களைப்பார்த்து ஓகோ! தேவர்களல்லவோ இவ்விதம் ஏற்பாடு செய்திருக் கிருர்களென்று இரு கண்களும் சிவந்து நெருப்புப் பொறி பறக்க 'ஏ காமனே! நீ இந்திரனுடைய ஏவலால் என் பேரில் உன்பாணங்களை பிரயோகித்த படியால் நீ வேடனுகப் பிறக்கக்கடவாய்' என்று சபித்ததுடன் இந்திரனெவன் புண்யபுருஷனு யிருந்தும் புண்ய காரியத்திற்கு இடையூறு செய்யத்

தூண்டினனல்லவா ஆகையால் அவனுடைய சரீரமானது விகாரத்தை அடையக்கடவது என்று சபித்து பிறகு கோபத்தைவிட்டு சாந்தமடைந்து கருணையுடன் விகாரத்தையடைந்த தேவேந்திரன் இந்த க்ஷேத்ரம் வந்து ஆம்ரவணேசரை பூஜித்தானேயாகில் நான் கொடுத்த சாபம் விமோசனமாகும் என்று சொல்ல, உடனே மன்மதன் இனி இருந்தால் அபாயம் வருமென்று ஓடிவிட்டான். அப்ஸரஸ்திரீகளும் அதிசீக்ரமாய் பயத்தினால் கைகால்களெல்லாம் நடுங்க வீணையை எறிந்துவிட்டு புடவை எல்லாம் நழுவ, வியர்வை கொட்ட பிழைத்தால் போதுமென்று நினைத்து தங்கள் தங்கள் இருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

இவ்வாறு தேவர்களுடைய காரியங்களெல்லாம் நிஷ்பலமாகப்போக உடனே தேவராஜனானவன் தேவர்களுடன் ஸத்யலோகம் சென்று பிரும்மாவை சரணமடைந்து பயத்தினால் கலக்கமுள்ள மனமுடையவர்களாய் மிருகண்டு ரிஷியின் விருத்தாந்தத்தைத் தெரிவித்தார்கள். இதைக்கேட்ட பிரும்மாவானவர் இந்த்ராதி தேவதைகளைப் பார்த்து "ஹே தேவர்களே! நீங்கள் பயப்பட வேண்டாம். இந்த மிருகண்டு ரிஷியானவர் உங்களுடைய ஸ்தானங்கள் ஒன்றையும் விரும்பி தவம் செய்யவில்லை மஹாத்மாவான அந்த மிருகண்டு ரிஷியினுடைய அபீஷ்டம் வேறு. அவரது இஷ்டத்தை அதிசீக்கிரமாக ஈசுவரன் பூர்த்தி செய்யப் போகிறார். ஆகையால் நீங்கள் பயத்தை விட்டு சீக்கிரம் உங்கள் இருப்பிடம் போய்ச்சேருங்கள்."

என்று சொல்ல அதைக்கேட்டு தேவதைகள் பயமற்றவர்களாய் தங்கள் இருப்பிடமான ஸ்வர்க லோகம் போய்ச்சேர்ந்தார்கள்.

ஆம்ரவணத்தில் மிருகண்டு ரிஷியானவர் மறுபடியும் முன்போலவே ஹிருதயமாகிற தாமரை புஷ்பத்தில் ஸச்சிதானந்த ஸ்வரூபியாயும், பிரணவ ஸ்வரூபராயுமிருக்கிற சாம்பசிவ மூர்த்தியை தியானித்து அசைவற்றவராய் பிராணுயாமத்தினுல் சுவாசத்தையடக்கிக்கொண்டு மிகக் கடுமையான தபஸ் செய்துகொண்டிருந்தார்.

நான்காவது அத்யாயம் முற்றும்

ஐந்தாவது அத்யாயம்

சௌனகாதி மஹரிஷிகள் ஸூதமுனிவரைப் பார்த்து மிருகண்டு மகரிஷி மார்க்கண்டேயரைப் புதல்வனுக எப்படியடைந்தார்? என்பதை விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்று கேட்க ஸூதர் கூறுகிறுர்.

இவ்விதம் பரம வைராக்யத்தோடு பிராணுயாமத்துடன் வெகுகாலம் கடுமையான தவம் செய்துகொண்டு இருக்கிற மிருகண்டு மஹரிஷிக்கு அனுக்ரஹம் செய்வதற்காக ஈசுவரனுனவர் கிருபையுடன் சுத்தரத்னேச்வர லிங்கத்தினின்றும் வெளிப்பட்டு மிருகண்டு ரிஷியானவர் எந்த உருவத்தை ஹ்ருதய கமலத்தில் தியானித்தாரோ அதேமாதிரி

உருவமெடுத்துக்கொண்டு அவருக்கு முன்பாகத் தோன்றினர்.

மிருகண்டு மஹரிஷி தான் தியானித்துக்கொண்டிருந்த மூர்த்தி திடீரென்று மறைந்துவிட்டபடியால் அதை காணாதவராய் கண்களை திறந்து பார்த்தார். தன் எதிரில் கோடி சூர்யர்கள் ஏககாலத்தில் பிரகாசித்தது போன்ற ஒளியுள்ளவராயும் ஸனக ஸனந்தன ஸனத்குமாராதிகளால் ஸ்தோத்ரம் பண்ணப்படுகிறவராயும், நெற்றியின் நடுவில் பிரகாசிக்கும் திவ்ய நேத்ரத்தோடு கூடினவராயும், கழுத்தில் பிரகாசிக்கிற காலகூட விஷத்தையுடையவராயும், வ்ருஷப த்வஜராயும், வாமபாகத்தில் இருக்கிற பர்வதராஜன் புதல்வியான பார்வதியால் ஆலிங்கனம் பண்ணப்பட்டவராயும், கபர்த்தம் என்று சொல்லப்படுகிற ஜடாமுடியால் பிரகாசிக்கிறவராயும், கைகளில் சூலத்தையும் அஜகவம் என்ற தனுஸ்ஸையும் உடையவராயும், கற்பூரம்போல் வெண்மையான சரீரத்தோடு கூடினவராயும், யானையின் தோலைப் போர்த்திக்கொண்டிருக்கிறவராயும், பிறைச்சந்திரனை சிரஸ்ஸில் தரித்தவராயும், சரத் கால மேகம் போன்ற திருமேனியுள்ளவராயும், புன்சிரிப்போடு கூடின கடைக்கண் பார்வையால் பிரகாசிக்கிறவராயுமுள்ள உமாபதியான பரமேச்வரனை மிருகண்டு ரிஷியானவர் பார்த்தார். இரு கண்களிலும் ஆனந்தபாஷ்பம் பெருக சந்தோஷத்தினால் மயிர்க்கூச்செறிந்து பக்தியோடு அனேகம் தடவை நமஸ்கரித்து அஞ்ஜலிபந்தம் பண்ணிக்கொண்டு ஸ்தோத்ரம் செய்ய ஆரம்பித்தார்.

"ஹே பிரபோ! தேவ தேவா! ஸ்வாமின்! சந்திர கலாதர! சம்போ! உனக்கு நமஸ்காரம். ஹேருத்ரா! உன் கோபத்தின் பொருட்டு நமஸ்காரம். ஹே பிரபோ! உன் பாணத்தின் பொருட்டு நமஸ்காரம். ஹே சம்போ! உன் தனுஸ்ஸின் பொருட்டு நமஸ்காரம். ஹே சூலின்! உன் ஹஸ்தங்களின் பொருட்டு நமஸ்காரம். மங்களகரமாயிருக்கிற உன் சரீரத்தின் பொருட்டு நமஸ்கரிக்கிறேன். ஹே நீலக்ரீவ! ஹே ஸஹஸ்ராக்ஷ! ஹே ஸஹஸ்ர பாணே! மேருபர்வதத்தை தனுஸ்ஸாக உடை யோனே! ஹே பசுபதே! ஹே க்ஷேத்ரபதே! ஹே வாமதேவா! பக்த ஜனங்களின் பாபங்களை நாசம் செய்கிறவரே ஹே ஈச்வர! ஹே அம்பிகாபதே! ஹே பிரும்ம ஸ்வரூபியே! ஹே லோகஸாக்ஷின்! ஹே த்ரிமூர்த்தி ஸ்வரூபமாய் பிரகாசிப்பவரே! உக்ரமான தேஜஸ்ஸோடு கூடின ஹே மஹாநு பாவா! உன்னை நமஸ்கரிக்கிறேன்.

ஹே நாகாபரணபூஷித! ஹே சுத்தரத்னேச்வர! என்னிடத்தில் கிருபை செய்யவேண்டும். ஹே பிரபோ! எனது ஹிருதயத்தில் உன்னிடம் பக்தி எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும் என் சிரஸானது உனது பாதகமலத்தை வணங்கட்டும் என் வாக்கானது உன் நாமபஜனம் பண்ணுவதி லேயே ப்ரவர்த்திக்கட்டும். எனது கை, கால் முதலான சகல அங்கங்களும் உன்னுடைய ஆராதனத்திலே ஈடுபட்டிருக்கட்டும். தங்கள் திவ்ய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்த எனக்கு மங்கள கரனாயிருக்கிற ஒரு புதல்வனை அளிக்கவேண்டும்.

இவ்வாறு கைகூப்பி வணங்கி பிரார்த்திக்கும் மிருகண்டு ரிஷியைப் பார்த்து, தன்னை சரணமடைகிறவர்களுடைய ஸகல பாபங்களையும் நீக்கி முக்தியளிக்கும் கருணாநிதியான பரமேச்வரன் மிகவும் ஸந்தோஷத்துடன் மந்தஹாஸத்தினால் தன் பற்களினொளிவீச கூறுகிறார். "ஹே மிருகண்டோ! உன் தவத்தால் ஸந்தோஷமடைந்தேன். உனக்கு நல்ல குணமுள்ளவனாயும், நல்லொழுக்கத்தோடு கூடினவனாயும், மிகுந்த புத்திமானாயும் உள்ள பதினாறு வயதுகொண்ட புதல்வன் வேண்டுமா? அல்லது நூறு வயது உள்ளவனாயும், மகாமூடனாயுமுள்ள புதல்வன் வேண்டுமா? ஹே மிருகண்டோ! யோசித்து சீக்கிரம் பதில் சொல்லக்கடவாய்."

பரமேசுவரனுடைய இந்த வார்த்தையைக் கேட்ட மிருகண்டு தன் மனதில் நன்கு யோசித்து, "ஹே பிரபோ! தாங்கள் சொல்லியதில் முன்னால் சொல்லப்பட்ட நற்குணமுள்ள புதல்வனையே அளிக்கவேண்டும். ஹே தீனதயாளா" என்று பிரார்த்தித்தார் "ஹே மிருகண்டோ அதே பிரகாரம் நீகேட்ட நல்ல குணமுள்ள புதல்வனையே அளித்தோம். நீ இந்த தபஸ்ஸை நிறுத்திவிட்டு ஆச்ரமம் செல்லக்கடவாய்" என்று ஈச்வரனானவர் ஆம்ரவண க்ஷேத்திரத்தில் தபஸ் செய்துகொண்டிருந்த மிருகண்டு ரிஷிக்கு வரமளித்துவிட்டு, தன் இருப்பிடமான சுத்த ரத்னேச்வர லிங்கத்துள் மறைந்துவிட உடனே தேவதைகள் புஷ்பமாரி சொரிந்தார்கள்.

இவ்வாறு ஈச்வரன் தனக்கு வரமளித்து மின்ன லொளியைப்போல் மறைந்துவிட பரமசிவனை நினைந்து நினைந்து ஸந்தோஷத்துடன் தன் ஆச்ரமத்தையடைந்து பத்நியுடன்கூட விரதசீல ராக இருந்துகொண்டு மிருகண்டு முநிவர் புத்ர ப்ராப்தியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

இந்த மாந்துரையென்னும் ஆம்ரவண க்ஷேத் திரத்தை அடைந்ததனால் மிருகண்டு மஹரிஷி யானவர் தன் அபீஷ்டம் நிறைவேறி ஸந்தோஷ மடைந்தார். இந்த க்ஷேத்ரத்தை எவன் தர்சிக் கிருனோ, அவனுக்கும் ஸர்வாபீஷ்டமும் நிறை வேறும். அவ்விடத்தில் விரதசீலனுயிருந்து தவம் செய்துவிட்டால் அவனுக்கு ஏற்படும் பலனை எவ்வாறு சொல்லமுடியும்?

ஹே சௌனகர்களே! புத்ரோதயத்தை இந்த தம்பதிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஈசனது அருளால் கர்போத்பத்தி ஏற்பட்டு பத்தாவது மாதத்தில் சதய நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில், கேந்திரத்தில் குரு சந்திர னேடு கூடியிருக்கும்பொழுது சுப லக்னத்தில் மஹா பதிவ்ரதையான மிருகண்டு ரிஷியின் மனைவியான மருத்வதீதேவி குழந்தையைப் பெற்ருள். சிவபக்தசிகாமணியான மார்க்கண் டேயர் பிறந்தவுடன் தேவர்கள் ஆகாசத்தி லிருந்து புஷ்பமாரி பொழிந்தனர். அப்ஸரஸ் ஸ்திரீகள் நாட்டியமாடினுர்கள். கிந்நர, கந்தர் வர்கள் ஆனந்தமாய் பாடினுர்கள். முரசு, பேரி, டிண்டிமம் முதலான 18 வாத்யங்களும் முழங்கின.

உடனே எல்லா முநிச்ரேஷ்டர்களும், வந்து குழந்தையைப் பார்த்து உத்தமபுருஷனுக்குள்ள அடையாளத்தோடு கூடியிருக்கிறதென்று ஸந்தோஷித்து, ஹே மிருகண்டோ! ஸாக்ஷாத் சிவபெருமானே உம்மிடத்தில் பரமகிருபையோடு கூட குழந்தையாய் அவதரித்தருளினரேயொழிய வேறில்லையென்று கூறி ஜாதகர்மா முதலிய கிரியைகளை நடத்திவைத்தார்கள். சுக்லபக்ஷ சந்திரன்போல் நன்கு வளர்ந்துவரும் தங்கள் குழந்தை மிகுந்த தேஜஸ்ஸுடன் விளங்குவதை கண்டு தாய்தந்தையர்கள் ஸந்தோஷமடைந்தனர்.

ஐந்தாவது அத்யாயம் முற்றும்.

ஆறுவது அத்யாயம்

—:O:—

இவ்விதம் சொல்லிவரும் ஸூதரைப் பார்த்து மறுபடியும் வணக்கத்துடன், 'ஹே ஸூதமுநிவரே! இந்த மிருகண்டு ரிஷியின் புதல்வரான மார்க்கண்டேயருக்கு ஈசனுல் விதிக்கப்பட்ட ஆயுள் பதினுறல்லவோ! அவ்வாறிருக்க இவர் ஈசனுடைய ஸங்கல்பத்தையும் மாற்ற வல்லமையுள்ளவராக எவ்விதமானுர்? இவர் எப்படி நீண்ட ஆயுளை அடைந்தார்? இக்கதையை எங்களுக்கு விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று சௌநகாதிகள் கேட்க ஸூதர் கூறுகிருர்.

'ஹே சௌனகாதி ரிஷிகளே! கேளுங்கள் கூறுகிறேன். குழந்தையானது க்ரமமாக வளர்ந்து வரும்பொழுது 16வது வயதை நெருங்கியதும் இதையறிந்த மிருகண்டு முனிவரும் அவர் மனைவியும் மிகவும் வருந்தினர். 'அந்தோ, நம்முடைய ஜன்மம் என்ன ஜன்மம். வெகு காலமாகக் கஷ்டப்பட்டு ஆம்ரவண க்ஷேத்ரமடைந்து கடுமையான தவத்தைச்செய்து உத்தமகுணம் பொருந்திய புதல்வனையடைந்தும் தீர்க்காயுஸ் உள்ள புதல்வனை அடையாமல் போனோமே. ஜகதீசா! இவ்வளவு தவம் செய்தும் உன்னுடைய மனம் பூர்ண சந்தோஷத்தையடையவில்லையா?, ஹே பார்வதிநாதா! நிஷ்களங்கமான பக்தியுள்ளவனையும், பிரும்மதேஜஸ்ஸினால் பிரகாசிக்கிற சரீரத்தோடு கூடியவனையும், பால்ய வயதிலேயே சகல வேத வேதாந்தங்களையும் அறிந்து அதன் பிரகாரம் அனுஷ்டானம் செய்கிறவனையும், மாதாவினிடத்திலும், பிதாவான என்னிடத்திலும் பரம பக்தியோடு கூடியவனையுமிருக்கிற என் புத்ர சிகாமணிக்கு பதினாருவது வயது நடக்கிறதே! ஹா ஹா என்ன கஷ்டம் ஈசா! இப்பேர்ப்பட்ட இந்த புதல்வனையடைந்து பதினாருவது வயதிலேயே பலிகொடுத்துவிட்டு மரண கால பர்யந்தம் மிகுந்த துக்கத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கவா நான் தவம் செய்தேன். ஹே கருணாநிதே! எவ்வாறு நான் சகித்திருப்பேன்? தங்களுடைய வாக்கிலிருந்து வந்த சொல் தவருதே' என்று வாய்விட்டு அலறி மிருகண்டு துக்கம்

தாங்காமல் மூர்ச்சையடைந்துவிட்டார். இதைக் கண்டு அவர் மனைவியும் மூர்ச்சையடைந்தாள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மார்க்கண்டேயரானவர், "ஐயோ! நம் தாய் தந்தையர்களுக்கு ஒருவிதக் குற்றமும் நாம் செய்யா திருக்க நம்மைப் பார்த்தவுடன் ஏனோ இவ்வளவு துக்கத்திற்குக் காரணம்? ஒன்றும் தெரிய வில்லையே" என்று மனம் கலங்கி திக்பிரமை கொண்டு அசையாமல் நின்றுவிட்டார். மூர்ச்சை அடைந்த இருவரும் ஒருவாறு மூர்ச்சை தெளிந்து கண் விழித்து முன்னால் நிற்கும் புத்ரசிகாமணியைப் பார்த்து இரு கண்களிலும் கங்கா ஜலம் போலும் மலையருவியைப் போலும் நீர் தாரை தாரையாக பொழிய ஓவென்று கதறி அழுதார்கள்.

'ஹே குணசீலா! அழகிற் சிறந்தவனே! புத் என்ற நரகாக்னியை தணிக்க வந்த மேகம் போன்ற வனே! ஹே புத்ர! உன்னுடைய சந்திரனுக்கு சமமான முகத்தினின்றும் ஒழுகுகிற அமிர்தமாகிற வார்த்தைகளைக் கேட்டு சந்தோஷத்தினால் உடல் பூரித்திருக்கிற நாங்கள் எப்படி உன் முகத்தை பார்க்காமல் ஜீவித்திருப்போம். ஹே குழந்தாய் ஹே புத்ர! என்று இனி யாரை அழைப்போம் தாமரைத் தண்டுக்குச் சமானமான மிருதுவா இருக்கிற உன் சரீரத்தை கட்டிக்கொண்டு இன எப்படிக் கொஞ்சி முத்தமிடுவோம்.?

புதல்வனுடைய சரீராலிங்கனம் பரமபாக்கிய பண்ணின புண்யாத்மாக்களுக்கன்றி இதரர்களுக்

கிடைப்பது அரிதல்லவா ' என்று வாய்விட்டலறின சப்தத்தைக்கேட்ட மரங்களும்கூட சகிக்காமல் தன்னிடமிருந்து புஷ்பங்களாகிற கண்ணீரை உதிர்த்து நின்றதென்ருல் மானிடஜாதிகட்குச் சொல்லவேண்டுமோ.?

இவ்வாறு அவர்களிருவரும் அழுது அப்பெருந் துக்கத்தின் கரையை அடைய சாமர்த்தியமில்லாதவர்களாய் மறுபடியும் மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டார்கள்.

இவ்வாறு மகத்தான துக்கத்தையடைந்து பரிதவிக்கும்படியான தன் பெற்ருேர்களுக்கு உபசாரம் செய்து மூர்ச்சை தெளியவைத்து மார்க்கண்டேயர் கைகூப்பி வணங்கி புதிதாகக் கடைந்தெடுக்கப்பட்ட அமிர்தத்திற்கு சமமான வார்த்தைகளைச் சொல்ல ஆரம்பித்தார்.

' ஹே தாய் தந்தையர்களே ! பூர்வத்தில் பிரும்ம தேவனுல் என் தலையில் எழுதப்பட்ட எழுத்தையும் நான் லக்ஷ்யம் செய்யவில்லை. ஏ தந்தையே ! எனக்கு யமதர்மனிடத்திலிருந்தும் யாதொரு விதமான பயமும் கிடையாது. உங்களுடைய பரிசுத்தமான தபஸ்ஸினுல் ரக்ஷிக்கப் பட்ட என்னை காலன் கண்ணுலும் பார்க்கமுடியாது.

ஏ தந்தையே ! யமனுக்கும் யமனுயும் சகல புவனங்களுக்கும் நாயகனுயும் சந்திரகலாதரராயும் இருக்கிற பரமேச்வரன் பக்தர்களது துக்கத்தை நாசம் பண்ணும் சக்தியுடையவரன்ருே ! எந்த

பிரபுவானவர் ஒரே பாணத்தினுல் திரிபுர ஸம்ஹாரம் செய்தாரோ, அவரை நான் சரணமென்று அடைகிறேன்.

ஏ தந்தையே! முன் காலத்தில் ஸமுத்ர மதனம் பண்ணும்படியான சமயத்தில் வாசுகியின் வாயிலிருந்து காலகூடவிஷம் கிளம்பி சகல புவனங் களையும் அழிக்க ஆரம்பித்த காலத்தில் தேவ்தை கள் யாவரும் அந்தோ இஃதென்ன கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதையாகிவிட்டதே, நாம் அம்ருதம் சாப்பிடுவோம் என்றிருக்க காலகூட விஷம் நம் எல்லோரையும் எரிக்கிறதே, ஐயோ! எவ்விடம் போவோம் என்று ஓடும்படியான தேவ கணங்களை எந்த பிரபுவானவர் அஞ்சவேண்டா மென்று கையமர்த்தி காலகூட விஷத்தை விளையாட்டாக உள்ளங்கையிலேந்தி உண்டு அருளினுரோ அந்த கருணுநிதியை நான் தஞ்ச மடைகிறேன்.

எந்தையே! எந்தப் பிரபுவானவர் உத்தாலக ரிஷியின் புத்ரனுன ச்வேதகேதுவை யம பாசத்தி னின்றும் விடுவித்து ரக்ஷித்தாரோ எந்த பிரபு வானவர் சிலாதரிஷியின் புத்ரனை யமனிடத்தி னின்றும் காப்பாற்றியருளினுரோ; அந்த யம னுக்கும் யமனுன பரமேச்வரனை நான் தஞ்சம் அடைகிறேன்.

எவரிடத்தில் பயமுள்ளவனுய் சூர்யனுனவர் ஆகாசத்தில் சர்வதா வண்டைப்போல் சுற்றிச் சுற்றி உதயாஸ்தமனத்தை அடைகிருரோ;

எவரிடத்தில் பயத்தினுல் வாயுபகவான் எப்பொழுதும் சலித்துக்கொண்டிருக்கிருரோ; எவரிடத்தில் பயமுள்ளவனுய் அக்னி பகவான் பிரகாசிக்கிருரோ; எந்த புருஷனுனவன் லிங்க ஸ்வரூபியாய் பூலோகத்தில் பிரகாசிக்கிருரோ; எந்த லிங்கத்தை பக்தியுடன் ஆராதித்து, பிரும்மாதி தேவர்களும் மனுேபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்கிருர்களோ; எந்த புருஷனுனவன் பிரும்ம கபாலத்தைக் கையிலேந்தி பிக்ஷாடனமூர்த்தியாய் பிரகாசிக்கிருரோ; எந்தப் புருஷனுல் மன்மதன் சாம்பல் ஆனுனே; எவன் அனுதியாய் விளங்குகிருனே; அந்த பிரபுவை நான் சரணுகதி அடைகிறேன்.

ஏ தந்தையே! நான் உங்களிருவர்களையும் பக்தி சிரத்தையுடன் பூஜித்தது உண்மையாக இருக்குமாகில் உங்களுக்கு புதல்வனுயிருப்பதும் உண்மையாயிருக்குமேயாகில் அதிசீக்கிரம் சென்று அல்பபலமுள்ள யமனை ஜயித்து திரிபுரமெரித்தவரான பரமசிவனிடத்தினின்றும் கல்ப கோடி காலங்களினுலும் குறைக்கப்படாத நீண்ட ஆயுளை அடைவேன் நிச்சயம். ஹே தாய் தந்தையர்களே! நீங்கள் என்னைக்குறித்து வருந்த வேண்டாம். நான் சென்று எவ்வாருவது ஈசுவராராதனம் செய்து தீர்க்காயுஸ்ஸை அடைகிறேன். தாங்கள் அடியேனுக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள்'

இவ்வாறு மிகுந்த பக்தி சிரத்தையுடன் கை கூப்பி அஞ்சலிபந்தனம் பண்ணி வினயமாய்

கேட்கும் புத்திரனுடைய அமிர்தம் போன்ற வார்த்தைகளைக்கேட்டு நம்முடைய புதல்வனுக்கு யமனிடமிருந்து பயமில்லையென்று தீர்மானித் தார்கள்.

‘ஆகா என்ன ஆச்சர்யம்! மேகமில்லாத ஆகாயத்திலிருந்து மழை பொழிவதுபோலவும், பாற்கடலல்லாத சமுத்திரத்தினின்றும் சந்திர னுண்டானதைப் போலவும் நமது புத்திரனுடைய மனம் இந்த வயதிலேயே பிரபஞ்சசுகத்தில் இச்சை யில்லாத பெரியோர்களின் மனம்போல் களங்கமற்ற தாய் ஈசுவராராதனத்தில் திடமான நம்பிக்கை யுடன் கூடியிருக்கிறது. என்ன பாக்கியம் பண்ணி னோம். நம்முடைய ஜன்மமே சிலாக்யம்’ என்று எண்ணி ஸந்தோஷத்துடன் மார்க்கண்டேயரைப் பார்த்து சொல்கிறார்கள்.

‘ஹே மார்க்கண்டேயா! எந்த விதத்தினுல் உனக்கு மரணம் சம்பவிக்காதோ, அந்தப்பிரகாரம் ஈசுவரனைப் பூஜிக்கக்கடவாய். ஹே பாலகா! இந்த மூன்று லோகங்களிலும், தன்னை ஆச்ரயித்தவன், யமன் வசமானாலும் அவனை காப்பாற்ற பரமசிவனைத்தவிற வேறு தெய்வம் கிடையாது. ஹே குழந்தாய்! எந்த புருஷனை வேதங்கள் எல்லாம் ‘நம:’ (நமஸ்காரம்) என்ற வார்த்தைகளுடன் அவருடைய நாமோச்சாரணம் பண்ணிக்கொண்டு ஆதரவோடு ஸ்தோத்ரம் செய் கின்றனவோ அவரையே சரணமென்று அடையக் கடவாய். ஆகையால் ஹே புத்ர! நீ கட்டாய

ஈசுவரனை ஹ்ருதயகமலத்தில் தியானித்து தவம் செய்தால் உனக்கு அவச்யம் பகவான் அனுக்ரஹம் செய்வார்' என்று.

இவ்வாறு சொன்ன தாய் தந்தையர்களை பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, மார்க்கண்டேயர் சந்திரகலையை ஜடாமுடியில் தரித்தவராயும், காலகூட விஷத்தை கழுத்தில் தரித்தவராயுமிருக்கிற பரமசிவனை மனதில் தியானித்து தவம் செய்வதற்கு செல்ல உத்தேசித்தவராய் மறுபடியும் அவர்களை நமஸ்கரித்து மார்க்கண்டேயர் சொல்கிறார்.

'தாய்தந்தையர்களே! பிரத்யக்ஷ (நேரில் காணும்) தைவமாக இருக்கிற மாதாபிதாக்களை ஆராதிக்காமல் அப்ரத்யக்ஷமான (நேரில் காண முடியாத) தெய்வத்தை பஜிப்பவன் தன் முன்னால் சித்தமாயிருக்கிற ருசியுள்ள பாயஸத்தை விட்டு விட்டு தன் புறங்கையை நக்கிக்கொண்டு பசியால் வருந்துகிற மூடன்போலாவான். ஏதோ நான் தங்களை பூஜித்திருந்தேனேயாகில் அந்த பூஜா பலத்தால் சாக்ஷாத் சிவபெருமான் என்பேரில் சீக்கிரம் கிருபை செய்து கட்டாயம் என் அபீஷ்டங்களை பூர்த்தி செய்வார்.

எந்த புருஷனுடைய கோபத்தால் பிரும்மாவானவர் சிருஷ்டிக்கும் திறமையை இழந்து பரிதவித்தாரோ, எவனுடைய பூஜையினால் மறுபடியும் பிரம்மாவானவர் முன்போல் சிருஷ்டிக்கும் சக்தியைப்பெற்றாரோ அந்த பிரபுவானவர் ஆம்ரவணத்தில் லிங்கஸ்வரூபியாய் பிரகாசிக்கிறார்.

தேவேந்திரன் கௌதம ரிஷியின் பத்னியான அஹல்யையை புணர்ந்த தோஷத்தால் சரீரம் விகாரமடைய மிகவும் வருந்தி நன்ருக மலர்ந்திருக்கிற தாமரை மலர்களினுல் எந்த பிரபுவை அர்ச்சித்து அவருடைய கடாக்ஷத்தினுல் பழைய அழகான சரீரத்தை அடைந்தானே; அந்தப் பிரபுவானவர் லிங்கஸ்வரூபியாய் ஆம்ரவணத்தில் பிரகாசிக்கிருர். எந்த பிரபுவை யாராதித்து சூரிய சந்திரர்கள் பகலிலும் இரவிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிருர்களோ, எவனைப் பிரார்த்தித்த பலத்தினுல் சமுத்திரமானது ரத்னுகரமென்ற பெயரோடு விளங்குகிறதோ, அப்பேர்ப்பட்ட பிரம்ம ஸ்வரூபியான லிங்கமானது ஆம்ரவணத்தின் கண் பிரகாசிக்கிறது.

ஸ்வயம்பிரகாசராயும் சுத்தரத்னேச்வரரென்கிற பெயரோடு கூடினவராயும் உள்ள பிரபுவானவர் பக்தர் கோரும் பலனைக்காட்டிலும் அதிகமாகவே கொடுப்பவராய், இந்த ஆம்ரவணத்தில் லிங்கஸ்வரூபியாய் பிரகாசித்துக்கொண்டிருக்கிருர். அப்படியிருந்தபோதிலும் தந்தையே! தபோ நியமங்களோடு கூடிய என் சரீரம் இளைத்துப் போனுல் உங்கள் மனதுக்கு மிகுந்த துக்கமாயிருக்கும். அதனுல் தவத்துக்கு விக்னம் உண்டாகும். அப்படி உண்டானுல் இஷ்டமானது பூர்த்தியாகமாட்டாது, ஆகையால் நான் பூர்ணுயுளை அடைவதற்கு ஈச்வராராதனம் செய்ய வேருேரிடம் செல்கிறேன்.

ஹே தாய் தந்தையர்களே! இக் காவேரி தீரத்தில் அனேக க்ஷேத்ரங்களும், தானே உண்டா யிருக்கிற அனேகம் ஸ்வயம்புலிங்கங்களுமிருக் கின்றன.

ஆனாலும் கிழக்கு திக்கில் இருக்கும் அநேக சிவக்ஷேத்ரங்களுள் பிரஸித்தமான ஒரு புண்ய க்ஷேத்ரத்தில் சிவனை பூஜித்து யமனை ஜயிக்கிறேன். நீங்கள் என்னைப்பற்றி வருந்தவேண்டாம். இவ் விடமிருந்து கொண்டே எனக்கு ஆசீர்வாதம் செய்துகொண்டிருங்கள் அதனாலேயே நான் க்ஷேம மடைவேன்" என்று கூறி தாய் தந்தையர்களை அஞ்ஜலிபந்தம் பண்ணி நமஸ்கரித்து ஆசீர்வாதம் பெற்று அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு ஈசுவரனை உத்தேசித்து தவம் செய்வதற்கு விஜயம் என்கிற சுப முகூர்த்தத்தில் புறப்பட்டார் மார்க்கண்டேயர்.

ஆறுவது அத்யாயம் முற்றும்

ஏழாவது அத்யாயம்

இவ்விதமாக மார்க்கண்டேயர் தாய் தந்தையர் களை நமஸ்கரித்து அவர்களிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு கிழக்கு திக்கை நோக்கி புறப்பட்டுப் போகும்பொழுது நடுவழியில் எல்லை யில்லாத மஹிமையோடு கூடினவராயும், பனிக் கட்டிக்குச் சமமான சரீரகாந்தியோடு கூடினவராயு மிருக்கிற நாரத மஹரிஷியானவர் தேவலோகத்தி

னின்றும் புறப்பட்டு வீணுகானம் பண்ணிக் கொண்டு முனிபுத்ரனுடைய பாக்யவசத்தால் அவன் எதிரில் வந்து நின்ருர். நாரதரைக் கண்டதும் மார்க்கண்டேயர் விநயத்துடன் அவர் கால்களில் விழுந்து வணங்கினுர். உடனே நாரதர் ' தீர்க்காயுஸ்ஸுடன் ஸுகமாக இருப்பாய் ' என்று ஆசீர்வாதம் செய்தார். இதனுல் மிகுந்த ஸந்தோஷமடைந்த மார்க்கண்டேயர் தன் மனதில் இவ்வாறு எண்ணினுர்.

''ஆச்சர்யம்! எந்தப் பலனையடைய விரும்பி ஈச்வரனை பூஜிக்கப்போகிருேமோ அந்த பலனுனது நடுவழியில் இவ்விடமே கிடைத்துவிட்டது. உலகில் பிருமணர்களினுல் செய்யப்பட்ட ஆசீர் வசனமானது ஒருநாளும் பொய்யாகமாட்டாது. யாராலும் பிளக்கமுடியாத கவசம் போன்றது. அப்படியிருக்க இந்தேவரிஷியின் ஆசீர்வாதத்தை நாம் அடைந்துவிட்டோம். உலகில் ஸாதுக் களுடைய தரிசனம் எவனுக்குக் கிடைக்கிறதோ, அவனுக்கு நீண்ட ஆயுள் உண்டாகும். அஷ்ட லக்ஷ்மிகளின் கடாக்ஷம் கிடைக்கும். உத்கிருஷ்ட மான கீர்த்தியும் உண்டாகும். அவனது அபீஷ்டம் எல்லாம் நிறைவேறும். ஸாதுஸங்கம் கல்பக விருக்ஷம் போன்றது.''

இவ்வாறு மனதில் எண்ணி மிகுந்த சந்தோஷமுள்ளவராய் மார்க்கண்டேயர் நாரதமஹரிஷியைப் பார்த்து மிகவும் வணக்கத்துடன் அஞ்ஜலிபந்தனம் பண்ணிக்கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

"தபஸ்விகளில் சிரேஷ்டரான நாரதமகரிஷியே! தங்களுடைய தரிசனமானது எனக்கு ஜன்மாந்தர பாக்ய வசத்தால் கிடைத்தது. நான் ஈசுவரனை அர்ச்சிக்கப் புறப்படும்படியான சமயத்தில் எனக்கு தங்களுடைய தரிசனம் கிடைத்ததானது என் அபீஷ்டம் நிறைவேறுவதற்குக் காரணபூதமாயிருக்கிறது. ஏ தபோதனரே! உங்களைப்போலொத்த பாகவத தர்சனம்தான் உடனே பலனைக்கொடுக்கும். மற்ற தேவதா தர்சனம் வெகுகாலம் கழித்து பலன் கொடுக்கும். ஸாதுக்கள் தரிசனம் ஒரு தடவை கிடைத்தமாத்திரத்தில் சகல பாபங்களும் நிவாரணமடைவதோடு சர்வாபீஷ்டங்களும் எளிதில் நிறைவேறுகிறது. உலகில் என்போன்ற மூடர்களையும் புனிதம் பண்ணுவதற்காகத்தான் எல்லா தீர்த்தங்களிலும் புண்ய வனங்களிலும் க்ஷேத்திரங்களிலும் ஸாதுக்கள் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறார்கள். ஸங்கரஹிதர்களாயும், சுத்த ஸத்வகுணமுள்ளவர்களாயும் இருக்கும் மஹான்கள் ஸம்ஸாரக்கடலில் மூழ்கிக் கரை காணுமல் தவிக்கும் மூட ஜனங்களை கரையேற்றுவதன்பொருட்டு சஞ்சரிக்கிறார்கள். பெரியோர்களின் தர்சனம், சம்பாஷணம் அவர்களோடு ஸர்வதா கூடியிருப்பது இவைகள் ஜனங்கள் எளிதில் முக்தியடைவதற்குக் காரணமாகும்".

இவ்வாறு கூறும் முனிகுமாரனைப் பார்த்து கருணுநிதியான நாரதர் சொல்கிறார். "ஏ மார்க்கண்டேயா! உன் மனேபாவத்தையறிந்தேன். உன் மனேபீஷ்டம் நிறைவேறுவதற்கு உபாயம் சொல்கிறேன். உலகில் ஈச்வரனுனவர் ஜீவர்

களின் மனதில் குடிகொண்டு அவரவர் கர்மா வுக்குத் தகுந்த பலனையே கொடுக்கிறார். எவன் மங்களகரமான காரியத்தைச் செய்கிறானோ, அவன் ஒருகாலத்திலும் துர்கதியை அடையமாட்டான். ஏ குழந்தாய்! இது சத்தியம். இப்பொழுது உன் பிதாவினுடைய கர்மகதியால் நீ பூர்ணாயுளை அடையவில்லை. உன் தந்தை முன்காலத்தில் நன்கு மலராத மொட்டு அரும்பு புஷ்பங்களினால் ஸர்வேச்வரனை அர்ச்சித்தார். முதல்நாள் மலர்ந்த புஷ்பங்களினாலும், கீழே உதிர்ந்தவைகளாயும், பூச்சி அரித்ததாயுமுள்ள புஷ்பம், பத்திரங்களாலும் ஈச்வரனை அர்ச்சிப்பது கூடாது. உன் பிதா பக்தி யுள்ளவரானபோதிலும், நல்ல புஷ்பங்களினால் சிவனை அர்ச்சிக்காதபடியால் அவர் தீர்க்காயுஸான புதல்வனை அடையவில்லை.

உலகில் மரங்களில் அந்தந்தக் காலத்தில் தவறாமல் மலர், காய், கனிகள் ஏற்படுவதுபோல் ஜீவர்கள் செய்யும் நல்வினை தீவினைகளின் பயனான இன்பதுன்பங்கள் உரியகாலத்தில் கட்டாயம் ஏற்படும். ஆனாலும் பசுபாச விமோசகரான பரமசிவன் தனது பக்தர்களின் பாபங்களைப்போக்கி கர்மபந்தத்திலிருந்து விடுவிப்பார். அவர் ஒருவரே தனது முக்குண மாயையால் ஸிருஷ்டி-ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்துகொண்டு ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற பெயரையடைகிறார். இதை யறியாமல் ஜனங்கள் மும்மூர்த்திகளையும் வெவ் வேறாகக் கருதுகிறார்கள்.

ஹே வத்ஸ! விஷ்ணுபதமான வைகுண்டத்தைக் காட்டிலும் உயர்ந்த பதத்தில் விளங்குகிறவராயும், தேவதேவனுயும், உமைபாகனுயும் மூன்று நேத்திரங்களினுல் பிரகாசிக்கிறவராயும், சந்த்ரகலையுடன் விளங்கும் ஜடாமுடியைத் தரித்தவராயுமிருக்கிற பரமசிவனையாராதித்து நீண்ட ஆயுளை அடையக்கடவாய்.''

ஏழாவது அத்யாயம் முற்றும்.

எட்டாவது அத்யாயம்

*

''ஏ மஹுர்ஷே! ஸூதபுத்ரரே! கேட்கிறவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதாயும் புண்யத்தை தருவதாயும், கேட்டபொழுதே ஸர்வ பாபங்களையும் போக்குகிறதாயுமுள்ள சிவகதைகளையும், சிவபக்த சரிதங்களையும் கேட்டு எவன் தான் போதுமென்று திருப்தியடைவான்? ஹே ஸூத! மிக்க தைர்யமுள்ளவராயும், சிவபக்தர்களில் முதன்மையானவராயுமிருக்கிற அந்த மார்க்கண்டேயரானவர் நாரதருடன் ஸம்பாஷித்த பிறகு என்ன செய்தார்? தேவர்ஷியான நாரதர் முனிகுமாரனுன மார்க்கண்டேயரைப் பார்த்து மேலும் என்ன சொன்னுர்? இவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேணும்'' என்று மிகுந்த வணக்கத்துடன் கேட்கும் சௌநகாதி ரிஷிகளைப் பார்த்து சூதர் கூறுகிருர்.

ஹே ரிஷிச்ரேஷ்டர்களே! இவ்விதமாக சொன்ன நாரதரை இம்மார்க்கண்டேயர் மிக்க வணக்கத்துடன் நமஸ்கரித்து ரொம்பவும் ஆதரவோடுகூடக் கேட்டார்.

''ஹே ரிஷிச்ரேஷ்டரே! இக்காவேரீ தீரத்தின் கண்ணுள்ள சிவக்ஷேத்திரங்களில் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆகையால் எந்த க்ஷேத்திரம் சென்று சங்கரனை பூஜித்தால் நான் நீண்ட ஆயுளை அடைவேனோ; எந்த க்ஷேத்திரமடைந்தால் யமனை ஜயிக்கமுடியுமோ அதைச் சொல்லவேணும்'' என்றுகேட்கும் ரிஷி புதல்வனைப் பார்த்து கருணாநிதியாயும் தேவரிஷி ச்ரேஷ்டராயுமிருக்கிற நாரதரானவர் கொஞ்சம் யோஜித்து மூன்றாம் பிறைச்சந்திரனை சிரஸ்ஸில் தாங்கியவரான பரமசிவனிடத்தில் மிகுந்த பக்தியுள்ள மார்க்கண்டேயரைப் பார்த்துக்கூறுகிறார்.

''ஏ வத்ஸ! மார்க்கண்டேயா! இவ்விடமிருந்து பத்து யோஜனை தூரத்திற்கப்பால் கீழ்சமுத்திரத்தின் கரையில் அநாதியாயும், எப்பொழுதும் தேவக் கூட்டங்களினால் சூழப்பட்டதாயும் ஸர்வோத்தமமுமான ச்வேதாரண்யம் என்ற க்ஷேத்திரமொன்று இருக்கிறது.

மூன்று புண்ய தீர்த்தங்களால் பிரகாசிக்கிற இந்த புண்ய ஸ்தலத்தில் பிரும்மாவின் ஆயுளின் முடிவில் அவருடைய சரீரமானது தகனம் செய்யப்பட்டு அந்த சாம்பலினால் வெளுப்பாக விளங்கு

வதால் இதற்கு சுவேதாரண்யமென்ற பெயர் ஏற்பட்டது.

இந்தப் புண்யாரண்யத்தில் காலை வைத்த மாத்திரத்தில் அவன் தனது காலை நமன் தலையில் வைக்கிறான். அந்த வனத்தின் மஹிமையை ஆயிரம் நாவைப் படைத்த ஆதிசேஷனாலும் சொல்லொண்ணாது. அவ்வனத்தில் வேதாந்தங்களால் தேடப்படும் பரதத்வமானது அநேகம் கோடி பிரம்மாக்களின் எலும்புகளையே மாலையாகத் தரித்துக்கொண்டு, மூன்றாம் பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட ஜடாமுடியுடன் எப்பொழுதும் ரிஷிக்கூட்டங்களினால் ஸ்தோத்ரம் செய்யப்படுகிறவராய் பார்வதியுடன்கூட லிங்கமூர்த்தியாய்ப் பிரகாசிக்கிறார்.

அந்த லிங்கத்தின் வடக்கு பாகத்தில் உள்ள மணிகர்ணிகை நதியில் எவன் ஒரு தடவையாவது ஸ்நானம் செய்கிறானோ அவன் ஸகல பாபங்களிலின்றும் விடுபட்டு பிரமதகணங்களினால் ஸேவிக்கப்படுகிறவனாய் சிவஸாயுஜ்யத்தையடைகிறான். ஏ வத்ஸ! நீ அந்த ச்வேதாரண்யம் சென்று ஈச்வரனை அர்ச்சித்தால் தீர்க்காயுஸ்ஸை அடைவாய். நீ தினந்தோறும் மணிகர்ணிகையில் ஸ்நானம் செய்து ஈச்வரனை தியானித்து, காய்ந்து உதிர்ந்து கிடக்கும் சருகுகளையே உணவாகக் கொண்டு தவம்செய்தால் கட்டாயம் யமனை வெல்லலாம். தீர்க்காயுஸ்ஸை அடையலாம்.

இவ்வாறு தவம் செய்வதில் திடநிச்சயமுள்ளவனுய் நல்ல பிரும்மசர்ய விரதத்தோடு கூடினவரான மார்க்கண்டேயருக்கு, தவம் செய்யும்படியான க்ஷேத்திரத்தையும் அதற்கு வேண்டிய நியமத்தையும் உபதேசித்து ஜிதேந்திரியர்கட்குள் சிரேஷ்டரான நாரத மஹரிஷி ககனமார்க்கத்தில் சென்று மறைந்துவிட்டார். பிறகு மார்க்கண்டேயர் சந்தோஷ சித்தராய் தனதபீஷ்டமானது நிறைவேறியதுபோல் நினைத்து உத்தமமான சுவேதவன க்ஷேத்திரமடைந்து ஈசுவரனை ஆராதிக்கவேண்டுமென்று எண்ணியவராய் புறப்பட்டார். வழியில் நல்ல சகுனங்கள் ஏற்பட்டன. பக்ஷிகளெல்லாம் இந்த மார்க்கண்டேயர் யமதர்மராஜனை எவ்வாறு ஜெயிக்கப்போகிருரோ; நாமும் சென்று பார்க்கலாமென்று போகிறதுபோல் மனதுக்கு இனிமையாய் கானம் செய்துகொண்டு இவருக்கு முன்சென்றன. மஹர்ஷியின் புதல்வரான இந்த மார்க்கண்டேயர் செல்லும் வழியில் நல்ல பரிமளமுள்ள புஷ்பங்களிலிருக்கும் கேஸரங்களோடுகூடி நல்ல வாசனையுள்ள குளிர்ந்த காற்று வீசியது. வழியிலிருக்கும் விருக்ஷங்கள் தங்கள் துளிர்களாகிற கையை நீட்டி ஏ மார்க்கண்டேயரே! இந்த வழியாகச் செல்லும் சுவேதவனம்போய் உம்முடைய அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று சொல்வதுபோல் இருந்தது. அனேகம் ஆநிறைகளும் பூர்ண கும்பங்களும் எதிரில் வந்தன.

இந்த நல்ல சகுனங்களை வழியில் பார்த்து மார்க்கண்டேயர் ஸந்தோஷசித்தராய் ஜப்யேச்வர

க்ஷேத்ரமடைந்து ஜப்யேச்வரனை தர்சித்துக் கும்ப கோணம், மத்யார்ஜுனம் சென்று தர்சித்து அநவரதம் சந்திரசேகரனைப் பூஜிக்கும் ரிஷிக்கூட்டங்களினால் நிறைந்ததாயும் பலவிதமான விருக்ஷங்களினால் ரமணீயமாயுமிருக்கிற ச்வேதவனத்தை அடைந்தார்.

அந்த வனத்தில் சில மஹர்ஷிகள் சிறிது கண்ணை மூடிக்கொண்டு ஹ்ருதயகமலத்தில் நாகாபரணராயும் உமாபாகனுயுமிருக்கிற சந்திரசேகரனை தியானித்துக்கொண்டு தவம் செய்கிறார்கள். சில பிராம்மணோத்தமர்கள் குஹைகளில் தனியாக வீராஸனம், பத்ராஸனம், மயூராஸனம் என்று சொல்லப்பட்ட ஆஸனத்திலிருந்துகொண்டு நிஷ்டையில் இருக்கிறார்கள். சிலர் ச்ருக், ச்ருவம் என்று சொல்லப்பட்ட யாகஸாதகமான பாத்ரங்களை வைத்துக்கொண்டு பரிசுத்தமான யாகாக்நியில் ஆஹுதி செய்துகொண்டிருக்கிறார்கள். சிலர் சிவலிங்கத்தை திரிகரணசுத்தியாய் ஆராதித்துப் பரவசமாய் ஆனந்தபாஷ்பம் பெருக நர்த்தனம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

இவ்வித வைபவத்தோடு கூடிய ச்வேத வனத்தையடைந்து யக்ஷ, கந்தர்வ, கின்னராதி தேவதைகளால் ஸேவிக்கப்பட்டதாயும், ஸ்வயம் வ்யக்தமாயும், ஸர்வதா ரிஷிகளினால் ஆராதிக்கப் படுகிறதாயுமிருக்கிற லிங்கத்தை மார்க்கண்டேயர் தர்சித்தார். அந்த லிங்கத்தைப் பார்த்தவுடன் ஆனந்தக் கண்ணீர் மல்க புளகாங்கிதராய் தண்டத்தைப்போல் கீழே விழுந்து வணங்கி

பரவசராய் எழுந்து அஞ்ஜலி செய்துகொண்டு வேத வாக்யங்களால் ஸ்தோத்ரம் செய்தார். பிறகு ஸந்தோஷ சித்தராய் தேவமுநிவரான நாரத மஹரிஷியால் உபதேசிக்கப்பட்டபடி முக்காலமும் மணிகர்ணிகா நதியில் ஸ்நானம் செய்து தீவ்ரமான நியமத்தோடு கூடினவராய் சிரஸ், நெற்றி முதலிய இடங்களில் முறைப்படி திரிபுண்ட்ர தாரணம் பண்ணிக்கொண்டு ருத்ராக்ஷ மாலையால் அலங்கரிக்கப்பட்டிருக்கிற திருமேனியோடு கூடினவராய், ஹ்ருதய கமலத்தில் உமையவளால் ஆலிங்கனம் பண்ணப்பட்ட இடது பாகத்தை உடையவராயும், கழுத்தில் காலகூட விஷத்தை தரித்தவராயும், சந்திரனுல் அலங்கரிக்கப்பட்ட சிரஸ்ஸை உடையவராயும், யானைத் தோலைப் போர்த்திக்கொண்டிருக்கிறவராயும் உள்ள பரம சிவனை தியானம் செய்துகொண்டு ஜிதேந்திரியராய் ஒன்றையும் அறியாமல் தன் சரீரத்தை மறந்து அசைவற்ற மரம்போலிருந்துகொண்டு தபஸ் செய்தார். அப்போது அவருக்கு வயது பதினறு முடிந்துவிட்டது.

மார்க்கண்டேய ரிஷிக்கு 16 வயது பூர்த்தியானவுடன் யமதர்மராஜன் மஹிஷாரூடனுய் கையில் பாசத்தை தரித்து, அந்தகன், காலன், வைவச்வதன், மிருத்யு என்று சொல்லப்பட்ட தூதர்களோடு கூடினவனுய் அதிவேகமாய் சுவேதாரண்யம் வந்து ரிஷியின் புதல்வனுன மார்க்கண்டேயரைக் கிட்ட நெருங்கினுன். யமனின் வாஹனமான எருமைக் கடாவானது மிகுந்த பயங்கரமான சப்தத்துடன்

இடியென ஸந்தேஹிக்கும்படியாகக் கர்ஜித்தது. இடிமுழக்கம்போன்ற இச்சப்தத்தைக் கேட்டவுடன் மார்க்கண்டேய ரிஷியானவர் கண்ணைத் திறந்து முன்னால் நிற்கிற யமதர்மராஜாவைப் பார்த்து கொஞ்சமேனும் பயமில்லாதவராய் தைர்யத்துடன் கேட்டார்.

''ஹே யமதர்மனே! இங்கு ஏன் வந்தாய்? மஹரிஷிகள் மஹேச்வரனை மனதில் நினைத்து தவம் செய்யும்படியான இடம் இது என்பது உனக்குத் தெரியாதா? ஸமீபத்தில் நில்லாதே, எட்டிப்போ. இப்பொழுது நான் ஸ்நானம் செய்து விட்டு திரிபுரத்தை எரித்த முக்கண்ணனை ஈச்வரனைப் பூஜிக்கும்படியான ஸமயம். ஈச்வர ஆராதனத்திற்கு இடையூறு செய்கிற புருஷன் கோடைகால நதீஜலம்போல் நாசமடைந்துவிடு வான். நான் இந்த ஜகதீச்வரன் அருளைப்பெற்று தீர்க்காயுஸ்ஸை அடையாமல் போகமாட்டேன். நான் சிவபூஜை செய்யாமல் சாப்பிடமாட்டேன், தூங்கவும் மாட்டேன், வேறிடம் செல்லவும் மாட்டேன். இது என்னுடைய விரதம். முன்னமே உனக்குச் சொல்லிவிட்டேன். சிவாபசாரத்திற்கு உட்படாதே, ஓடிவிடு. ஏ பிரேதராஜனே! சிவ பக்தர்களுடைய சந்நிதியில் உன் கார்யம் ஒன்றும் நடவாது. உனக்கு அதிகாரத்தை கொடுத்தவராயும், உன்னைப் பிறப்பித்தவராயுமுள்ள பிரபுவை ஆரா திக்கும்படியான சமயம் நீ வரக்கூடாது.

ஏ சமன! எந்தப் பிரபுவின் ஆணையால் ஸூர்ய சந்திரர்கள் கதிமாறாமல் செல்கிறார்களோ;

எவரால் இந்த ஸகல ஜகத்தும் சிருஷ்டிக்கப் பட்டதோ, அப்பேர்ப்பட்ட பிரபுவின் அபசாரத் திற்கு ஆளாகாதே. எந்த பிரபுவின் ஆக்ஞைக்கு பயந்து சமுத்திரம் கரை தாண்டாமலிருக்கிறதோ, எவரது ஆக்ஞையால் காற்று வீசுகிறதோ; அப்படிப்பட்ட பிரபுவான பரமேச்வரனுக்கு அபசாரம் செய்யாதே.

உனக்குத் தெரியாதோ? இந்த சகலமான ஜகத்தையும் பஸ்மீகரம் பண்ணிக்கொண்டு வந்த தான காலகூட விஷத்தை சாப்பிட்டு சகல ஜீவராசி களையும் அவர் காப்பாற்றவில்லையோ? நீ இந்த ஜகத்துக்கு யமன். உனக்கு யமன் இந்த பிரபு என்றறியக்கடவாய். மேருமலையை வில்லாக கரத்தில் தரித்தவராயும், த்ரிபுரத்தையுமெரித்தவ ராயுமிருக்கிற இந்த பரமசிவனுடைய பக்தர்களுக்கு முட்டாள்தனமாய் ஏதாகிலும் அபராதம் செய்வா யாகில் உன் பிராணனை இழந்துவிடுவாய். ஏ மிருத்யுவே! ஈசுவராராதனம் செய்துகொண் டிருக்கிற என்னிடத்தில் உன் சாகஸம் செல்லாது. திரும்பிப்போ. அப்படிப்போகாமல் ஏதாகிலும் செய்வாயானல் இப்பிரபுவின் நெற்றிக்கண்ணுல் பஸ்மீகரமாகிவிடுவாய். சத்யமாகச் சொல்லு கிறேன். ஹே யமதர்மா! இப்பொழுது நீ பலாத்காரம் செய்து என்னைக் கூப்பிடாதே. நான் சந்திரசேகரனை ஆராதிக்கிறேன். அப்படி அவச்ய மாய் நான் வரவேண்டிய காரியமிருந்தால் கொஞ்ச நாழிகை வெளியில் இரு. நான் ஆராதனம் செய்த பிறகு இருவரும் போவோம்.

ஹே ஸூர்யகுமாரனே! புத்தி இல்லாமல் கெட்டுப்போகாதே. வீணில் நாசம் அடையாதே. பேசாமல் வெளியில்போய் இரு. எந்த முட்டாள் சக்கரவர்த்திக்குக் கோபம் வரும்படியாக காரியம் செய்வான். நாவினால் பட்டாக்கத்தியை நக்கலாமா; நான் சொல்வதைக் கேட்டு அதன்படி நட. இந்த மன்மதனை பஸ்மீகரம் செய்த இப்பிரபுவுக்கு கொஞ்சம் கோபம் உண்டாகி விடுமேயாகில் சகலமான புவன மண்டலமும் நாசம் அடைந்து விடும். எட்டு குலாசலங்களையும் சூர்ணம் பண்ணி ஏழு ஸாகரங்களையும் நாசம் செய்து விடுவார். அப்பேர்ப்பட்ட பரம புருஷனுடைய திவ்ய சரணாரவிந்தங்களை முனிவர்களின் உபதேசப் படி நான் பூஜிக்கிறேன். ஹே யமதர்மா! உன்னால் என்னை நிமிர்ந்து பார்க்கவும் முடியாது. சீக்கிரம் ஓடிவிடு. நீ வந்த காரியம் செல்லாது நில்லாதே. என்னைப் பார்த்து பற்களை மெல்லாதே. உந்தன் காரியம் வெல்லாது மல்லாந்துபோவாய் சொன்னேன் சொன்னேன்" என்று பயமில்லாமல் உரக்கச் சொல்லும்படியான ரிஷி புத்திரரைப் பார்த்து மஹா பயங்கரமான சப்தத்துடன் கர்ஜித்து ஸிம்ஹநாதம் செய்து பயங்கரமான முகத்தில் புருவத்தை நெறித்து திக்குவிதிக்குகள் செவிடுபட யமன் சொல்கிறான். "ஏ குழந்தாய்! நீ பேசுவது மிகவும் நன்றாயிருக்கிறது. ஆஹா, நீ சிவபூஜை செய்யும்படியான இடத்தில் நான் வரக்கூடாதோ. எனக்கு அவ்விடம் வர யோக்கியதை இல்லை என்று சிறுபிள்ளைத்தனத்தினால் சொல்லிவிட்டாய். ஹே

பாலகா! எனது பராக்கிரமம் உனக்குத் தெரியாது. எனக்கு கிருதாந்தன் என்று பெயர். எல்லா பிராணிகளையும் நாசம் பண்ணுகிறவன். உலகில் எங்கும் என் பெயர் பிரஸித்தமானது. ஒரு காரியத்தைச் செய்ய நான் நினைத்துவிட்டால் என் முன்னால் ஈச்வரனோ, விஷ்ணுவோ, பிரம்மாவோ யாரானாலும் என்னை எதிர்த்து நிற்க முடியாது. உலகில் எந்த பிராணியும் தனது ஆயுளுக்குமேல் ஒரு நிமிஷம் கூட பூமியில் இருக்க நான் விடமாட்டேன். என்னுடைய பயங்கரமான பாசத்தினால் கட்டுப்பட்டவர்களாய், கண்டத்தில் சிலேஷ்மமானது கட்டி இழுக்க, 'ஏ புத்திரர்களே! ஏ மனைவியே! ஏ பந்துக்களே!' என்று கதறி அழுதுகொண்டிருக்கிற ஜீவர்களை என் வசமாக்குகிறேன்.

அடே துர்புத்தியே! என் பராக்கிரமம் அறியாமல் கண்டபடி பிதற்றினாய். ஈச்வரனை பூஜிக்கும்படியான உன்னை யாரும் எதிர்க்க முடியாதென்று கர்வம் கொண்டாய். முட்டாளே! இப்பொழுதே உன்னை என் பாசத்தினால் கட்டி இழுத்து என் உலகம் போய்ச்சேருகிறேன் பார்" என்று சொல்லிக்கொண்டே முகத்தில் கோபாக்னி ஜ்வலிக்க, கண்களில் நெருப்புப்பொறி பறக்க, செம்பட்டை மயிர்கள் ஈட்டிபோலுயர்ந்து நிற்க, அதிகூர்மையான கோரைப்பற்களினால் உதட்டைக் கடித்து இரண்டு கைகளையும் ஓங்கி அடித்து, மீசைகள் படபடவென்று துடிக்க சீக்கிரமாய் எருமைக் கடாவை முடுக்கி கரத்தில் பாசத்தை

எடுத்து அடித்து ஆக்திரத்துடன் கொஞ்சமேனும் கருணை இல்லாமல் ரிஷிபுதல்வரான மார்க்கண்டேய ரிடத்தில் பிரயோகம் பண்ணிவிட்டான்.

மஹாகுரூரமான யமபாசத்தால் கட்டுப்பட்ட மார்க்கண்டேயர் கொஞ்சம் பயமடைந்தவராய் உடனே சிவலிங்கத்தைக் கெட்டியாக காடா லிங்கனம் பண்ணிக்கொண்டு, ''ஏ பிரபோ! தீன பந்தோ! ஏ ஆச்ரித ஜனரக்ஷகா! சம்போ! என்னைக் காப்பாற்றவேண்டும்'' என்று கதறினார். உடனே அந்த லிங்கத்திலிருந்து பனிமலைக்குச் சமமான சரீர காந்தியோடு கூடினவராய் பரமசிவன் ஆவிர்பவித்து மிகுந்த கோபத்துடன் யமதர்மன் மார்பில் இடது காலால் உதைத்துக் கீழே தள்ளி சூலாயுதத்தால் குத்தித்தள்ளினார். உடனே மார்க்கண்டேயர் மேலிருந்த பாசக்கயிறு அறுபட்டு யமனுனவன் திடீரென்று கீழே விழுந்து மரணத்தை யடைந்தவுடன் பயமற்றவராய் ஆச்சர்யத்துடன் பிரபுவை நமஸ்கரித்து ஸ்தோத்ரம் செய்தார்.

''ஹே ஜெகதீசா! சந்த்ரமௌளீச்வரா! கிருபாநிதே! சனகாதியோகிகளால் பூஜிக்கப் படுகிறவரே! பார்வதீ பாகா! உன்னை நமஸ்கரிக் கிறேன். பிரும்மாவினுல் அநேககாலம் தேடியும் காணமுடியாமலிருந்த தங்கள் திருவடிகளை இன்று பார்த்தேன். என் பாக்யமே பாக்யம். என் ஜன்மம் சிலாக்யம். ஏ பிரபுவே!'' என்று இரு கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பெருக கூத்தாடி மெய்மறந்து நிற்கும்படியான மார்க்கண்டேயரை மிகவும் கருணையுடன் பார்த்து, 'ஏ வத்ஸ, உனக்கு

என்ன வரம் வேண்டும்? கேட்பாயாக; உன் த்வத்தால் சந்தோஷமடைந்தேன்' என்று சொல்லும்படியான ஈச்வரனை நமஸ்கரித்து ரொம்பவும் சந்தோஷசித்தராய், பிரும்மாதிகளாலும் அடையமுடியாததான ஆயுளை அடியேனுக்கு அளிக்கவேண்டுமென்று பக்தசிகாமணியான மார்க்கண்டேயர் கேட்டார். ஈச்வரன் புன்சிரிப்புடன் 'நீ எப்பொழுதும் பதினாறு வயதுள்ளவனாக இருக்கக்கடவாய்' என்று அனுக்ரஹித்து மின்னல் ஒளிபோல் லிங்கத்தினுள் மறைந்துவிட்டார்.

உடனே தேவகணங்கள் நான்கு பக்கங்களிலும் புஷ்பமாரி வர்ஷிக்க துந்துபிவாத்யம் முழங்க அப்ஸர ஸ்திரீகள் நாட்டியமாடினார்கள். பிறகு தேவகணங்களினால் பிரார்த்திக்கப்பட்டவராய் மறுபடியும் மஹேச்வரன் தோன்றி யமதர்மனை பிழைப்பித்து 'அடே யமா! ஜாக்கிரதையாக இரு. இவ்விதமான அபசாரங்களைச் செய்யாதே' என்று சொல்லி மறுபடியும் மறைந்தார்.

மார்க்கண்டேயர் சந்த்ரகலையை ஜடாபாரத்தில் தரித்தவரான பரமசிவனுடைய அனுக்ரஹத்தால் தீர்க்காயுஸ்ஸையடைந்து யக்ஷ கந்தர்வ கின்னர தேவகணங்களினால் துதிக்கப்பட்டவராய் புத்திரனைப் பிரிந்து மனவருத்தத்தோடுகூடினவர்களாக இருக்கிற மாதா பிதாக்களை நமஸ்கரிக்க வேண்டும் என்கிற எண்ணத்தோடுகூடினவராய் ச்வேதாரண்யத்திலிருந்து புறப்பட்டு ஆம்ர வனத்தையடைந்து தனது தாய் தந்தையர்களின் பாதகமலங்களை நமஸ்கரித்தார்.

இவ்விதம் நமஸ்கரித்த குழந்தையை மிகவும் சந்தோஷத்துடன் பெற்ருேர்கள் கைகளிளுல் இறுகக் காடாலிங்கனம் பண்ணிக்கொண்டு மடியில் உட்காரவைத்து உச்சிமுகர்ந்து முத்தமிட்டு புத்திரன் முகத்தைப் பார்த்து துக்கத்தை விட்டு பரமசந்துஷ்டர்களாய் நடந்த விருத்தாந்தங்களைக் கேட்டு மேலும சந்தோஷமடைந்தார்கள்.

சௌனகாதி மஹர்ஷிகளே! ரிஷிபுத்திரரான மார்க்கண்டேயர் திரிபுரத்தை எரித்தவரான பரமசிவனுடைய பூஜாபலத்திஞல் ஜகத் பிரளயத்திலும் அழிவற்றவராய் அனேகம் பிரும்மப் பிரளயங்களைப்பார்த்துக்கொண்டு இருக்கிருர். மிருகண்டு முனிவரும் தன் புத்திரனேடுகூட இருந்து கிருஹஸ்தாச்ரமத்தை சரிவர நடத்திப் பின்னர் காட்டையடைந்து ஞானத்தைப்பெற்று மோக்ஷானந்தப் பெரும்பதவி அடைந்தார்.

இந்த மார்க்கண்டேயரின் சரித்திரத்தை எவர்கள் பக்திசிரத்தையுடன் கேட்கிருர்களோ, படிக்கிருர்களோ, அவர்களுக்கு அபமிருத்யு பயம் கிடையாது. ஆரோக்யம், ஸந்தானம், ஐச்வர்யம் முதலான எல்லா பாக்யங்களையும் இவ்வுலகில் அடைந்து, உத்தமபதத்தையடைவார்கள்.

எட்டாவது அத்யாயம் முற்றும்

—௦—

ஒன்பதாவது அத்யாயம்

சௌனகாதி மஹரிஷிகள் மறுபடியும் ஸூத முனிவரைப் பார்த்து ஸகல புராணங்களையும் அறிந்தவரான ஹே சூதரிஷியே! ஈசுவரன் கோபம் அடைந்து சாபம் கொடுக்கும்படியாக பிரஹ்மா வானவர் ஏன் பொய் சொன்னார். இந்த கதையை விஸ்தாரமாகச் சொல்லவேணும் என்று கேட்க ஸூதர் சொல்கிறார்.

முன்னொரு சமயம் க்ஷீராப்தியில் சயனம் பண்ணிக்கொண்டிருக்கிற மஹாவிஷ்ணுவின் நாபீ கமலத்திலிருந்து பிரும்மாவானவர் தோன்றினர். அவர் தனக்கு ஆதாரமாயிருக்கிற தாமரைப் புஷ்பத்தைப் பார்த்து அதன் உற்பத்திஸ்தானம் தெரியாதவராய் அதைப் பார்ப்பதற்கு தாமரைக் கொடியின் வழியாக உள்ளுக்குள் சென்றார். தேவ மானத்தில் 100 வருஷ காலம் உள்ளே சுற்றிச்சுற்றி வந்து பேரிருளில் ஒன்றும் தெரியாதவராய் அத் தாமரைக்கொடியின் முள்ளினால் சரீரம் புண்பட்டு மனம் நொந்து மறுபடியும் 100 வருஷம் கழிந்து சிரமப்பட்டு முன்னிருந்த இடத்திற்கே வந்து சேர்ந்தார்.

சமுத்திரத்தின் அலைகளினாலும், காற்றினாலும் தான் இருக்கும் தாமரைப் புஷ்பமானது ஆடவே அதனால் மிகுந்த பயத்தையடைந்தவராய் தாமரை மலரை கைகளினால் கெட்டியாகப் பிடித்துக்

கொண்டு நடுநடுங்கி அழுதார். இவ்விதம் அழுது கொண்டிருந்த பிரும்மாவைப் பார்த்து மஹா விஷ்ணுவானவர் மத்ஸ்யரூபமெடுத்து ஓம் என்று பிரணவத்தை உச்சரித்தார். அதைக்கேட்ட பிரும்மாவானவர் புஷ்பத்தில் இருந்துகொண்டே அநேக காலம் பிரணவத்தை தியானம் செய்து கொண்டிருந்தார். பிறகு பிரும்மாவிற்கு ஸகலமான வேதங்களும் அதன் அங்கங்களும் உபாங்கங்களும் மனதில் நன்கு விளங்கியது. பிறகு இந்த வேதங் களின் அர்த்தங்களை சிந்தித்து இந்த உலகை ஸிருஷ்டிபண்ணினர்.

ஸ்தாவர ஜங்கம ரூபமான இந்த ஜகத்தை சிருஷ்டித்த பிரும்மாவானவர் சிவமாயையால் மோகிக்கப்பட்டு தமோகுணத்தையடைந்து 'நான் தான் இந்த ஜகத்துக்குக் கர்த்தா. என்னிடத் திலேயே இந்த ஜகத்துக்கள் மறைகிறது. எனக்கு சமமான புருஷன் ஒருவனும் கிடையாது. நான் தான் சகல தேவதைகளினுலும் ஆராதிக்கப் படுகிறவன். சகலமான தேவதிர்யங்மனுஷ்ய பிராணிகளை நானே சிருஷ்டித்தேன். ஆகையால் நான்தான் ஜகத்துக்கு ஈச்வரன்' என்று மனதில் எண்ணி மகாகர்வத்தையடைந்தார்.

சில காலம் சென்றவுடன் தாமரைக்கண்ண ஞன மகாவிஷ்ணு பிரும்மாவின் முன்னுல் தோன்றினுர். உடனே பிரும்மா மிகவும் கர்வத் தோடுகூட 'நீ யார்' என்று கேட்க; மகாவிஷ்ணு வானவர் 'நீ யார்' என்று திருப்பிக்கேட்டார்.

உடனே பிரம்மாவானவர் 'ஸகல ஜகத்துக்கும் சிருஷ்டிகர்த்தா நானே. சகல உலகிற்கும் ஈச்வரன் நான். என்னுடைய உத்திரவுக்குக் கட்டுப் பட்டவன் நீ' என்று சொன்னூர். உடனே விஷ்ணு வானவர் கோபத்தினுல் கண்கள் சிவந்து பிரும்மா வைப் பார்த்து 'ஏ பிரும்மனே! உன்னைப் பிறப்பித் தவன் நானே. உனக்கு பிரணவத்தை உபதேசித் தவனும் நான்தான். சகலமான வேதங்களும் பிரணவத்தினுள் அடங்கியிருக்கிறது. அதை நான் உனக்கு உபதேசித்த பிறகுதான் அதனுடைய அர்த்தம் உனக்குத் தெரிந்து லோகத்தை சிருஷ்டி பண்ணும் சக்தி ஏற்பட்டது. இல்லாவிடில் உன்னுல் முடியாது. ஆகையால் நான்தான் ஜகத்துக்கு ஈச்வரன்' என்று சொன்னூர். உடனே இருவருக் கும் மகாபயங்கரமான யுத்தம் ஏற்பட்டது.

இவ்விதம் முடிவில்லாமல் யுத்தம் நடக்க சகல மான தேவதைகளும் பிரும்ம விஷ்ணுக்களைப் பார்த்து என்ன நடக்குமோ! என்று மிகவும் பயந்து கலக்கத்துடன் ஈச்வரனை சரணுகதியடைந்தார்கள். உடனே ஈச்வரன் இவர்கள் யுத்தம் செய்கின்ற இடம் வந்து பிரும்மவிஷ்ணுக்களின் நடுவில் ஆகாயத்திலும் பூமியிலும் வியாபித்து ஒரே ஜ்யோதிர்மயமான லிங்கஸ்வரூபமாய் இவர் களுடைய கர்வத்தை அடக்கவேண்டித் தோன்றினூர். உடனே பிரும்மவிஷ்ணுக்கள் இதைக்கண்டு மிகுந்த ஆச்சர்யத்தையும் பயத்தை யும் அடைந்தவர்களாய் யுத்தத்தை விட்டுவிட்டு மௌனமாகத் தலைகுனிந்து நின்ருர்கள்.

உடனே பிரபுவான ஈச்வரன் விருத்த வேஷம் பூண்டு பிரும்மவிஷ்ணுக்களின் அருகில் வந்து அவர்களைப்பார்த்து, "ஹே பிரும்மவிஷ்ணுக்களே! எதற்காகச் சண்டை போடுகிறீர்கள். என் வார்த்தையைக் கேளுங்கள். இதோ முன்னால் தெரிகிறதே கோடி சூர்ய பிரகாசமுள்ள லிங்கம்; இந்த லிங்கத்தின் சிரஸ்ஸையாவது, அடியையாவது எவர்கள் பார்க்கிறார்களோ, அவர்கள்தான் இந்த லோகத்திற்கு ஈச்வரன் ஆகமுடியும்". என்று சொன்னார்.

இதைக்கேட்டதும் அதிசீக்கிரமாக விஷ்ணுவானவர் வராஹரூபமெடுத்து பாதாளலோகம் சென்றார். உடனே பிரும்மா ஹம்ஸரூபமெடுத்து தன்னிரு சிறகுகளினாலும் ககன மார்க்கத்தில் சென்றார். மஹாவிஷ்ணுவானவர் தன்னுடைய கூர்மையான கோரைப் பற்களினால் பூமியைப் பிளந்துகொண்டு பாதாளலோகம் வரையில் சென்று அதன் அடியைப் பார்க்க சக்தியற்றவராய் மிகவும் துக்கத்தையடைந்து அந்த விருத்தரின் சமீபம் வந்து எவ்வளவு தேடிப்பார்த்தும் என்னால் லிங்கத்தின் அடியைப்பார்க்க முடியவில்லை என்று சொல்லி கர்வத்தைவிட்டுப் பேசாமலிருந்தார்.

ஒன்பதாவது அத்யாயம் முற்றும்.

பத்தாவது அத்யாயம்

—:O:—

ஹம்ஸரூபியாய் ஆகாச மார்க்கத்தில் பறந்து சென்ற ப்ரம்மாவானவர் தன்னுடைய ஸத்யலோகம் வரையில் சென்று சிரஸைக் காணுமல் அதற்கு மேலும் சென்று தேடிப் பார்த்தும் காணமுடியாமல் மேலும் பறக்க சக்தியில்லாமல் போகவே மிகுந்த துக்கமடைந்து 'ஆஹா என்ன ஆச்சர்யம்! நாம் இவ்வளவு தூரம் வந்தும் இன்னும் இந்த லிங்கத்தின் சிரஸ் தெரியவில்லையே. இந்த லிங்கத்தின் முடியானது ஆகாயத்தில் எவ்வளவு தூரத்திலிருக்கிறதோ அதுவும் தெரியவில்லை. மேலும் சென்று பார்க்கவும் எனக்கு சக்தியில்லையே' என்று மனங்கலங்கி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் ஜ்யோதிர் லிங்கத்தின் சிரஸ்ஸிலிருந்து தாழம்பூ ஒன்று நழுவி விழுந்தது.

அதைப் பார்த்ததும் பிரும்மாவானவர் 'ஏ தாழம்பூவே! நீ எவ்விடமிருந்து வருகிருய்?' என்று கேட்டார். உடனே பிரும்மாவைப்பார்த்து தாழம்பூவானது 'ஓ சதுர்முக! நான் இந்த ஜ்யோதிர்லிங்கத்தின் சிரஸிலிருந்து வருகிறேன். அங்கிருந்து கிளம்பியபிறகு அநேக பிரும்மகல்பம் முடிந்துவிட்டது. இன்னமும் பூலோகத்தைக் காணேம். இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறதோ தெரியவில்லை?' என்று சொல்லிற்று.

இதைக்கேட்டு பிரும்மாவானவர் தாழம்பூவைப் பார்த்து ''ஏ புஷ்பமே! எனக்குக் கொஞ்சம் நீ

உதவி செய்யவேண்டும். இச்சமயம் நீ எனக்குக் கைகொடுத்தால் நான் தேவதாகணங்களினுல் கௌரவிக்கப்படுவேன். இல்லாவிடில் பெரிய அவமானம் வந்துவிடும். தேவலோகத்தில் எனக்கும் விஷ்ணுவுக்கும் 'இம்மூவுலகிற்கும் ஈச்வரன் நான்தான், நான்தான்' என்று வாக்குவாதம் உண்டாயிற்று. அச்சமயம் எங்களிருவருக்கும் நடுவில் இந்த லிங்கம் தெரிந்தது. உடனே அதன் சமீபத்தில் நியாயாதிபதியான ஒரு கிழவர் தோன்றி உங்களிருவருக்குள் வீண்சண்டை வேண்டாம். இந்த லிங்கத்தின் சிரஸ்ஸையோ, பாதத்தையோ எவர்கள் பார்க்கிருர்களோ, அவர்கள்தான் பெரியவர்கள்" என்று சொன்னுர். உடனே நான் ஹம்ஸரூபம் எடுத்துக்கொண்டு ஆகாயத்தில் முடியைக் காணும்பொருட்டு வந்தேன். இவ்வளவு தூரம் வந்தும் காணமுடியவில்லை. ஆகையால் நான் திரும்பி தேவலோகம் சென்று இந்த லிங்கத்தின் சிரஸ்ஸைப் பார்த்துவந்ததாகச் சொல்கிறேன், நீ அதற்கு உதவியாக 'இவர் பார்த்தார், அங்கிருந்துதான் நாங்களிருவரும் வருகிருேம்' என்று நீ சாக்ஷி சொல்லவேண்டும். இவ்விதம் நீ உதவி செய்வாயாகில் நான் இம்மூவுலகிற்கும் ஈச்வரனுவேன்" என்று சொல்ல தாழம்பூவானது அதற்கு சம்மதித்து அப்படியே செய்கிறேன் என்றது.

இவ்விதம் தாழம்பூவானது சொன்னவுடன் பிரம்மா சந்தோஷசித்தராய் கீழே இறங்கி தேவதைகளின் சமீபம் வந்து 'நான் இந்த லிங்கத்தின்

சிரஸ்ஸைப் பார்த்துவந்தேன். இத்தாழம்பூவுக்கும் தெரியும்' என்ருர். உடனே புஷ்பமானது 'ஆமாம் இது சத்யம் பிரும்மாவானவர் உண்மையாகவே பார்த்தார்' என்றது. இவ்வாறு புஷ்பம் சொன்ன வுடன் பிரம்மாவுக்கு முன்னிலும் பன்மடங்கு கர்வம் உண்டாயிற்று. உடனே பிரஹ்மாவானவர் தேவ சபையில் விஷ்ணுவின்முன்சென்று 'ஏ விஷ்ணுவே! நான்தான் ஜகத்கர்த்தா. என்னைவிட உலகில் பெரியவன் இல்லை. உன்னையும் மற்றுமுள்ள தேவகணங்களையும் படைத்தவன் நானே' என்று சொல்லி ஹரியை அவமதித்தார். விஷ்ணுவானவர் ஒன்றும் தோன்ருமல் தலைகுனிந்து மௌனமாக இருந்தார்.

வருங்காலமறியாத பிரும்மாவானவர் ஸர்வேச்வரன் ஸன்னிதியில் பொய் சொல்லி நான் பெரியவன் நான் பெரியவன் என்று தன் அந்தரங்க பக்தனுன மஹாவிஷ்ணுவை அவமானப்படுத்துகிறதை கொஞ்சமும் ஸஹிக்காத பரமேச்வரன் மிகுந்த கோபத்துடன் லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு கண்கள் சிவந்து நெருப்புப் பொறி பறக்க பிரும்மாவைப் பார்த்துச் சொன்னுர்.

''ஏ பிரும்மனே! எனது சிரஸ்ஸை நீ பார்க்காமலேயே பார்த்ததாகப் பொய் சொல்கிருய். என் ஸன்னிதியில் தாழம்பூவை பொய் சாக்ஷி சொல்லும்படி நிர்பந்தித்து நீ கொஞ்சமேனும் பயமில்லாமல் பொய் சொன்னபடியால் எந்த பிரணவார்த்த ஞானத்தினுல் உலக சிருஷ்டிபண்ணும்படி

யான சக்தியானது உனக்கு ஏற்பட்டதோ அந்த பிரணவார்த்தம் மறந்து போகக்கடவது. உலகை சிருஷ்டிக்க சக்தியற்றவனாக நீ ஆகக்கடவாய்".

இவ்வாறு பிரும்மாவை சபித்து உடனே தாழம் பூவைப் பார்த்து, 'ஏ தாழம்பூவே நீ யாதுகாரணத் தினால் பிரும்மாவுக்கு உடன்பட்டு பொய்சாக்ஷி சொன்னாயோ அதனால் நீ என் பூஜைக்கு அர்ஹதை யில்லாதவனாகக் கடவாய்' என்று தாழம்பூவிற்கும் சாபம் கொடுத்துவிட்டு 'ஏ தேவர்களே! எவன் இந்த தாழம்பூவினால் என்னை அர்ச்சிக்கிறானோ; அவன் என் அனுக்ரஹத்தைப் பெறமாட்டான். துன்பத்தையேயடைவான்' என்று உத்தரவிட்டார்.

இவ்விதமாக பிரஹ்மாவிற்கும் புஷ்பத்திற்கும் சாபம்கொடுத்துவிட்டு கோபாக்னியால் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் பரமேச்வரனைப் பார்த்து பிரும்மா நடுநடுங்கி கண்களில் நீர்மல்க பிரபோ! நான் செய்தது தவறு க்ஷமிக்க வேண்டுமென்று கூறி சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஸ்தோத்ரம்செய்தார்.

"ஏ பிரபோ! தேவகணங்களின் கிரீடங்களில் இழைக்கப்பட்ட நவரத்னங்களினால் உண்டான பிரகாசத்தால் நீராஜனம் பண்ணப்படும் பாத பத்மங்களையுடையவரே! தாங்கள் சகல ஜகத்துக் கும் ஆதாரபூதரென்று தெரியாமல் அக்ஞானத்தால் புத்தியிழந்து விட்டேன். ஏ பரமபுருஷா! ஹே முக்கண்ணா! ஏ த்ரிபுரமெரித்தவரே! ஏ தேவ தேவா! வேதங்களினால் ஸ்தோத்ரம் பண்ணப் படுகின்றவரே! ஏ சம்போ! ஹே தயாநிதே!

நீயே பிரும்மஸ்வரூபி. உன்னை உபாசிக்கிறவர்களுக்கு சம்சாரபயம் கிடையாது. ஏ பிரபோ! விஷ்ணுவினுல் காணமுடியாத இந்த பாதபங்கஜங்களை பாக்யவசத்தால் நான் கண்டேன். ஆகையால் நான் கிருதார்த்தன். இன்று என் ஜன்மம் ஸபலமானது. ஏ தேவதேவா! என் அபசாரத்தை க்ஷமிக்கவேணும்.''

இவ்விதமாக பிரும்மா நான்கு முகங்களினுலும் ஸ்தோத்ரம் செய்தவுடன் பரமசிவன் கோபத்தை விட்டு சாந்தமடைந்து பிரும்மாவைப் பார்த்துச் சொல்கிருர்.

பத்தாவது அத்யாயம் முற்றும்.

பதிேைருவது அத்யாயம்

—:O:—

ஈசுவரன் சொல்கிருர்–''ஹே பிரும்மாவே! உன் ஸ்தோத்திரத்தால் சந்தோஷம் அடைந்தோம். பூலோகத்தில் எனக்கு எப்பொழுதும் பிரீதிகரமான ஆம்ரவணமென்கிற க்ஷேத்ரம் சென்று என்னை பூஜிப்பாயாகில் அவ்விடத்தில் நான் பிரஸன்னமாகி உனது சாபத்தை விமோசனம் செய்வேன். அந்த க்ஷேத்திரம் இருக்குமிடம் கூறுகிறேன். பூலோகத்தில் தெற்கு திக்கில் தண்டகாரண்யத்தில் காவேரி நதிக்கு வடக்குக் கரையில் ஜப்யேசுவர க்ஷேத்ரம் என்னும் திருவையாற்றிற்கு இரண்டு யோஜனைக்கு மேற்கு திக்கில் கொஞ்சம் வாயுமூலையில் தபஸ்

களால் நிறைந்ததாயும் எப்பொழுதும் எல்லா மலர்களாலும் சோபிக்கிறதாயுமுள்ள ஆம்ரவணமென்று ஒரு க்ஷேத்ரமிருக்கிறது. அந்த க்ஷேத்திரத்தில் நான் ஸ்வயம்புலிங்கஸ்வரூபியாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறேன்.

கிருதயுகத்தில் சுத்தரத்னமயமாயும் திரேதாயுகத்தில் மரகதமாயும், துவாபரயுகத்தில் ஸ்படிகமாயும், இக்கலியுகத்தில் ருத்ராக்ஷத்திற்கு ஸமமாயும் இந்த லிங்கமானது பிரகாசிக்கிறது. அந்த லிங்கத்தில் எப்பொழுதும் நான் சாந்நித்யத்தை அடைந்திருக்கிறேன். அவ்விடம் லிங்கஸ்வரூபியாக இருக்கும் என்னை ஒருதடவையாவது எவன் வணங்குகிறானோ; பூஜிக்கிறானோ; அவன் சகல பாபங்களிலிருந்து விடுபட்டவனாய் புண்யலோகமடைகிறான். அவன் என் கணங்களுக்குத் தலைவனாகிறான். அவ்விடத்தில் என் ஸன்னிதானத்தில் எந்த எந்த பலன்களைக்கோருகிறானோ; அந்த அந்த இஷ்ட பலன்களைக்கொடுத்து நான் ரக்ஷிக்கிறேன். காவேரிக் கரையில் ஒரு அணிகலம்போல் விளங்குகிற ஆம்ரவணத்தில் தான் எனக்கு மிகவும் பிரீதி. இவ்விடம் இருக்கும் பிரியம் காசி க்ஷேத்திரம், கேதாரம் முதலிய இடங்களில்கூட எனக்குக் கிடையாது. ஆகையால் பிரும்மாவே! நீ அவ்விடம் சென்று உன்னைப்போல் அனேகமாயிரம் பிரும்மாக்களினால் பூஜிக்கப்பட்ட லிங்கத்தை ஆராதிப்பாயாகில் உனக்கு ஸர்வாபீஷ்டமும் நிறைவேறும்" என்று சொல்லி ஈசுவரன் மறைந்தார்.

அந்த வார்த்தையைக்கேட்ட பிரும்மாவானவர் கொஞ்சம் வெட்கத்தினுல் தலைகுனிந்து நமஸ்கரித்து உடனே ஆம்ரவண க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டார். இவ்விதம் தவம் செய்யவேண்டி புறப்பட்ட பிரும்மா தபோலோகம், ஜனலோகம், மஹர்லோகம், சுவர்லோகம், புவர்லோகம் இவைகளைத்தாண்டி பூலோகம் வந்து ஜம்பூத்வீபம் சென்று தண்டகாரண்யம் வந்து காவேரி நதியின் வடக்குக்கரையில் பிரும்ம தேஜஸ்ஸினுல் பிரகாசிக்கிறவர்களாயும், ஜலம் காற்று இவைகளையே உணவாகக்கொண்டு தவம் செய்கிறவர்களாயும் யாகாக்னியில் ஹோமம் பண்ணிக்கொண்டிருப்பவர்களாயுமிருக்கிற ரிஷிக்கூட்டங்கள் நிறைந்த ஆம்ரவணத்தையடைந்தார்.

அங்கு சருகுகளையே ஆகாரமாக உட்கொண்டு நித்திரையில்லாமல் பகவத்தியானம் செய்கிறவர்கள் சிலபேர்கள். பத்திராஸனம் மயூராஸனம் பத்மாஸனம் முதலிய ஆசனங்களில் இருந்து யம நியமாஸன பிராணுயாம பிரத்யாஹார தாரணு த்யான ஸமாதிரூபமான அஷ்டாங்கயோகங்களை அப்யசிக்கிறவர்கள் சிலபேர்கள். சில இடங்களில் மகாபரிசுத்தமான சிவ கதைகளை ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு மகிழ்ந்துகொண்டு இருக்கிருர்கள்.

இவ்வாறு சகல இடங்களிலும் வேதகோஷம் யாகாக்னியின் புகை, நாமபஜனகோஷம், இவைகளால் எப்பொழுதும் நிறைந்ததாயும், மான்

முதலிய மிருகக் கூட்டங்களினுல் நிறைந்ததாயும், எங்கும் சீதளமாயும் மனேக்ஞமாயும் சாக்ஷாத் சிவபெருமானுடைய கைலாசமலையைப் போல் ரமணீயமாயுமிருக்கிற ஆம்ரவணம் வந்தமாத்திரத்தில் சாபத்தினுல் துக்கமடைந்திருக்கும் பிரும்மாவினுடைய சித்தமானது அப்பொழுதே சகல துக்கங்களும் நீங்கி சந்தோஷமடைந்தது.

உடனே அவ்விடமிருந்த மகரிஷிகளெல்லோரும் அர்க்யபாத்ய ஆசமனீயாதிகளால் பிரம்மாவை உபசரித்து வணங்கினுர்கள். பிறகு பிரஹ்மா அவ்விடத்திலிருக்கின்ற பரிசுத்தமான ஜலத்தோடு கூடிய நதியில் ஸ்நானம் செய்து, சுத்தமான பட்டு வஸ்திரமுடுத்தி பஸ்ம ருத்ராக்ஷதாரியாக சுத்த ரத்னேச்வரரை தரிசித்தார். தரிசித்த மாத்திரத்தில் பரமசந்துஷ்டராய் மெய்சிலிர்க்க பகவானை ஸ்தோத்திரம் செய்தார்.

‘‘லோகத்தில் சிரேஷ்டமானவரும் ஆச்ரயித்த பக்தர்களுக்கு ஸர்வாபீஷ்டமும் அளிக்கிறவராயும், எங்கும் விளங்குகிறவராயுமிருக்கிற ஹே பிரபோ! திரிசூலதரா! திரிபுரமெரித்தவா! ஏ ஆதிதேவா! ஆம்ரவணத்தில் பிரகாசிக்கிற உன்னை நமஸ்கரிக்கிறேன். ஏ பிரபோ! இந்த மாமரத்தின் (மூலத்தில்) அடிவேரில் இந்த ஜகத்திற்கு அடிவேராக இருக்கிற நீர் பிரகாசிக்கிறீர். இந்த சகல ஜகத்திற்கும் நன்மை செய்கின்றவரான தங்களை எந்த ஜனங்கள் ஆச்ரயிக்கிருர்களோ, அவர்களிடம் ஸகலமான அபீஷ்டங்களும் நதிகள் சமுத்ரத்தை

யடைவதுபோல் வந்தடைகின்றன. சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற முத்தொழிலும் செய்ய வல்லமையுள்ளவரே! ஈசா! உனக்கு அனந்த கோடி நமஸ்காரம்"

இவ்விதமாக ஸ்தோத்ரம் செய்து ஜிதேந்திரியராய் மனதை ஒருவழிப்படுத்தி அவ்விடத்தில் ஆம்ரவணேசனை பக்தியுடன் பூஜித்தார்.

பிறகு சந்திரகலாதரராயும், கழுத்தில் கருப்பான காலகூட விஷத்தை தரித்தவராயும் நெற்றியில் பிரகாசிக்கும் நேத்திரமுடையவராயும் இடது பாகத்தில் பார்வதீ தேவியோடு கூடினவராயும், சர்ப்பங்களை ஆபரணமாக அணிந்தவராயும் கங்காநதியின் அலைக்கூட்டங்களினால் அசைக்கப்பட்டுக்கொண்டிருக்கிற ஜடாமுடியை தரித்தவராயும், யானைத்தோலை இடையில் தரித்தவராயும், கையில் பிடிக்கப்பட்ட அஜகவமென்ற தனுஸ்ஸையுடையவராயும் இருக்கும் பரமசிவனை ஹ்ருதய கமலத்தில் தியானித்து தவம் செய்தார். தவம் செய்துகொண்டிருந்த பிரும்மாவானவர் ஒன்றும் அறியாதவராய் கிரமமாக ஞான ஸ்வரூபியாய், பிரகாசித்துக்கொண்டிருந்தார். இப்படியே 1000 வருஷங்கள் சென்றுவிட்டன.

பிறகு ஈச்வரன் பிரும்மாவின் தவத்துக்கு சந்தோஷித்து சுத்தரத்னேச்வர லிங்கத்தினின்றும் ஆவிர்ப்பவித்தார். சரத்காலமேகம்போன்ற சரீரமுள்ளவராயும் செந்தாமரைக்குச் சமானமான திருமுகமண்டலத்தோடுகூடினவராயுமிருக்கிற பரம

சிவன் ஆவிர்பவித்தமாத்திரத்தில் ஆகாயத்தில் ஜய ஜயவென்ற சப்தம் முழங்க கந்தர்வ கின்னராதி தேவதாகணங்கள் பாடினூர்கள். தேவரிஷியான தும்புரு நாரதர் முதலான சகல ரிஷிகளும் கைகளால் தாளம்போட்டுக்கொண்டு கழுத்தில் உள்ள ருத்ராக்ஷ மாலையசைய நர்த்தனம் செய்தார்கள். ரம்பை, ஊர்வசி, திலோத்தமை முதலானவர்கள் நாட்டியமாடினூர்கள். தேவதுந்துபி வாத்யம் முழங்கிற்று. தேவதைகள் கல்பகவிருக்ஷத்திலிருக்கின்ற புஷ்பங்களை வாரிவாரி இறைத்தார்கள்

உடனே பிரும்மாவானவர் நிஷ்டை கலைந்து கண்விழித்து பரமேசுவரனைப் பார்த்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கண்களில் ஆனந்த பாஷ்பம் பெருக தழதழத்த குரலுடன் "ஹே பிரபோ! ஈசா! விஷத்தையுண்டதால் கருப்பான கழுத்தையுடையவரே! முக்கண்ணு! இடது பாகத்தில் பார்வதியை தரித்தவரே! பரமபுருஷா! சம்போ! தேவதாசார்வபௌமா! ஜகதீசா! ஜடா முடியில் சந்திரனை தரித்தவரே! யமனை ஸம்ஹரித்தவனே! காலகாலா! ஆதிதேவா! உன்னை நமஸ்கரிக்கிறேன். லோக சிருஷ்டி என்ற உத்யோகத்தாலேற்பட்ட கர்வத்தினுல் உனக்கு அபராதம் செய்தேன். பிரபோ! எனது அபராதத்தை நீ க்ஷமிக்கவேண்டும். ஈசா! இனி மேல் இப்பேற்பட்ட தாமஸ குணமானது உண்டாகாமலிருக்கும்படி அனுக்ரஹிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

உடனே ஈசுவரன் ஸந்தோஷத்துடன் தனது கடாக்ஷ வீக்ஷண்யததால் பிரஹ்மாவை அனுக்ரகித்துவிட்டு ' ஏ பிரும்மாவே ! உன்னிடமே எப்பொழுதும்போல லோக சிருஷ்டியானது இருக்கட்டும். முன்போல பிரணவார்த்த ஞானம் விளங்கட்டும், என்று கூறி அருள்புரிந்தார். உடனே பிரும்மாவுக்கு சகல வேத வேதார்த்தங்களும் மனதில் தோன்றின.

சௌனகாதி மஹரிஷிகளே ! பிரும்மாவானவர் பரம சந்துஷ்டராய் ஈசுவரன் பாதகமலங்களை தன் நான்கு திருமுகங்களாலும் வணங்கி மறுபடியும் சொல்கிறுர். "ஹே பகவானே ! இந்த க்ஷேத்ரமானது எனக்கு ஆனந்தம் விளைவித்தபடியால் இன்றுமுதல் பிரும்மானந்தபுரம் என்ற பெயரோடு விளங்கட்டும். மஹாபாபங்களையும் நிவாரணம் பண்ணக்கூடிய பிரும்மதீர்த்தம் என்ற புண்ய தீர்த்தத்தோடு பிரகாசிக்கட்டும்.

எவர்கள் இந்த பிரும்மதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி சுத்தரத்னேச்வரரை தர்சனம் செய்கிறுர்களோ, அவர்கள் பிரும்மஹத்தி, ஸ்வர்ணத்தைத் திருடுவது, கள் குடிப்பது, பரதார கமனம் முதலிய மாபாதகங்களினின்றும் விடுபட்டு தர்ம ஸ்வரூபியான உன் ஸாயுஜ்யத்தை அடையட்டும். எவன் பித்ருக்களை உத்தேசித்து சிராத்தம் செய்கிறுனே அவன் பித்ருக்கள் நித்ய திருப்தாளாய் மோக்ஷமடையட்டும். எவன் தன் சக்திக்குத்தக்கவாறு பிராம்மணனின் பொருட்டு தானம் செய்கிறுனே

அவன் அனந்தபலத்தையடைந்து சிவலோகத்தை அடையட்டும்.

ஏ பிரபோ! எவன் ஒரு நல்ல சுரோத்ரியனுக்கு இந்த க்ஷேத்ரத்தில் ஒரு வீடு கட்டிக்கொடுத்து ஒரு வருஷத்திற்கு வேண்டிய சாப்பாடு வகைக்காக அரிசி பருப்பு உப்பு புளி விறகு எண்ணை நெய் முத லான சாமான்களைக் கொடுக்கிறானோ அவன் கோடி லிங்க பிரதிஷ்டை பண்ணின பலனை அடையக்கட வான். இவ்வாறு தாங்கள் அனுக்ரஹிக்கவேணும்''

இவ்விதம் ஸ்தோத்திரம் செய்யும் பிரும்மாவைப் பார்த்து, ஈசுவரன் 'அப்படியே நீ கேட்டுக் கொண்டபடியே எல்லாம் நடக்கும்' என்று அனுக்ரஹித்து தன்னைச் சுற்றிலும் தேவதா கணங்கள் துதிக்க பிரும்மாவானவர் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அந்த லிங்கத்தில் திடீரென்று மின்னல் ஒளிபோல் மறைந்தார். பிரும்மாவானவர் எல்லா வேதங்களுக்கும் காரண பூதமான பிரணவத்தின் அர்த்தத்தை மறுபடியும் தெரிந்துகொண்டு ஹம்ஸத்தின் மேல் ஆரோஹணித்தவராய் தேவலோகம் தாண்டி ஸத்யலோகம் போய்ச்சேர்ந்தார்.

சௌனகாதி மஹரிஷிகளே! பிரஹ்மாவிற்கு சாபவிமோசனம் ஏற்பட்ட இந்தக் கதையை எவர் கேட்கிறாரோ, எவர்கள் படிக்கிறார்களோ; அவர்கள் ஸகல பாபத்தினின்றும் விடுபட்டு எல்லா அபீஷ்டங் களையும் பெற்று புத்ரபௌத்ராதி வர்க்கங்களுடன் எப்பொழுதும் சந்தோஷமாக வசிப்பார்கள்.

பதினொருவது அத்யாயம் முற்றும்

பன்னிரண்டாவது அத்யாயம்

ஸூதர்— 'முனிவர்களே! முன் ஒரு காலத்தில் தேவேந்திரன் கௌதமரிஷியின் பத்னியான அஹல்யையை இச்சித்த தோஷத்தினால் சரீரம் முழுவதும் யோனிதுவாரம் ஏற்பட்டு இந்த க்ஷேத்ரம் வந்து ஈசனது அனுக்ரஹத்தால் அவைகள் நேத்திர துவாரங்களாகப் பிரகாசித்தன. இந்த ஆம்ரவணக்ஷேத்ரத்தின் மகிமையை யாரால் எடுத்துக்கூறமுடியும்' என்று சொன்னார். இதைக் கேட்ட சௌநகாதி முனிவர்கள் 'ஸூத முனிவரே, எங்களது சந்தேகத்தை நிவர்த்திக்கவேண்டும். இந்த தேவேந்திரனுக்கு இந்திராணியும் ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலான அனேகம் அப்ஸரஸ் ஸ்திரீகளும் மிகவும் அழகு வாய்ந்தவர்களாயும் நினைத்தபோது இஷ்டம்போல் போக சுகத்தை அளிக்கிறவர்களாயும் இருக்க, பூவுலகில் மனுஷ்ய ஜாதியாயும் ரிஷியின் பத்னியாயும் எப்பொழுதும் விரதோபவாஸாதி நியமங்களால் இளைத்துப்போன சரீரத்தோடு கூடினவளாயுமிருக்கிற இந்த அகல்யையை ஏன் இச்சித்தான்? அப்படி இச்சிப்பதற்கு என்ன காரணம்? சத்வகுணம் நிறைந்த தேவதைகளுக்கு அரசனாக இருந்தும் இந்த பரதாரகமனம் என்ற மஹா பாபத்தில் புத்தியானது பிரவேசிக்கக் காரணம் யாது? எவ்வாறு சாபம் கிடைத்தது? இந்த சாபம் எவ்விதம் நிவர்த்தியானது? இவைகளை விஸ்தார

மாக எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்று பிரச்னம் பண்ணினார்கள்.

அதைக்கேட்ட சூதமுனிவர் சந்தோஷத்துடன் சொல்லத் தொடங்கினார். 'லோகத்தில் தேவதைகளினாலும் கூட காமக்ரோதங்களை ஜயிப்பது அவ்வளவு சுலபமல்ல. மிகவும் உக்ரமாக தவம் செய்கிற மஹர்ஷி சிரேஷ்டர்களும், கேவலம் கிழங்கு கனி வர்க்கங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தாலும் காமக்ரோதாதிகளினால் பீடிக்கப் படுகிறார்கள். பிரும்மாவானவர் திலோத்தமையை சிருஷ்டி செய்து அவளுடைய ரூபலாவண்யாதிசயத்தைப் பார்த்து மோஹித்தார். ச்யவனர் என்ற ரிஷி சிரேஷ்டர் வெகுகாலமாக தவம் செய்து சரீரம் அஸ்தி மாத்திரமாய் உலர்ந்து அதன்பேரில் கரையான்களால் புற்று ஏற்பட்டும்கூட சர்யாதி என்ற அரசனின் புத்ரியைப் பார்த்து மோஹித்தார். எத்தனையோ பேர்கள் தபஸ்ஸை விட்டு இந்திரியங்களின் வழி சென்று தபஸ்ஸையுமிழந்து ஸம்ஸார பாதைக்குள்ளாகிறார்கள். இது ஆச்சரியமல்ல.

முன்னொரு காலத்தில் தேவேந்திரன் பூலோகத்தைச் சுற்றிப்பார்க்க வேண்டுமென்ற ஆசையால் மேகமண்டலம் வழியாக வரும் காலத்தில் பூமண்டலத்தில் ஒரு இடத்தில் ஒரு குடியானவன் நடுப்பகலில் நல்ல வெய்யிலில் இரண்டு காளைமாடுகளை ஏரில் கட்டி கடினமான பூமியில் உழுதுகொண்டும் அடிக்கடி அந்த மாடுகளை சாட்டையால் நன்கு அடித்துக்கொண்டு

மிருப்பதையும் உழவன் அடிக்கும் அடியாலும், வெய்யிலினுலும் உழுவடையாகிற பூமி மிகவும் கெட்டியாக இருப்பதால், இழுக்க முடியாமல் அடிக்கடி அடிபட்டுக்கொண்டு மிகவும் வருத்த மடைந்தவைகளாய் தவித்துக்கொண்டிருக்கும் எருதுகளையும் கோலோகத்திலிருக்கும் காமதேனு வானது பார்த்து, ஐயோ! இந்தக் குழந்தைகளான எருதுகள் இரக்கமில்லாத கல்நெஞ்சனுன இந்த உழவனுல் மிகவும் துக்கமடைகிறதுகளே!. அந்தோ ஈதென்ன பாபம். இவைகள் நமது குழந்தை களல்லவா. ஏ தெய்வமே! உனக்குக் கண் இல்லையோ. ஆஹா என்ன செய்வேன். எவ்வாறு சகிப்பேன் என்று மிகுந்த துக்கமடைந்து கண்களி லிருந்தும் நீர் தாரைதாரையாக ஒழுக கண்ணீர் விட்டு அழுதது.

இவ்வாறு அதிகமான துக்கத்தினுல் விட்ட மிகவும் உஷ்ணமான காமதேனுவின் கண்ணீர் மேகமண்டலத்தில் சஞ்சரிக்கிற தேவேந்திரன் மேல் விழ உடனே அவன் ஆகாயத்தை அண்ணாந்துபார்க்க அவ்விடத்தில் காமதேனு வானது கண்ணீர் சொரிந்து நின்றுகொண்டிருப் பதைக்கண்டான். உடனே இந்திரன் திடுக்கிட்டு உடல் நடுங்க நாம் இந்த காமதேனுவுக்கு ஏதாவது அபசாரம் செய்துவிட்டோமா என்ன? ஒன்றும் தெரியவில்லையே. இல்லாவிடில் இவ்வளவு துக்கத் திற்குக் காரணம் யாது? என்று சந்தேகித்தவனுய் பயம் அடைந்து சுரபியின் சமீபம் சென்று எல்லாப் பசுக்களுக்கும் தாயாக இருக்கும் காமதேனுவை

நமஸ்கரித்து ‘அம்மா தாயே! ஹே சுரபி! மூவுலகங்களுக்கும் அதிபதியாக நான் இருக்கும்பொழுது உனக்கு என்ன குறைவு? நான் ஒரு தவறுதலும் செய்யவில்லையே, என்மேல் கண்ணீர் விழும்படியாக அழுவதற்கு என்ன காரணம்?’ என்று கேட்டான்.

இவ்விதம் கேட்ட மஹாகர்வம்கொண்ட தேவேந்திரனைப் பார்த்து; காமதேனுவானவள் கோபமடைந்து துக்கத்துடன் ‘‘ஏ இந்திரனே! இதோ முன்னால் என் குழந்தைகளான இரண்டு காளைகள் எவ்வளவு கஷ்டப்படுகின்றன? உனக்கு கண் இல்லையோ, தேவராஜனே! தன் ஆத்மாவே புத்ரன் என்று சொல்லப்படுகிறது. புத்ரனைக் காட்டிலும் சிறந்தது வேறு ஒன்றுமில்லை. இந்த உலகம் முழுவதும் என் வம்சத்திலுதித்த எனது குழந்தைகளாலேயே ரக்ஷிக்கப்படுகிறது. ஏ தேவ ராஜனே! எல்லா லோகங்களிலும் ஆள்பவர்களான ராஜாக்கள் எல்லோரும் உன்னுடைய அம்சமுள்ளவர்கள். பூலோகத்தில் உன் அம்சமில்லாமல் யாரும் ராஜ்யமாளமுடியாது. நாலில் ஒரு பங்கு உன் அம்சம் எல்லா அரசர்களிடமும் இருப்பதால் அந்த ராஜாக்கள் மூலம் நீயேதான் மூவுலகங்களையும் ஆளுகிறாய்.

ஏ இந்திரனே! அரசர்களுக்கு உடலிலுள்ள கண்கள் தூங்கிக்கொண்டிருந்தபோதிலும் நீதி நெறி என்ற கண் எப்பொழுதும் திறந்திருக்க வேண்டும். இந்தக் கண்ணால் விழித்துக்கொண்டு

பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும் அதனால் தான் லோகத்தில் ராஜாக்கள் தீர்க்கதர்சிகள் என்று சொல்லப்படுகிறார்கள். காமபரவசர்களான அரசர்களுக்கு நீதிநெறி என்ற கண் திறந்திருக்காது. இதைக்கொண்டு பார்க்கமாட்டார்கள்.

ஏ சசீபதியே! நீ த்ரிலோகாதிபதி என்று மிகவும் கர்வமடைந்திருக்கிறாய். நீ கர்வமடைந்து நியாயமாக ராஜ்ய பரிபாலனம் செய்யாததினால் அல்லவோ என் குழந்தைகள் வீணாகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் நீ காமபரவசனாய் போகக்கடவாய். இது சத்யம்" என்று சுரபியானவள் சபித்துவிட்டு தேவலோகம் சென்றாள்.

இந்திரன் சாபத்தை அடைந்தவனாய் தன் தவறையுணர்ந்து ஸப்தமேகங்களையும் நன்றாக மழை பொழியும்படி செய்து அந்த இரண்டு காளைகளையும் அந்தக் கஷ்டத்திலிருந்து காப்பாற்றிவிட்டு, பூலோகத்தைச் சுற்றிப் பார்க்க வேணுமென்ற ஆசைகொண்டவனாய் புறப்பட்டான். பல இடங்களைப் பார்த்துக்கொண்டு வரும்பொழுது கௌதம ரிஷியின் ஆச்ரமமிருக்கும் வனத்திற்கு வந்தான். அந்த வனமானது பலவித புண்ய விருக்ஷங்களினாலும் புண்ய பக்ஷிகளாலும் புண்ய மிருகங்களினாலும் நிறைந்ததாய் தேவலோகத்தில் உள்ள தன்னுடைய உத்யான வனம்போல் பிரகாசித்தது. அவ்விடத்தில் ரிஷிகளினால் செய்யப்படுகிற ஹோமத்தால் ஏற்படும் புகை நான்கு திக்குகளிலும் சூழ்ந்து மிகுந்த வாசனையை எப்

பொழுதும் கொடுத்துக்கொண்டிருந்தது. அந்த வனத்தின் அழகில் மயங்கி சிறிது நேரம் அதையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அப்பொழுது மகாத்மாவான கௌதம ரிஷியின் பத்னியான அஹல்யையானவள் வெளியில் வந்தாள். மேகத்தில் மறைந்திருந்த சந்திரன் திடீரென்று வெளியில் வந்ததுபோல் இருந்தது. பூர்ண சந்திரனைப்போன்ற முகமுள்ளவளாயும்; காமனின் வில்லைப்போன்ற புருவங்களையுடைய வளாயும்; எள்ளின் பூவை நிகர்த்த மூக்கையுடைய வளாயும்; கோவைப்பழம்போன்ற அதரங்களை யுடையவளாயும்; நீலோத்பலம்போல் கருமையான இருவிழிகளை உடையவளாயும்; சங்கையொத்த கழுத்தும், பருத்து நிமிர்ந்து நிற்கும் இரு ஸ்தன பாரங்களும் ஆலிலையை நிகர்த்த வயிறும், யானைத் துதிக்கையைப்போன்ற துடையும்; மின்னலுக்குச் சமானமான சரீரகாந்தியுமுள்ளவளாயும்; பாதி வ்ரத்ய தேஜஸ்ஸினால் ஜ்வலிக்கிறவளாயும்; அப்பொழுது பறித்துத் தொடுத்த காட்டு மல்லிகை மாலையை தரித்துக்கொண்டிருக்கிறவளாயும்; அன்னத்தைப் பழித்த நடையுள்ளவளாயும் இருக்கும் கௌதம முனிவரின் தர்மபத்னியான அஹல்யையைப் பார்த்தான்.

உடனேயே காமபாணத்தினால் அடிபட்டு ஓகோ நமக்கு கண் இமைக்காமலிருப்பது இன்றைக் கல்லவோ பிரயோஜனமாயிற்று. நான் இன்று தான் கிருதார்த்தன். பூமாதேவியின் ஆபரணம்

போன்ற இப் பெண்மணி யாருடையவளோ? எதற்காக இந்தக் கானகத்தில் சஞ்சரிக்கின்ருளோ? தெரியவில்லையே. இவள் தேவஸ்திரீயுமல்ல, அப்ஸர ஸ்திரீயுமல்ல, கந்தர்வஸ்திரீயுமல்ல, கின்னரஸ்திரீயுமல்ல, ஆஹா இவர்கள் எல்லோரையும் நான் தேவலோகத்தில் பார்த்திருக்கிறேன். மிகவும் அழகுவாய்ந்த நாக கன்னிகையுமல்ல இந்த ஸ்திரீகளில் ஒருவளாவது இவள் அழகிற்கு இணையாகமாட்டார்கள். ஸ்வர்ணக்கொடி போல் பிரகாசிக்கும் இப்பெண்மணி எவனை அடைகிருளோ, அந்தப் புருஷனுடைய ஜன்மாதான் பயனுள்ளது அவன் தான் மஹா புண்யவான்.

இவ்வாறு எண்ணிய தேவேந்திரன் காமவேகத்தால் விவேகமிழந்தவனுய் அவ்விடத்தை விட்டுச் செல்ல சற்றும் மனமில்லாமல் அவள் கௌதம முனிவரின் மனைவி என்று தெரிந்தும் எப்படியாவது அவளுடன் சேரவேண்டுமென்ற ஆசைகொண்டவனுய், அன்று பகலை அவ்விடமே கழித்தான். இரவு வந்து வெகுநேரமான பிறகு கௌதம ரிஷியை ஆச்ரமத்தை விட்டு வெளியே கிளப்புவதற்காக அந்த ஆச்ரமத்தின் அருகில் சென்று முனிவரின் காதில் படும்படியாக காகத்தைப்போல் கத்தினன். காக்கையின் சப்தத்தைக் கேட்டதும் கௌதம ரிஷியானவர் எழுந்திருந்து காகம் கத்துகிறது. விடியற்காலமாகி விட்டது, நித்ய கர்மானுஷ்டானங்கள் செய்ய காலம் வந்துவிட்டது என்று எண்ணி இந்திரனுல் செய்த சூது என்றறியாதவராய் தீர்த்த பாத்திரம், மரவுரி முதலியவைகள்

எடுத்துக்கொண்டு ஸ்நானம் பண்ணுவதற்காக நதிக்குச் சென்ருர்.

உடனே இந்திரன் நல்ல சமயம் ரிஷி வெளியே போய்விட்டார் என்று எண்ணி ரிஷியைப்போல் வேஷம் தரித்து ஆச்ரமத்துக்குள் சென்று அஹல்யையைப் பார்த்து சொன்ஞன். "ஹே ஸுந்தரி! உன்னைச் சேரவேண்டுமென்று இச்சிக்கிறேன். உன்னைச் சேரும் நிமித்தம் மன்மதன் பாணப் பிரயோகம் பண்ணுகிருன். நல்ல அழகு வாய்ந்தவளே! காமனுக்கு வசமானவர்கள் ருது காலத்தை எதிர்பார்க்கமாட்டார்கள். காமபாணத்தால் அடிபட்ட என்னை நீதான் உயிர்ப்பிக்க வேண்டும் உனக்கு நான் கிங்கரன் எனக்கு ஆயிரம் நேத்திரங்கள் வேண்டுமடி உன் அழகைப் பார்க்க. இந்த இரு கண்களும் போதாது.

பார்த்தவர்கள் மனத்தைக் கவரும்படியான அழகு வாய்ந்தவளே! ஏ மின்னல் கொடியே! உனக்கு அஹல்யை என்ற பெயர் பொருந்தும். ஏ சுந்தரி! ஹல்யம் என்ருல் விகாரம் என்று அர்த்தம். அஹல்யம் என்ருல் விகாரம் கொஞ்சமுமில்லாமல் ஸர்வ லக்ஷணங்களும் கூடியிருப்பது. உன்னைப்போன்ற அழகு உள்ளவள் இம்மூன்று லோகத்திலும் கிடையாது. தேவஸ்திரீகளும், நாககன்னிகைகளும்கூட உன் கால் அழகிற்கு இணையாகமாட்டார்கள். சுந்தரி! என் அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேணும்".

இவ்வாறு சொல்லும் ரிஷி வேஷம் பூண்ட இந்திரனைப் பார்த்து அஹல்யை கூறினாள். "ஏ ரிஷி வேஷம் பூண்டு வந்தவனே! உன்னை இந்திரன் என்று நான் தெரிந்துகொண்டேன். இவ்வாறு சொல்வது உனக்கு அழகு அல்ல. நீயோ மஹா புண்யவான்களும், அநேகம் ஜ்யோதிஷ்டோமாதி யாகங்கள் செய்தவர்களுமான தேவதைகளுக்கெல்லாம் அரசன். நீ இவ்வளவு யாகங்கள் செய்தும் இப்பொழுது இந்திரியங்களை ஜயிக்காமல் அதன் வழி செல்வது கூடாது. ஏ சுரேசா! உனக்குத் தெரியாத தர்மங்கள் இல்லை. ஆயினும், நீ இப்பொழுது அதர்மமார்க்கத்தில் பிரவேசிக்கிறாய். லோகத்தில் அரசன் ஸன்மார்க்கத்தில் பிரவேசிக்காவிடில் பிரஜைகளும் கெட்டுப்போவார்கள். மூன்று லோகங்களுக்கும் அரசனான நீ இந்த அதர்ம கிருத்யம் செய்தால் நீமட்டுமல்லாமல் மூன்று உலகங்களும் கெட்டுவிடும். வேண்டாம். வேண்டாம். ஏ தேவேந்திரா! என் பர்த்தாவின் மகிமை உனக்கும் தெரியும். மஹாதபோதனர். அதிகமான நியமத்தால், சம்பாதிக்கப்பட்ட பிரும்ம தேஜஸ்ஸினால் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். நினைத்த மாத்திரத்தில் இம்மூவுலகங்களையும் பஸ்மீகரணம் செய்துவிடுவார். இந்த சமாசாரம் தெரிந்துவிட்டால் உனக்கும் அனர்த்தம். எனக்கும் அனர்த்தம் சம்பவித்துவிடும். ஆகையால் நீ தைரியமாய் காமத்தை அடக்கிக்கொள்".

இவ்வாறு நல்வழியைக்கூறி அஹல்யை தடுத்தபோதிலும் தேவேந்திரன் காமதேனு

கொடுத்த சாபத்தாலும், மன்மதன் சரமாரியாக பாணங்களைப் பொழிந்ததனுலும், ஒன்றையும் காதில் வாங்கிக்கொள்ளாமல் காமபரவசனுகி அதி சீக்கிரமாய் அவளை இறுகக்கட்டி காடாலிங்கனம் பண்ணிக்கொண்டான் அஹல்யையும் தன் பாதி வ்ரத்யதேஜஸ்ஸால் அவனைத் தடுக்க வல்லமை இருந்தபோதிலும் ஸ்திரீ சாபல்யத்தினுலும் தேவேந்திரன் என்ற கௌரவத்தாலும் அவனைத் தடுக்காமல் அவனிடம் போக சுகத்தை விரும்பி பேசாமல் சும்மதித்து சும்மாயிருந்துவிட்டாள்.

இவ்விதம் இருவரும் சுகபோகத்தையனுபவித்த பிறகு ஸந்தோஷத்துடன் தேவேந்திரன் அஹல்யையிடம் "ஏ அழகிய சரீரமுள்ளவளே! உன்னுல் இன்று பரமானந்தமடைந்தேன். தேவலோகம் செல்கிறேன். சுகமாக நீ இங்கேயே இரு. உனக்கு மங்களமுண்டாகட்டும். எனக்கு உத்திரவு செய்யக் கடவாய்." என்று கூறினுன். இதைக்கேட்டு அஹல்யையானவள் "ஏ இந்திரா! தேவர்களுக்கு அரசனுன நீ உன்னை ரக்ஷித்துக் கொள். என்னையும் ரக்ஷிக்கக் கடவாய். ஏ தேவ ராஜனே! என்னுடைய நாதனுன முனியானவர் மகா கோபமுள்ளவர். தெரிந்து விட்டால் இரு வருக்கும் அதோகதிதான். ஆகையினுல் சீக்கிரம் இங்கிருந்து சென்றுவிடு" என்று கூறினுள். அப் படியே செய்கிறேன் என்று இந்திரன் அவளிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

இஃது இவ்வாறிருக்க கௌதம ரிஷியானவர், ஸ்நானம் செய்து கையில் சமித்து தர்பம் இவைகளை

கிரஹித்துக்கொண்டவராய், ஜ்வலிக்கும் அக்னியை போன்ற தேஜஸ்ஸுடன் ஆச்ரமத்தையடைந்தார். அப்பொழுது தேவேந்திரன் தன் வேஷம் தரித்துக் கொண்டு வெளியில் செல்வதைப் பார்த்து ஸந்தேஹித்து ஞான சக்ஷுஸ்ஸால் நடந்த ஸம்பவம் முழுவதையும் தெரிந்துகொண்டு மிகுந்த கோபமடைந்து சாபத்தைக் கொடுத்தார்.

"அடே துர்புத்தியே! இந்திரா! நீ தேவர்களுக்கு அரசனுக இருந்தும் இப்படிப்பட்ட அதர்மத்தைச் செய்தாய். ஏ முட்டாளே! என்னைப் போல் உருவெடுத்து என் மனைவியை நீ கெடுத்த படியால் சீக்கிரமாக உன்னுடைய வ்ருஷணங்கள் அறுந்து விழட்டும். 'எனக்கு ஆயிரம் நேத்ரங்கள் இருந்தால் உன் அங்க சௌந்தர்யத்தை நன்கு பார்க்க முடியும்' என்று சொன்னுய் அல்லவா. அடே துஷ்டனே! உன் சரீரத்தில் ஆயிரம் யோநித்வாரங்கள் ஏற்படட்டும்" இவ்வாறு கௌதமர் சாபம் கொடுத்தவுடனேயே இந்திரனுடைய விருஷணங்கள் அறுந்து விழுந்தன. சரீரம் முழுவதும் யோநித்வாரங்கள் ஏற்பட்டு விட்டன.

இவ்வாறு இந்திரனுக்கு சாபம் கொடுத்துவிட்டு தன் பார்யையைப் பார்த்து, மிகவும் கோபாவேசமுள்ளவராய், "அடி பிரஷ்டே! துர்பகே! ஸ்திரீகளின் பதிவ்ரதா தர்மத்தைவிட்டு பரபுருஷனை இந்திரனை அவன் இன்னுர் என்று தெரிந்திருந்தும் அவனுடன்கூடி நீ சுகமனுபவித்தபடியால் நீ இந்த

இடத்தில் ஆயிரம் வருஷகாலம் ஒரு சுகமும் அடையமுடியாத கல்லாகப்போகக்கடவாய். எப்பொழுது தசரதபுத்திரரான ஸ்ரீராமபிரான் இந்த வனம் வருவாரோ அப்பொழுது அவருடைய பாத ரஜஸ்ஸினல் பரிசுத்தம் அடைந்து என்னிடம் வரக்கடவாய்'' என்றுகூறி சபித்துவிட்டு ஹிமவத் பர்வதம் நோக்கி தவம் செய்வதற்குச் சென்று விட்டார்.

இவ்வாறு தன் தோஷத்தினல் பெரிய சாபத்தையடைந்த தேவேந்திரன் இந்த ஆம்ர வணத்தையடைந்து ஆம்ரவணேச்வரரை பூஜித்து சாபம் நீங்கி பரிசுத்தியடைந்தான்.

பன்னிரண்டாவது அத்யாயம் முற்றும்.

பதிமூன்ருவது அத்யாயம்

—:O:—

அத்யாச்சர்யகரமாயிருக்கிற இந்தக்கதையைக் கேட்ட நைமிசாரண்யவாசிகள் மறுபடியும் சூத முனிவரைப் பார்த்து 'ஹே சூதரே! இந்திரன் பிறகு என்ன செய்தான்? எவ்வாறு அந்த ஆம்ர வணத்தில் ஈச்வரனை உபாசித்தான். எவ்விதம் அந்த சாபத்திலிருந்து விடுபட்டான்? இவைகளை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்கவே ஸூதர் கூறுகிருர்.

'கேளுங்கள் ரிஷிகளே! இவ்விதமாய் சாபத்தையடைந்த இந்திரன் மிகவும் லஜ்ஜை

யடைந்தவனாய், தேவலோகம் சென்று தேவதைகளைப் பார்த்துச்சொன்னான். 'ஹே தேவதைகளே! தேவலோகத்தை ஆக்ரமிக்க வேண்டுமென்று கருதி பூலோகத்தில் கௌதமர் என்கிற ரிஷியானவர் தவம் செய்தார். அவருடைய தவத்தைக் கலைப்பதற்காக நான் அங்கு சென்றேன். அதற்கு இவ்விதமான பலன் கிடைத்திருக்கிறது. நான் எனக்காக இந்தக் காரியம் செய்யவில்லை. எல்லா தேவர்களின் நன்மைக்காகத்தான் அவருடைய தவத்திற்கு விக்னம் செய்தேன். எனக்கு ரமிக்கிறதற்கு இவ்விடத்தில் ஸ்திரீகள் இல்லையா? அழகிற் சிறந்த அநேகம் அப்ஸரஸ் ஸ்திரீகள் ஸ்வர்க்கலோகத்திலிருக்கும்பொழுது அவ்விடம் நான் எதற்காகப் போகவேண்டும்? நான் அவருடைய தபஸ்ஸுக்கு விக்னம் செய்வதற்காகத்தான் சென்றேன். அவர் கோபமடைந்து எனக்குச் சாபம் கொடுத்துவிட்டபடியால் அவருடைய தவம் நாசமடைந்து விட்டது. ஆகையால் நீங்கள் எல்லோரும் சேர்ந்து யோஜித்து உபாயத்தால் என் சரீரத்திலுள்ள விகாரத்தை நிவர்த்தி செய்யக் கடவீர்கள்'.

இதைக் கேட்டவுடன் ஸகலமான தேவதைகளும், ரிஷிகள், சாரணர்கள் இவர்களுடன் சேர்ந்து தேவகுருவான பிருகஸ்பதி பகவானிடம் சென்று அவரை நமஸ்கரித்து 'ஹே குருவே! பிருஹஸ்பதி பகவானே! தேவராஜனானவன் அதர்ம மார்க்கத்தில் பிரவேசித்து கௌதம ரிஷியை வஞ்சித்து அவர் பார்யையான அஹல்யையை சேர்ந்த தோஷத்

தால் சரீரம் முழுவதும் விகாரமடைந்து விருஷணம் நீங்கி குரூபியாகிவிட்டான். இதனால் இப்பொழுது இவன் எங்களிடம் கோபித்துக்கொண்டிருக்கிறான். ஆகையால் தாங்கள் ஏதாவது ஒரு பிராயச் சித்தத்தை விதித்து அவனுடைய சாபம் நீங்கும்படி செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள்.

அவ்வார்த்தையைக்கேட்ட பிருஹஸ்பதி யானவர் கண்களை மூடி தியானித்து நடந்ததை யெல்லாம் ஞானதிருஷ்டியினால் அறிந்து தேவர் களைப் பார்த்துச் சொன்னார்.

'ஹே தேவதைகளே! காமதேனு கொடுத்த சாபத்தால் இந்திரன் காமமோகிதனாய்விட்டான். எவர்கள் காமபரவசர்களாக ஆகிறார்களோ அவர்கள் தர்மாதர்மம் அறியமாட்டார்கள். ஆனாலும் ஒரு உபாயம் சொல்கிறேன். காமனால் விகாரமடைந்த இந்திரன், காமாரியான ஈச்வரனை ஆராதித்தால்தான் தோஷம் நீங்கும். காமாரி விரைவில் பிரஸந்நராகி அருள்புரியவேணுமானால் நான் சொல்லும் புண்ய க்ஷேத்திரத்தில் இந்திரன் தவம் செய்யவேண்டும். அதைச்சொல்கிறேன் கேளுங்கள்.

பூலோகத்தில் அகஸ்தியர் வாஸம் செய்யும் தெற்கு திக்கில் ஸஹ்யமலையிலிருந்து உண்டான தாயும், வாயுவினாலேயே விருத்தியடைகிறதாயும் அதனால் 'மருத்வ்ருதை' என்ற பெயரோடு கூடின தாயும், ஸஹிக்க முடியாத பாபங்களையும் போக்குகிறதாயும், மஹரிஷிகணங்களினால்

ஸேவிக்கப்பட்டதாயும் மகாக்ஷேத்திரங்களோடு கூடியதாயும் சமுத்ரகாமியாயுமுள்ள காவேரி என்னும் ஓர் புண்ய நதி இருக்கிறது. அந்தக் காவேரி நதிக்கு வடகரையில் ஜம்புகேச்வரத்திற்குக் கொஞ்சம் ஈசான பாகத்தில் அனேக மிருகக் கூட்டங்களினுல் சூழப்பட்ட ஆம்ரவணமென்ற ஒரு மஹாக்ஷேத்திரம் இருக்கிறது. அந்த க்ஷேத்திரத்தில் அநாதியாய் ஸ்வயம்புவான லிங்கம் ஒன்று இருக்கிறது. அதற்கு சுத்த ரத்னேச்வரர் என்று பெயர். அந்த வனத்தில் பிரும்ம தீர்த்தம் என்று ஒரு தீர்த்தம் இருக்கிறது. அதையே மத்ஸ்ய தீர்த்தம் என்றும் சொல்லுவார்கள்.

அப்பேர்ப்பட்ட ஆம்ரவண க்ஷேத்ரத்தில் மஹா தபஸ்வியான மிருகண்டு ரிஷியானவர் மிகவும் நியமத்துடன் தவம் செய்தார். அவருடைய தபஸ்ஸைக் கெடுப்பதற்காக இந்திரன் காமனைத் தூண்டினுன். மன்மதனுனவன் தன்னுடைய புஷ்ப பாணங்களால் அசைவற்று ஸமாதியிலிருக்கும் ரிஷியை அடித்தான். அதனுல் தவம் கலைந்து மிருகண்டுரிஷி கண்ணை விழித்துப் பார்த்து ஞான திருஷ்டியினுல் நடந்த விருத்தாந்தத்தை அறிந்து மகா கோபத்துடன் காமனைப் பார்த்து "அடே காமா! நீ என் தவத்தைக் கெடுத்தபடியால் வேடனுகப் பிறக்கக்கடவாய். இந்திரன் உன்னை ஏவினபடியால் அவன் சத்வகுணமிழந்து தமோ குணத்தை அடைந்து காமத்தால் மோஹிக்கப்பட்டவனுய் சரீரமானது விகாரத்தையடைந்து குரூபியாய் போகக்கடவன்' என்று சபித்துவிட்டுப் பிறகு

தேவராஜனிடத்திலிரக்கமுள்ளவராய், எப்பொழுது இந்திரன் இந்த ஆம்ரவனேச்வரனை ஆராதிப்பானோ அப்பொழுது அவனுடைய சரீரம் விகாரம் நீங்கி முன்போல் ஆகிவிடும். இந்தக் காமனும் வேடனாகப் பிறந்து எப்பொழுது இக்காட்டை அடைகிறானோ அப்பொழுதே அவனது சாபம் விமோசனமடையும் என்று அநுக்ரஹம் செய்து விட்டு தவத்தைத் தொடங்கினார். ஆகையால் தேவதைகளே! மிருகண்டு சாபத்தால் இந்திரனுக்கு இந்த நிலை வந்திருக்கிறபடியால் அவர் அருளியபடி இந்திரன் அந்த க்ஷேத்திரத்தை அடைந்து அநாதியான அந்த லிங்கத்தை நியமத்துடன் ஆராதித்தானேயாகில் பரிசுத்தனாக ஆகி விகாரம் நீங்கி ஸ்வரூபத்தை அடைவான்" என்று கூறினார்.

இதைக்கேட்ட தேவர்கள் 'மன்மதன் வேடனாக ஆகி என்ன செய்தான்? இதைச்சொல்லவேணும்' என்று கேட்க பிருஹஸ்பதி கூறுகிறார். 'காமனும் வேடஜன்மத்தையடைந்து ஒவ்வொரு வனந்தோறும் அனேகமான செந்நாய்களையும், மிருகங்களையும் இஷ்டம்போல் கொன்று பக்ஷித்து ரிஷி சாபத்தினால் காலாந்தரத்தில் இந்த க்ஷேத்திரமடைந்து பிரும்ம தீர்த்தக்கரையில் வந்துநின்றான். அந்த தீர்த்தத்தில் அனேக மீன்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தபொழுது அதனால் புண்ய தீர்த்தம் மன்மதன்மேல் விழவே உடனே சாபம் விலகி வேடனாயிருக்கும் தன்மை நீங்கி மன்மதன் அவனுடைய சொந்த ரூபத்தை அடைந்தான்.

அது முதற்கொண்டு அதற்கு மத்ஸ்ய தீர்த்தம் என்ற பெயர் ஏற்பட்டது.

ஏ தேவர்களே, அந்த க்ஷேத்ரத்தில் ஸ்வயம் வ்யக்தமான அந்த லிங்கத்தை பிரதிதினம் ஆயிரம் தாமரை புஷ்பங்களினுல் ஒரு வருஷம் வரை இந்திரன் பூஜிப்பானேயாகில் அவனுடைய சரீரத்திலுள்ள ஆயிரம் யோனித்வாரங்களும் ஆயிரம் நேத்திரங்களாக பிரகாசிக்கும்'.

இதைக் கேட்டு தேவர்கள் பிருஹஸ்பதி பகவானை பக்தி சிரத்தையுடன் கூட நமஸ்கரித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு மேரு பர்வதத்தில் தேவேந்திரன் மறைந்திருக்கும் குளக்கரைக்கு வந்து சேர்ந்தனர்.

பதிமூன்ருவது அத்யாயம் முற்றும்.

பதிஞன்காவது அத்யாயம்

—:O:—

மேரு பர்வதத்தில் உள்ள ஒரு சரஸ்ஸில் தேவேந்திரன் வெட்கத்தினுல் ஒளிந்துகொண்டிருந்தான். அந்த இடம் வந்து தேவர்கள் தேவேந்திரனைக் கூப்பிட்டார்கள். 'ஏ தேவேந்திரா! அஹல்யையை பலாத்காரமாய் புணர்ந்தவனே! விருத்ராசுரனை வதம் பண்ணியவனே! நூறு யாகங்கள் செய்தவனே! நாங்கள் உன்னைப் பார்க்கவேணுமென்று வந்திருக்கிருேம். எங்கள் எதிரில் வரவேணும்' என்று. இவ்விதமாக

தேவர்கள் கூப்பிட்டவுடன் தேவேந்திரன் வெட்கத்தினால் தலைகுனிந்து தன்னுடைய சரீரத்திலிருக்கிற துவாரங்களை மறைத்துக்கொண்டு மெதுவாக அவர்களின் முன்னால் வந்து நின்றான்.

உடனே தேவதைகள் இந்திரனைப் பார்த்து 'ஏ சுனாசீரா! துக்கமடையாதே. உன்னுடைய சரீரத்தில் ஏற்பட்ட விகாரத்தைப் போக்கடிக்கும் நிமித்தம் பிருஹஸ்பதி பகவானிடமிருந்து ஒரு உபாயம் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறோம். ஜம்பூத்வீபத்தில் காவேரி நதியின் வடபாகத்தில் காயத்ரீ நதிக்கரையில் தவம் செய்யும் மிருகண்டு முனிவரின் சாபத்தால் உனக்கு இந்த நிலை வந்திருக்கிறது. அவருடைய தவத்திற்கு இடைஞ்சல் செய்வதற்காக நீ அவர் மனதில் மன்மதனைக்கொண்டு காமவிகாரம் ஏற்படும்படி செய்தாய். தன்னை மீறி தன் மனதில் காமவிகாரம் ஏற்பட்டதையும், இது நீ செய்த காரியம் என்பதையும் தெரிந்துகொண்ட மிருகண்டு முனிவர் 'நான் இந்திரனுக்கு விரோதமாக தேவலோகாதிபத்யத்தை அடைவதற்காக தவம் செய்யவில்லை. குழந்தை பிறப்பதற்காகத்தான் தவம் செய்கிறேன். இப்படியிருக்க ஒரு குற்றமும் செய்யாத என் மனதில் காம விகாரம் ஏற்படும்படிச் செய்தபடியால் இந்த இந்திரனும் காமவசனாகி தவறு செய்து இதன்மூலம் இவன் சரீரத்தில் விகாரம் ஏற்படட்டும். எப்பொழுது ஆம்ரவணம் சென்று மஹாலிங்கத்தை பூஜிக்கிறானோ அப்பொழுது சாபம் நீங்கி சரீரத்தில் உள்ள விகாரம் மறையும்' என்று சாபம் கொடுத்

திருக்கிருர். ஆகையால் நீ இப்பொழுதே ஆம்ரவணம் சென்று தவத்தால் மஹாலிங்கத்தை ஆராதனம் செய். அவர் அருளால் சரீரத்தில் விகாரம் நீங்கிவிடும். சாபத்தால் வேடத்தன்மை அடைந்த மன்மதன் இந்த புண்ய க்ஷேத்ரத்தில் மீன்களால் இறைக்கப்பட்ட புண்யதீர்த்தம் சரீரத்தில் விழுந்ததும் சாபம் நீங்கிவிட்டதை நேரில் கண்டிருக்கிறபடியால் உனது சாபமும் கட்டாயம் நீங்கும். நீ இல்லாமல் ஸ்வர்க்கலோகம் பிரகாசிக்கவில்லை. அஸுரர்கள் சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். உன் பாஹுபலத்தால் தான் நாங்கள் ஸ்வர்க்கத்தில் ஸுகமாக இருக்கிரேும். இனி சத்ருக்களிடம் பயந்துகொண்டு தான் நாங்கள் இருப்போம். ஆகையால் நீ சீக்ரம் ஆம்ரவணம் சென்று சுத்த ரத்னேசுவரரை ஆராதனம் செய். நாங்கள் உன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிரேும்" என்று கூறினுர்கள்.

உடனே தேவேந்திரன் அதிசீக்கிரமாக விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள காவேரி தீரத்தையடைந்து அனேக புண்ய விருக்ஷ பக்ஷி மிருககணங்களோடு கூடியதான ஆம்ரவணம் வந்து (மாந்துறை) அந்த இடத்தில் தன்னுடைய பெயரோடுகூடின பரிசுத்தமான இந்திர தீர்த்தத்தை சிருஷ்டித்து அதில் தினமும் ஸ்னுனம் செய்து த்ரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரியாக நித்யகர்மானுஷ்டானங்களையனுஷ்டித்து சுத்தரத்னேச்வரரென்ற லிங்கத்தை பிரதிதினமும் பஞ்சாக்ஷரம் ஜபித்துக்கொண்டு ஆயிரம் தாமரைப் புஷ்பங்களினுல் அர்ச்சனை செய்து தூபதீப

நைவேத்யாதி ஷோடசோபசாரங்களினுல் மிகவும் பக்திசிரத்தையோடு ஒரு வருஷம்வரை பூஜித்தான்.

பிறகு பிராணுயாமங்களினுல் வாயுவையடக்கி ஹிருதய கமலத்தில், கங்கையை சிரஸ்ஸில் அணிந்திருக்கிற பரமசிவனை நன்கு தியானித்து உத்தமமான தவத்தைச் செய்து தத்ஸ்வரூபமாக அசைவற்று தவத்தில் ஆழ்ந்து விட்டான்.

இவ்விதமாக நூறு வருஷம் சென்ற பிறகு அந்த லிங்கத்தினின்றும் ஆயிரம் சூரியனுக்குச் சமானமான காந்தியோடு கூடியவராயும், தர்மாத்மாவான நந்திகேச்வரன் பேரில் அமர்ந்திருப்பவராயும், மின்னலோடு கூடிக்கொண்ட சரத்கால மேகம் போல் பார்வதியோடு கூடியவராயும், வேதங்களினுல் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட மகிமையோடு கூடியவராயுமிருக்கிற பரமேச்வரன் ஆவிர்ப்பவித்தார். தேவேந்திரன் முன்னுல் ஜகத்பதியான பரமேச்வரன் பிரத்யக்ஷமானவுடன் திடீரென்று கண்விழித்து இருகண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் பெருக மயிர்க்கூச்சுடன் பரமேச்வரனை தர்சித்தான். ஈசுவரனுடைய கடாக்ஷம் இந்திரன் சரீரத்தில் விழுந்தமாத்திரத்தில் சாபத்தால் ஏற்பட்ட ஆயிரம் யோனித்வாரங்களும் ஆயிரம் தாமரைப் புஷ்பங்கட்கு சமானமான நேத்திரங்களாய் விளங்கின உடனே இந்திரன் ஸந்தோஷத்துடன் எழுந்திருந்து நமஸ்கரித்து கைகூப்பி ஸ்தோத்தரித்தான்.

"ஹே பிரபோ! தீனபந்தோ! ஸகல சுராசுர நாயகா! ஞான ஸ்வரூபியாயும் ஸகல ஜீவ ஸ்வரூபியாயுமிருக்கிற பிரபுவே! என்னிடத்தில் கருணை செய்யவேண்டும். மனோவாக்காயங்களுக்கு எட்டாதவராயும் மாயையால் மோகிக்கப் பட்டிருக்கிற மனதை உடையவர்களுக்கு அறிய முடியாதவராயும் நிக்ரஹாநுக்ரஹ சக்தியுள்ளவராயு மிருக்கிற ஏ பிரபோ! என்னிடத்தில் கருணை காட்டவேண்டும்.

ஹே பகவானே! கிரீசா! சந்திரசூடா! விச்வேச்வரா! விச்வமூர்த்தியே! ஜகத்காரண பூதா! கழுத்தில் காளகூடவிஷத்தை தரித்தவரே! தேவதைகளினால் புகழப்படுகின்ற இந்திர பதவியை அடைந்தும் அறிவின்மையால் காம பரவசனாகி தர்மத்திற்கு விரோதமான அகாரியத்தைச் செய்து விட்டேன். ஏ சுத்த ரத்னேச்வரா! தயாநிதே! என்னுடைய இந்தக் குற்றத்தை க்ஷமிக்கவேண்டும். ஆம்ரவனேச! திரிபுரமெரித்தவா! ஸ்ரீகண்டா! கங்கையைத்தரித்தவரே! பார்வதியை இடது பாகத்தில் கொண்டவரே! மகானுபாவா! மாயையை நாசம் பண்ணும்படியான உன் சரண பக்தியானது என்னிடம் எப்பொழுதும் இருக்கவேண்டும். அந்த பக்தியானது பக்தர்களுக்கு கற்பக விருக்ஷம்போல் சர்வாபீஷ்டங்களையும் கொடுக்கிறதல்லவா".

இவ்வாறு ஸ்தோத்ரம் செய்த இந்திரனைப் பார்த்து பகவான் ஈசுவரன் புன்சிரிப்போடு 'ஏ விருத்ராஸுரனைக்கொன்றவனே! உன்னுடைய

தவத்தினால் திருப்தியடைந்தோம். ஆயிரம் தாமரைப் புஷ்பங்களினால் நீ என்னை அர்ச்சித்த படியால் உன் சரீரத்திலுள்ள யோனித்வாரங்கள் இப்பொழுது நேத்திரங்களாக விளங்குகின்றன' என்று அனுக்ரஹம் செய்தார். உடனே பகவானுடைய ஆக்ஞையால் பித்ருக்கள் தமது பாகமான மேஷத்தின் விருஷணத்தை இந்திரனுக்குக் கொடுத்தனர். ஆகாசத்திலிருந்து தேவர்கள் பூமாரிபொழிய அப்ஸரஸ்திரீகள் நர்த்தனம் செய்தனர். பிறகு சகல தேவகணங்களும் ஏகாதச ருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அஷ்டவஸுக்கள் அச்வினீ தேவதைகள் சாத்யர்கள் சுபர்ணர்கள், நாகர்கள், கந்தர்வர்கள், விச்வாவசு, நாரதர், பர்வதர், தும்புரு, இவர்களெல்லோரும் அப்ஸர ஸ்திரீகளோடும், ஐராவதத்துடனும் ஆம்ரவண க்ஷேத்திரம் வந்து சத்ரசாமராதி உபசாரங்களுடன் தேவேந்திரனை ஸ்தோத்ரம் செய்தார்கள். பிருஹ்மானந்தபுரீச்வரரான பகவானும் பக்தனான தேவேந்திரனுக்கு அனுக்ரஹம் செய்து விட்டு தேவதைகளினால் ஸ்தோத்ரம் பண்ணப்பட்டவராய் அந்த லிங்கத்தினுள் மறைந்துவிட்டார்.

பிறகு தேவேந்திரனும் ஐராவதத்தின்மேல் ஏறிக்கொண்டு தேவதைகளோடுகூட தன்னுடைய லோகம் போய்ச் சேர்ந்தான். இக்கதையை எவர்கள் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ; எழுதுகிறார்களோ; அவர்களுக்கு அவமான மென்பது ஏற்படாது. விசேஷமான ஐச்வர்யங் களினாலேயும், புத்திரபௌத்ராதிகளாலும் பூவுலகில்

விசேஷ சுகத்தையடைந்து தேவலோகத்தில் அப்ஸரஸ்திரீகளோடு சுகத்தை அனுபவிப்பார்கள் இது சத்யம்.

பதினன்காவது அத்யாயம் முற்றும்.

பதினைந்தாவது அத்யாயம்

"சகல சாஸ்திரார்த்தங்களையும் அறிந்த சூத முனிவரே! ககோளனுடைய சரித்திரத்தையும் விஸ்தாரமாக எங்களுக்குச் சொல்லவேண்டும். உங்களால் இதுவரை புண்ய சரித்திரம் சொல்லப் பட்டது. அதைக்கேட்டு மேலும் மேலும் சரித்திரத் தைக் கேட்க அதிக ஆசை உண்டாகிறது" என்று கேட்ட ரிஷிகளைப் பார்த்து சூதர் சொன்னார்.

"ஏ ரிஷிகளே கேளுங்கள். சாரத்வதீ என்ற நதியின் தீரத்தில் வேத சாஸ்திரங்களைக் கற்று நன்கு கர்மானுஷ்டானம் செய்து வருகிற பிராம்மணர்கள் நிறைந்த சாரத்வதம் என்றதொரு அக்ரகாரம் உண்டு. அதில் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவராயும், பஞ்சாக்ஷர ஜபம் செய்பவராயும், இந்திரியங்களை ஜயித்தவராயும், சிவபக்தியுள்ள வருமான ககோளர் என்னும் பிராம்மணர் இருந்தார். அவருக்கு லீலாவதி என்று ஒரு மனைவி இருந்தாள். அவள் பத்தரைமாத்துத் தங்கம் போன்ற சரீர காந்தியுடன் மிக்க அழகாக விளங்கினாள். அவளுக்கு உரிய காலத்தில் ஓர்

புத்திரன் பிறந்தான். பிதா ஞான திருஷ்டியினுல் தன் புத்ரன் மஹா பாபத்தைச்செய்து வருந்தப் போகிருன் என்பதை அறிந்து மருதாந்தன் என்னும் பெயரை அவனுக்கு வைத்தார்.

கொஞ்சகாலத்திற்குப்பின் தீவிர காமவேட்கை கொண்ட லீலாவதி தவத்தால் மெலிந்த சரீரமுள்ள வனும் கிழவனுமான தன் கணவனுல் தன் காமம் அடங்காததால் பாதிவ்ரத்ய தர்மத்தை விட்டு பிற புருஷர்களுடன் சேர்ந்து வியபிசாரியாகிவிட்டாள். தன்னைச் சேர்ந்தவர்கள் சொல்லியும் கேட்கவில்லை. தன் மனைவி பூர்வ ஜன்ம பாபத்தால் கெட்ட நடத்தையில் ஈடுபட்டிருப்பதையறிந்த கஹோளர் அவளை வீட்டைவிட்டு துரத்திவிட்டார். லீலாவதி யும் ஸந்தோஷத்துடன் தன்னிடம் அன்புகொண்ட அநேகம் வாலிபர்களான விடபுருஷர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களால் கொடுக்கப்பட்ட ஆபரணங்களையணிந்துகொண்டு பல ஊர்களுக்குச் சென்று தன் அழகால் ஆங்காங்குள்ள புருஷர்களை மயக்கி பணத்தையபஹரித்துக்கொண்டு வரும் வழியில் கோதாவரி தீரத்தில் உத்தமபுரம் வந்து அங்குள்ள புருஷர்களுடன் ரமித்துக்கொண்டு சில காலம் அங்கு வஸித்து வந்தாள்.

அவள் புதல்வன் மருதாந்தன் வேதசாஸ்திரங் களை நன்கு பயின்று பிருஹஸ்பதிக்குச் சமானமான அறிவுள்ளவனுய் தேசயாத்திரை செய்துவரும் பொழுது யத்ருச்சையாக இந்த உத்தமபுரம் வந்து சேர்ந்தான். அவ்வூர் அரசன் ஸுதன்வா

மருதாந்தனின் அறிவுத்திறமையை நேரில்கண்டு ஸந்தோஷத்துடன் அவனுக்கு மந்திரி பதவியைத் தந்தான்.

மருதாந்தன் தன் குணங்களினால் அரசனை ஸந்தோஷப்படுத்திக்கொண்டு சுகமாக மந்திரி பதவியில் இருந்து வரும் சமயம் ஒருநாள் தூர்த்தனுனவிடன் ஒருவன் மந்திரியிடம் வந்து 'ஏ மந்திரி! இந்த ஊரில் புதிதாக ஓர் தாஸி வந்திருக்கிருள் அவள் மிகவும் அழகுவாய்ந்தவள். தாங்கள் அவள் வீட்டிற்குச் சென்று வரவேண்டும்' என்று வேடிக்கையாகச் சொன்னான். இதைக்கேட்ட மந்திரி பூர்வ ஜன்ம பாபத்தால் மதிமயங்கி லீலாவதியின் வீட்டை அடைந்தான். கேளுங்கள், சௌனகாதி ரிஷிகளே! இந்திரியங்கள் அதிக பலமுள்ளவை, அதை யாரும் ஜயிக்கமுடியாது. வித்வான்களையும் மோகிக்கும்படி செய்துவிடும்.

மருதாந்தன் லீலாவதியைக் கண்டு அவளுடைய அழகில் மோஹித்து அவள் தன் தாய் என்றறியாமல் அவளுடன் சேர்ந்து ஸுகம் அனுபவித்துவிட்டு இருவரும் ஸல்லாபம் செய்யும் பொழுது ஒருவருக்கொருவர் தம் தம் விருத்தாந்தங்களைக்கூறவே தாங்கள் தாயும் பிள்ளையும் என்பதை அறிந்துகொண்டார்கள். விஷயம் தெரிந்ததுமே மருதாந்தன் அதிக துக்கமடைந்து ஆஹா என்ன மகாபாபத்தைச் செய்துவிட்டோம் என்று வாய் விட்டு அலறி திடீரென்று அப்படுக்கையிலேயே விழுந்து மூர்ச்சை அடைந்துவிட்டான்.

லீலாவதியும் அதிக துக்கமடைந்து தன் புதல்வனை மடியில் வைத்துக்கொண்டு சைத்யோப சாரத்தால் மூர்ச்சை தெளியச்செய்து பிள்ளையைப் பார்த்துக் கூறினள். 'ஹே குழந்தாய்! நம்மை மீறி கார்யம் நடந்துவிட்டது. நடந்ததை எண்ணி வருந்திக்கொண்டிராதே. இதிலிருந்து மீள்வதற்கு வழியைத் தேடவேண்டும். உலகில் பெரியதும், சிறியதும் தெரிந்ததும், தெரியாததுமான எத்தனையோ பாபங்கள் இருக்கின்றன. எல்லாப் பாபங்களுக்கும் பிராயச்சித்தம் உண்டு. பிராயச்சித்தம் செய்தால் பாபம் நீங்கிவிடும். உயர்ந்த வம்சத்தில் பிறந்து, மகானைக் கணவராக அடைந்து, ஸாதுவான உன்னைப் புத்திரனைப் பெற்றும் என் கதி இப்படியாகிவிட்டது. கயிற்றைக் கட்டி இழுப்பதுபோல இன்பத்திலோ துன்பத்திலோ தெய்வம் நம்மை இழுத்துச் செல்கிறது. விதியை யாரும் மீறமுடியாது. இப்பொழுது நீ தர்மசாஸ்திரமறிந்த மஹான்களின் ஸந்நிதிக்குச் சென்று நாம் செய்த பாபத்தைக்கூறி இதற்கு பிராயச்சித்தம் விதிக்கும்படி பிரார்த்திக்கவேணும். அவர்கள் நம் பாபத்திற்குத் தக்கவாறு சாஸ்திர விஹிதமான எந்த பிராயச்சித்தத்தை விதிக்கிறார்களோ அதை சிரத்தையுடன் அநுஷ்டிப்போம். அதனுல் நாம் பாபம் நீங்கி பரிசுத்தர்களாக ஆவோம். தீரர்கள் கஷ்டம் வந்த சமயத்திலும் தைரியத்தை இழக்கமாட்டார்கள். சீக்கிரம் கிளம்பு' என்று கூறினள்.

தாயின் சொல்லைக்கேட்டு மருதாந்தன் தைரிய மடைந்து மஹான்களைக் காண்பதற்காக கோதாவரி நதிக்கரைக்குச் சென்றான். அவ்விடத்தில் சாயங் கால சந்தியாவந்தனத்திற்காக அனேகம் பிரும் மணோத்தமர்கள் வந்திருந்தார்கள். எல்லாஸ்மிருதி களையும் நன்கு அறிந்த அப்பிராமணர்களை மருதாந்தன் நமஸ்கரித்து கைகூப்பி தன்னால் செய்யப்பட்ட மாத்ருகமன தோஷத்தைத் தெரி வித்து, வெட்கமுள்ளவனாய் அதற்குப் பிராயச் சித்தத்தை விதிக்கும்படி வேண்டினான்.

அங்குள்ள யாவரும் நன்கு யோசனை செய்து முனிகுமாரனான மருதாந்தனைப்பார்த்து, "எந்தப் புருஷனானவன் இச்சையின் பேரில் தெரிந்து மகா பாபம் செய்கின்றானோ, அவனுக்கு அக்னியில் விழுந்து இறப்பது, மலைமீதேறி விழுதல், இவை களைத் தவிற வேறு பிராயச்சித்தம் கிடையாது. அறியாமையால் பதிவிரதையான மாதாவையோ, அவளுடைய சக்களத்திகளையோ புணர்ந்தால் தானாகவே தன் அண்டத்தை அறுத்து அதைத்தன் கையில் எடுத்துக்கொண்டு தான் செய்திருக்கும் பாபத்தைச் சொல்லிக்கொண்டே தென்மேற்கு திசையில் ஆயுள் பர்யந்தம் போகவேண்டும். ஆனால் ஏ பிராம்மணனே! நீ முன்னாலேயே வியபிசாரத்தை அடைந்தவளான உன் தாயைத் தெரியாமல் புணர்ந்ததால் உனக்கு வேறு பிராயச் சித்தம் விதிக்கிறோம். அதாவது:

பாபம் தமோகுணத்தின் கார்யம். தமஸ் என்பது கருப்பான இருள். ஆகவே கருப்பு நிற முள்ள இரும்பினுல் செய்யப்பட்ட மணிகளை கழுத்தில் கட்டிக்கொண்டு கிராமங்கள் தோறும் சென்று நியமத்துடன் பிக்ஷை எடுத்து பூஜித்து யாவருக்கும் உன் பாபத்தை வெளிப்படுத்து. உன் கழுத்திலுள்ள மணிகள் ரத்தினமாக மாறும்வரை க்ஷேத்திராடனம் தீர்த்தாடனம் செய்துவரக் கடவாய். எப்போது கழுத்திலுள்ள இரும்பு மணிகள் ரத்னமாக மாறுகிறதோ அப்பொழுது பாபம் நீங்கிவிட்டதாக அறிந்துகொள். எவ்விடத்தில் மணிகள் ரத்னமாக மாறுகிறதோ அந்த இடத்தில் உன் பெயரால் ஒரு சிவ லிங்கத்தை பிரதிஷ்டை செய். அந்த க்ஷேத்திரத் தில் வேதபாரகர்களாயிருக்கிற பிராம்மணர்களுக்கு வீடு முதலியவை கொடுத்து உபசரிக்கவேண்டும். இந்தப்பிரகாரம் செய்தால் உன் பாபம் நீங்கி முன் போல் முனி சிரேஷ்டனுக ஆவாய்''

இதைக்கேட்ட மருதாந்தன், அவர்களை நமஸ்கரித்து தனது கழுத்தில் இரும்புமணிகளைக் கட்டிக்கொண்டு தாயோடுகூட க்ஷேத்ராடனம் செய்ய புறப்பட்டான்.

பதினைந்தாவது அத்யாயம் முற்றும்.

பதினைருவது அத்யாயம்

—:O:—

சௌனகாதி ரிஷிகளே! இவ்விதம் கஹோளகரின் புத்ரனுன மருதாந்தன் தெரியாமையினுல் மாத்ருகமனம் பண்ணி அந்த தோஷம் நீங்குவதற்காக பிராம்மணர்களால் சொல்லப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டும் என்கிற தீர்மானத்துடன் தாயையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டு இப்பூமியிலுள்ள எல்லா புண்ய தீர்த்தங்களுக்கும் புண்ய க்ஷேத்ரங்களுக்கும் யாத்திரை சென்ருன்.

மரவுரி தரித்து ஜடாதாரியாக திரிகாலமும் ஸ்நானம் செய்துகொண்டு, ஆங்காங்கு தேவதைகளை நமஸ்கரித்துக்கொண்டு பன்னிரண்டு வருஷம் அனேகம் க்ஷேத்திரங்களை தரிசித்தும் பாபமானது கொஞ்சமும் விலகவில்லை. இவ்விதமாக சுற்றிக்கொண்டே தெய்வகதியாக காவேரி தீரம் வந்து சேர்ந்தான். அங்குள்ள பல க்ஷேத்ரங்களுக்கும் தீர்த்தங்களுக்கும் சென்று கடைசியில் காயத்ரீ நதி தீரத்திலுள்ள ஆம்ரவணத்தை அடைந்தான்.

அங்கு வந்ததும் மனதில் ஸந்தோஷம் ஏற்பட்டது. பிரும்மாவின் தபஸ்ஸால் நிர்மாணம் செய்யப்பட்ட புண்ய தீர்த்தத்தில் விதிப்பிரகாரம் ஸ்நானம் செய்து மிருகண்டு முதலிய மஹரிஷிகளால் பூஜிக்கப்பட்ட ஸ்வயம்புவான ஆம்ரவண லிங்கத்தை வணங்கினுன். பக்தி சிரத்தையுடன்

லிங்கத்தை பிரதக்ஷிணம் செய்து பூஜித்தான். பிறகு அதற்குக் கிழக்கில் ஒரு மைலுக்கு அப்பாலுள்ள தபோவனத்தில் கடுமையான தபஸ்ஸைச் செய்தான். இவ்விதம் 5, 6 நாட்கள் சென்றவுடன் அவனது கழுத்திலுள்ள இரும்பு மணிகளெல்லாம் சுத்த ரத்னமணிகளாக மாறின.

இந்த விநோதத்தை அங்குள்ள ஜைமினி முதலான ரிஷிகள் கண்டு ஆச்சர்யமடைந்து மருதாந்தனைப் பார்த்து, "ஏ பிராம்மணோத்தம! உனது பாபம் நீங்கிவிட்டது. ஆம்ரவண லிங்கத்தை தெரிசித்ததாலும், இங்கு தவம் செய்ததாலும், உனது மாத்ரு கமன தோஷம் நீங்கி பரிசுத்தனாகிவிட்டாய். இதில் ஸந்தேஹமில்லை. ஏனெனில் உனது கழுத்திலுள்ள இரும்பு இப்பொழுது ரத்னமாகி விட்டதல்லவா" என்று கூறினார்கள். முனிகளின் சொல்லைக் கேட்டு, மருதாந்தன் பரமானந்தமடைந்து, ஸகல பாபத்தினின்றும் விடுபட்டு பிரும்மதேஜஸ்ஸோடு விளங்கினான் பிறகு அம்மஹான் தான் தவம் செய்த இடத்தில் (அஞ்ஹர்) அகம்ஹரம் (ஆங்கரை) என்றொரு அக்ரகாரத்தை நிர்மாணித்தான். அந்த அக்ரகாரத்தின் நடுவில் 'மருதாந்தேச்வரர்' என்ற ஓர் லிங்கத்தை பிரதிஷ்டை செய்தான். பிராஹ்மணர்களை பூஜித்தான். எவன் ஒருவன் பிரதிதினமும் இந்த லிங்கத்தை வணங்குகிறானோ, அவன் உடனே மஹாபாபங்களிலிருந்து விடுபடுகிறான்.

பிறகு மருதாந்தன் ஜைமினி முதலிய முனி சிரேஷ்டர்களை வணங்கி கூறினான். 'ஏ மகரிஷிகளே! உங்கள் தரிசனத்தினாலும் இந்த க்ஷேத்திரத்திலுள்ள காயத்திரீ நதியில் ஸ்நானம் செய்து, இந்த ஆம்ரவண லிங்கத்தை வணங்கினதாலும், நான் இந்த மகாபாபத்திலிருந்தும் விடுபட்டேன். ஆனால் என் தாய், என் சங்கமத்தாலும் மற்றும் பல பரபுருஷ ஸம்பந்தத்தாலும் மிகுந்த பாபமுள்ளவளாயிருக்கிறாள். இவளையும் பாபத்தினின்றும் விடுவித்து பரிசுத்தமுள்ளவளாகச் செய்யவேண்டும். ஏ மஹரிஷிகளே! உலகில் சூரியன் உதயமானால் எவ்வாறு இருட்டு நாசமடைகிறதோ, அதுபோல் ஸாதுக்களுடைய கருணையாகிற கிரணமானது, எவர்கள் மீது விழுகிறதோ, அவர்களுடைய ஸகல பாபங்களும் நாசமடைகின்றன'.

இவ்விதம் சொன்ன மருதாந்தனைப் பார்த்து ரிஷி சிரேஷ்டரான ஜைமினி சொல்கிறார். ''ஏ மருதாந்தா! உன் தாயார் கருப்பு ஆடையணிந்து கொண்டு உத்தமமான விரதநியமங்களுடன் பிரதி தினம் இந்த பிரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து ஆம்ரவணேசுவரரை தரிசித்து பிரதக்ஷிண நமஸ்காராதிகளால் ஸேவிக்கவேண்டும்.

மருதாந்தா! இப்பொழுது சமீபத்தில் மங்களகரமாயிருக்கிற அங்காரக சதுர்த்தி வரப்போகிறது. காலத்தின் மஹிமை தெரிந்த பெரியோர்கள் இந்த சதுர்த்தியை பர்வகாலத்திற்கும், கிரஹண காலத்

திற்கும் ஸமமாகச் சொல்லுவார்கள். அந்த தினத்தில் செய்த ஸ்நானம், தானம், ஜபம், ஹோமம், முதலிய ஸகல தர்மங்களும் அக்ஷயமான பலனைக் கொடுக்கிறது. இந்த தினத்தின் சிறப்பை விஸ்தாரமாகச் சொல்கிறேன். கேள்.

முன் ஒரு சமயம் தாக்ஷாயணியின் பிரிவால் ஈசுவரன் கடுமையாக தபஸ் செய்துகொண்டிருந்த போது அவருடைய நெற்றியிலிருந்து வியர்வையானது பூமியில் விழுந்தது. அந்த பூமியிலிருந்து சிகப்பு நிறமுள்ள அங்காரகன் பிறந்தான். அந்தக் குழந்தையை பூதேவி தாயார் ஸ்தானத்தில் இருந்து வளர்த்தாள். பூமி வளர்த்ததால், இந்தக் குழந்தைக்கு பௌமன் என்றும் மாஹேயன் என்றும் பெயர் ஏற்பட்டது. சிறப்பு நிறமுள்ளதால் அங்காரகன் என்று பெயர். இவன் பிறந்ததினத்திற்கும் அங்காரக வாரம் என்று பெயர் சிவனுடைய தேஜஸ்ஸிலிருந்து உண்டான இந்த அங்காரகன் பிறந்த தினம் ஸ்னான தானாதி கர்மாக்களுக்கு ரொம்ப சிலாக்யமென்று மஹான்கள் சொல்வார்கள். உன் தாயாரை அந்த சுபதினத்தில் புண்யதீர்த்தங்களினால் அபிஷேகம் செய்து வைக்கிறோம். இதனால் அவள் பாபங்கள் எல்லாம் உடனே நீங்கிவிடும். இதில் ஸந்தேஹமில்லை'' என்று சொன்னார்.

உடனே லீலாவதி கருப்பு ஆடையணிந்து விரதஉபவாஸ நியமங்களைக்கைக்கொண்டு, சிவநாம உச்சாரணம், சிவத்யானம், பூஜைகளைச் செய்துகொண்டு அங்காரக சதுர்த்தியை எதிர்

பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த தினம் வந்த வுடன் ஜைமினி முனிவர் எல்லா ரிஷிசிரேஷ்டர் களுடன் பிரும்ம தீர்த்தத்தை கலசத்தில் எடுத்து வேதமந்திரங்களால் அபிமந்திரித்து அவளுடைய சிரஸ்ஸில் மந்திர பூர்வகமாக அபிஷேகம் பண்ணி வைத்தார். உடனே லீலாவதியின் பாபங்கள் விலகி கருப்பு ஆடை பட்டாடையாக மாறிவிட்டது.

பிறகு லீலாவதி ஜைமினி முதலிய ரிஷிகளை நமஸ்கரித்து ஸ்தோத்திரம் செய்தாள். "ஏ சாதுக்களே! உங்களுடைய தர்சனத்தாலும் ஆம்ர வணேச தரிசனத்தாலும், நாங்கள் செய்த பூர்வ புண்யவசத்தினுலும், பரிசுத்தர்களானோம். உலகில் சாதுக்களுடைய சேர்க்கையானது மனுஷ்யர் களுடைய பாபங்களைப்போக்கி, புத்தி, வித்யை, ஆயுஸ், தனம் முதலியவைகளை அளிக்கிறது".

பிறகு அவளைப் பார்த்து ஜைமினி ரிஷி "ஏ பெண்ணே! நீ இந்த ஆம்ரவண க்ஷேத்ரம் வந்தபடியால் எல்லா பாபங்களினின்றும் விடுபட்டு விட்டாய். உன் பிள்ளையின் கழுத்திலுள்ள இரும்பு ரத்னமாக ஆனதும் உன் கருப்பு ஆடை பட்டாடை யாக ஆனதுமே இதற்கு நிதர்சனம். இனி நீ புதல்வனையழைத்துக்கொண்டு பர்த்தாவின் சமீபம் செல்லலாம்" என்று சொன்னுர். இதைக்கேட்ட லீலாவதி மஹரிஷியை வணங்கி "தார்மிகரான என் பர்த்தா நான் செய்த குற்றத்திற்கு தண்டனை யாக என்னை வீட்டைவிட்டு விரட்டினுர். இப் பொழுது பகவத்கிருபையால் என் தோஷம் விலகிய

போதிலும் இது விஷயம் என் கணவருக்குத் தெரியாததால் நானும் என் புத்திரனும் இவ் விஷயத்தை எடுத்துக் கூறினலும் என் கணவர் நம்பமாட்டாரே. என்னை சேர்த்துக்கொள்ள மாட்டாரே. இதற்கு என்ன செய்வது? அவருக்கு நம்பிக்கை வரும்படியாக என்ன செய்யலாம்?'' என்று கேட்டாள்.

உடனே ஜைமினி மஹரிஷி ''நீ சொல்வது உண்மைதான். அதற்கு ஒரு உபாயம் சொல் கிறேன் கேள். சமீவனத்தில் ஒரு பெண்ணும் புருஷனும் ரஹஸ்யமாக விவாஹம் செய்துகொண் டார்கள். ஹாலாஸ்ய (மதுரை) க்ஷேத்திரத்தில் உள்ள அவர்களின் பந்துக்கள் இதை நம்பவில்லை. உடனே அந்த தம்பதிகளின் பிரார்த்தனைக்கு இரங்கி அந்த வனத்திலுள்ள சமீமரமும் குளமும் பந்துக்களுக்கு நம்பிக்கை வருவதற்காக மதுரா க்ஷேத்திரத்தில் காணப்பட்டன. அதுபோல் உங்கள் தோஷம் நீங்கின விஷயத்தை நீங்கள் சொல்லியும் உன் கணவர் நம்பாமல் போனுல் இந்த மாமரத்தையும், பிரும்மதீர்த்தத்தையும் நீங்கள் ஸ்மரித்தால் இவைகள் அங்கு தோன்றி உனது பாபநிவாரணத்திற்கு சாக்ஷியாக இருக்கும். இதில் ஸந்தேஹமில்லை'' என்று சொன்னவுடன், அந்த முனீச்வரர்களையும், ஆம்ரவணேச லிங்கத்தையும் தாயும் பிள்ளையும் நமஸ்கரித்து தங்களுடைய தேசத்தையடைந்தார்கள்.

உடனே மருதாந்தன் மகாதர்மிஷ்டராயும், விருத்தராயுமிருக்கும் தன் பிதாவை தாயாரோடு

கூட நமஸ்கரித்து நடந்த விருத்தாந்தங்களை விஸ்தாரமாகச் சொன்னான். இதைக்கேட்ட சுகோளகரும் அவர் பந்துக்களும் ஆச்சர்யமடைந்தவர்களாய் இவர்கள் சொல்லும் வார்த்தையில் நம்பிக்கை இல்லாதவர்களாயிருந்தார்கள். இதையறிந்த லீலாவதி அந்த பந்துக்களின் முன்னிலையில் 'என் பாபங்கள் நாசமடைந்தது ஸத்யமாயிருக்கும் விஷயத்தில் ஆம்ரவணத்திலிருக்கும் மாமரமும், பிரும்மதீர்த்தமும் இவ்விடம் பிரத்யக்ஷமாகத் தோன்றவேண்டும்' என்று சொன்னாள். இவ்வாறு சொன்னவுடன் பிரும்ம ஸரஸும், மாமரமும் இவர்களுக்கு முன்பாகத் திடீரென்று பிரத்யக்ஷமாகத்தோன்றி மின்னல் ஒளி போல் மறைந்து விட்டது. உடனே ஸகலமான பந்துக்களும் மருதாந்தனையும் அவனுடைய தாயாரையும் பாபமற்றவர்களாக பிரத்யக்ஷ பிரமாணத்தால் தெரிந்து அவர்களை சிலாகித்து அவர்களிடத்தில் பரம பிரீதியுள்ளவர்களாயிருந்தார்கள். சுகோளகர் புத்திரனோடு கூட வெகு நாளகப் பிரிந்திருந்த பார்யையையும் அடைந்து அதிகமான சந்தோஷத்தை அடைந்தார்.

சௌனகாதி ரிஷிகளே! புத்திரன் வேண்டுமென்கிற இச்சையுள்ளவர்களும், மகாரோகத்தினால் பீடிக்கப்பட்ட மாதர்களும் செவ்வாய்கிழமையன்று பிருதக்காலத்தில் பிரும்மதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி மௌனத்தைக்கைக்கொண்டு அந்த லிங்கத்தை பூஜித்தார்களேயானால் தங்கள் அபீஷ்டங்களை அடைவார்கள்.

செவ்வாய்க்கிழமை தினத்தில் சதுர்த்தி சேர்ந்ததே யாகில் அதனுடைய பலனை ஒருவராலும் இவ்வளவென்று சொல்லமுடியாது. அன்று எவன் ஒருவன் ஆம்ரவணேச்வரனை பூஜிக்கிறனே அப்பொழுதே அவனுடைய அபீஷ்டம் பூர்த்தியாகிறது. இது சத்யம்''.

பதினறுவது அத்யாயம் முற்றும்.

—o—

பதினேழாவது அத்யாயம்

'ஸூதமுனிவரே! வேதமித்ரர் என்ற பிராமணரால் கொண்டுவரப்பட்ட அஸ்திகள் ஆம்ரவண க்ஷேத்ரம் வந்ததும் சுத்தரத்னங்களாக ஆய்விட்டன என்று சொல்லப்பட்டதே! இந்தக் கதையை விஸ்தாரமாகச் சொல்லவேண்டும்' என்று சௌனகாதி மஹரிஷிகள் கேட்கவே ஸூதர் கூறுகிறுர்.

''வேகவதி என்ற நதியின் கரையில் பீமபுரி என்றெரு பட்டணம் உண்டு. அந்த நகரத்தில் குணநிதி என்றெரு பிராம்மணன் இருந்தான். அவன் மகா சிவபக்தியுள்ளவனும் ஸகலவேத வேதாங்கங்களையறிந்தவனும், மஹாதனிகனும் நித்யகர்மானுஷ்டானம் பண்ணுகிறவனும் ஆசார சீலனும் இருந்தான்.

அவனுக்கு மூன்று பிள்ளைகள் நற்குணம் வாய்ந்தவர்களாயும், புத்திமான்களாயும் இருந்

தார்கள். அவர்களில் மூத்தவனுக்கு ஸுமதி என்றும், இரண்டாவது பிள்ளைக்கு வேதமித்ரன் என்றும், மூன்ருவது பிள்ளைக்கு சிவதர்மன் என்றும் பெயர். இவர்கள் மாதாபிதாக்களுக்கு சுச்ரூஷை செய்துகொண்டு அவர்கள் சொல்லைத் தட்டாமல் நடந்துவந்தார்கள். வேதசாஸ்திரத்தில் நிபுணர்களான இவர்களிடம் அநேகம் சிஷ்யர்கள் வித்யாப்யாஸம் செய்துவந்தார்கள். இவ்விதம் இருந்துவரும் காலத்தில் பிதாவுக்கு அந்தியகாலம் சமீபித்துவிட்டது. அதையறிந்த பிள்ளைகள் பிதாவின் அருகில் சென்று வணங்கி தங்களுக்கு ஹிதோபதேசம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

இவ்விதம் பிரார்த்திக்கும்படியான புத்திரர்களைப் பார்த்து குணநிதியானவர் 'ஏ புத்திரர்களே! நீங்கள் எப்பொழுதும் தர்மமார்க்கத்திலேயே புத்தியைச் செலுத்துங்கள். சிவார்ச்சனம், சிவபக்தர்களிடம் அன்புகொள்வது, சிவகதாசிரவணம் பண்ணுவது, ருத்ராக்ஷ விபூதி தாரணம், தினமும் வைச்வதேவம் முடியும் சமயம் வரும் அதிதிகளை ஸத்கரித்து, அன்னமிடுவது இது முதலான ஸத்காரியங்களை அவசியம் அனுஷ்டிக்கவேண்டும். ஸ்திரீகள் உங்கள் மனத்தைக் கலைப்பார்கள். ஆனாலும் நீங்கள் அவர்களுக்கு வசமாகக்கூடாது. ஏனென்ருல் உலகில் கலகம், நரகம், மோஹம் எல்லாவற்றிற்கும் அவர்கள்தான் மூலகாரணம் என்று அறிஞர்கள் சொல்கிருர்கள். ஆகையால் அவர்களிடம் எல்லா விஷயங்களிலும் அதிக அன்பு

வைக்கலாகாது. மூத்தவன் சம்மதிக்காவிடில் ஸஹோதரர்கள் பாகம் செய்துகொள்ளக்கூடாது. அனேக தோஷங்கள் பாகப்பிரிவினையில் ஏற்படும், பண்டிதர்கள் பாகத்தை சிலாகித்துக் கூறுவதில்லை. ஹே புதல்வர்களே! இன்னுமொன்று சொல்கிறேன் கேளுங்கள். என் அஸ்திகளை கங்காதீரத்தில் கொண்டுபோய் புதைக்கவேண்டும்" என்று உபதேசித்துவிட்டுத் தந்தை மரணத்தை அடைந்தார்.

பிறகு புதல்வர்கள் மஹாத்மாவான தங்கள் பிதாவுக்கு செய்யவேண்டிய அந்த்ய கர்மாக்களை சாஸ்திர பிரகாரம் யாதொரு குறைவுமன்னியில் அதிக சிரத்தையுடன் செய்தார்கள். பிறகு இரண்டாவது மகன் வேதமித்திரன் தன் தமயனைப் பார்த்து "தாங்கள் ஜ்யேஷ்டரானபடியால் தந்தைக்கு ஸமானம். மேலும் சிராத்தாதிகளைத் தாங்கள் செய்தால் தான் பிதாவுக்கு அக்ஷயமான திருப்தியைக் கொடுக்கும். ஆகையால் தாங்கள் கிருஹத்தில் இருந்துகொண்டு பித்ருகார்யங்களைச் செய்யுங்கள். தம்பியான சிவதர்மன் சிறுவனானபடியால் அவனும் வீட்டில் இருந்துகொண்டு உங்களுக்கு உதவியாக இருக்கட்டும். நான் பிதாவினுடைய அஸ்திகளை எடுத்துக்கொண்டு போய் கங்கையில் புதைத்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லி அண்ணாவின் ஆசியுடன் விடைபெற்று, ஒருவருக்கும் தெரியாமல் ரஹஸ்யமாக வெள்ளிப்பெட்டியில் அஸ்திகளைவைத்து அதைக் கையில் எடுத்துக்கொண்டு சுபதினத்தில் திறமை

யுள்ள அனேகம் சீடர்களுடன் காசியாத்திரை புறப்பட்டான். வழியில் அஸ்த்திகளடங்கிய வெள்ளிப் பெட்டியை தன் சிஷ்யனிடம் கொடுத்து ஸ்னானம் முதலான கர்மாக்களைச் செய்வான் சிஷ்யர்களுக்கு பெட்டியில் அஸ்தி இருப்பது தெரியாது. அவர்களைப் பார்த்து 'இப் பாத்திரத்தில் ராஜாவின் தனம் இருக்கிறது. ஆகையால் அதிக ஜாக்கிரதையாக பாதுகாக்க வேண்டும்." என்று சொல்லிவைத்தான்.

அநேகம் நதிகளையும் க்ஷேத்திரங்களையும் தாண்டி எல்லாப் பாபங்களையும் போக்குகின்ற புண்ணிய தீர்த்தமாகிய காவேரி நதியை அடைந்தான். காவேரியின் வடபாகத்தில் ரிஷிகணங்களால் நிறைந்ததும் பிரும்ம தீர்த்தத்துடன் விளங்குவதுமான ஆம்ரவணம் சென்று அங்கு பிரம்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து தேவ பித்ரு தர்ப்பணம் முதலியவைகளை முடித்து மகா லிங்கத்தை தர்சனம் செய்து அன்றிரவு அங்கு தங்கினன். இரவு ஸ்வப்னத்தில் பிரும்மஸரஸ்ஸிலிருந்து உண்டானதும், ஸ்வர்ணத் தாமரைப் புஷ்பங்களால் விளங்கப்பெற்றதும், சித்தசாரணர்களால் பூஜிக்கப்பெற்றதுமான கங்கையை தர்சித்து ஆனந்தபரவசமடைந்தான். காலையில் எழுந்து நித்யகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கனவில் கண்டவைகளைப்பற்றி நினைத்து நினைத்து ஆச்சர்யமடைந்து யாத்திரை புறப்பட்டான். சிஷ்யர்களில் ஒருவன் குருவுக்குத் தெரியாமல் வெள்ளிப்பெட்டியில் இருப்பதைப் பார்க்கும்

ஆவலுடன் பெட்டியை லேசாகத் திறந்து பார்க்கவே அங்கு ரத்னக்குவியல் இருக்கக்கண்டு வியப்படைந்து பயத்துடன் மறுபடியும் பெட்டியை மூடிவிட்டான். பிறகு கொஞ்சகாலத்திற்கெல்லாம் எல்லோரும் காசி க்ஷேத்திரமடைந்தார்கள்.

காசியில் வேதமித்திரன் புண்ய நதியான கங்கையின் ஜலம் கழுநீர்போல் இருக்கக்கண்டான். மறுபடியும் நன்கு பார்த்துவிட்டு சிஷ்யர்களைப் பார்த்து "இதென்ன விந்தை சிஷ்யர்களே! என் கண்களுக்கு இக்கங்கை ஜலமானது கழுநீர்போல் தோன்றுகிறதே, உங்களுக்கும் அவ்வாறே காணப் படுகின்றதா?" என்று கேட்க அச்சீடர்கள் 'எல்லா பாபங்களையும் போக்கடிக்கின்ற இக் கங்கையின் ஜலம் பாலைப்போல் நிஷ்களங்கமாகத் தான் எங்களுக்குத் தெரிகிறது' என்றார்கள்.

இதைக்கேட்டு வேதமித்ரன் துக்கமடைந்து சீடர்களைப் பார்த்து "உங்களுக்கு மேன்மை யாகக் காணப்படும் கங்கை என் கண்களுக்கு மட்டும் கழுநீராகக் காணப்படுவதற்கு என்ன காரணம்? நான் கங்கைக்கு என்ன அபராதம் செய்தேன்? ஹே பிங்களாக்ஷ! யாத்திரையில் தினமும் நான் ஸ்நானம் செய்யும்பொழுது உன் கையில் இந்த வெள்ளிப் பெட்டியைக் கொடுத்து வந்தேனல்லவா! இதற்குள் என் தந்தையின் அஸ்தி களை வைத்திருந்தேன். இது ஒருவருக்கும், உங்களுக்குங்கூட தெரியக்கூடாது என்பதற்காகப் பெட்டியில் ராஜாவின் தனம் இருக்கிறதென்று

சொல்லிவைத்தேன். ஆம்ரவணத்தில் இரவில் நான் தூங்கும்பொழுது ப்ரஹ்மதீர்த்தத்தின் நடுவில் ரத்னலிங்கேச்வரரின் ஜடாமுடியிலிருந்து இந்த கங்கை பெருகிவருவதைக் கண்டேன். அதே கங்கைதான் இப்பொழுது என் கண்களுக்கு மட்டும் கழுநீராகக் காணப்படுகிறதே! என்ன காரணமோ தெரியவில்லையே?'' என்று வருத்தத் துடன் கூறினன். உடனே பிங்களாக்ஷன் கை கூப்பி ஆம்ரவணதீர்த்த மாஹாத்மியத்தை மனதில் ஸ்மரித்துக்கொண்டு ''ஹே குரோ! இந்தப் பெட்டியில் இருப்பதைப் பார்க்கவேண்டுமென்ற ஆவலால் தூண்டப்பட்டு உங்களுக்குத் தெரியாமல் நான் ஆம்ரவணத்தில் பெட்டியைத் திறந்து பார்த் தேன். அப்பொழுது பெட்டியில் சுத்தரத்னங்கள் ஜ்வலித்துக்கொண்டிருப்பதை நான் கண்டேன் இப்போது அவை எப்படி இருக்கின்றனவென் பதைப் பார்ப்போம்'' என்ருன்!

குரு உடனே பெட்டியைத் திறக்கவே துர்கந் தத்தோடுகூடிய எலும்புகள் இருப்பதைக் கண்டார்கள். குரு பார்த்துவிட்டு ஆம்ரவண ஸ்தல மாகாத்மியம் தெரியாமல் இங்கு வந்தேனே. அதை மகான்கள் தக்ஷிண கங்கை என்று சொன்னர்களே அவர்கள் சொல்லை நான் மதிக்கவில்லை. ஸ்வப்ன மும் கண்டேன். அறிவிழந்து இவ்விடம் வந்ததால் தான் எலும்புகள் விகாரமாயும், துர்நாற்றமுள்ள தாயும், இருக்கின்றன. கங்கா ஜலமும் கழுநீராக எனக்கு தெரிகிறது என்று ஆம்ரவண க்ஷேத்ரத்தின் மகிமையை அறிந்து கங்கையில் ஸ்நான

தர்பணுதிகளை முடித்து, விச்வேசர், மாதவர், டுண்டி, கணநாதன், பைரவர் இவர்களை விதிப் பிரகாரம் அபிஷேகம் பூஜை செய்து, க்ஷேத்திர உபவாஸம் செய்து, காலையில் சிராத்தம் செய்து, பிராம்மணர்களுக்கு விசேஷமான தானங்களைச் செய்து, தன் சீடர்களோடு அஸ்தி நிக்ஷேபணத் தைக் குறித்து சந்தேகமுள்ளவனுய் விச்வனுதர் ஸன்னிதியிலுள்ள மண்டபத்தில் படுத்துத் தூங்கினுன்.

பதினேழாவது அத்யாயம் முற்றும்.

பதினெட்டாவது அத்யாயம்

இவ்வாறு வேதமித்ரன் இரவில் விச்வநாதர் ஸந்நிதியில் படுத்துத்தூங்கும்பொழுது கனவில் தேவவிமானத்தில் அமர்ந்திருக்கும் தன் பிதாவைப் பார்த்தான். உடனே பிதாவானவர் புதல்வனைப் பார்த்து ''ஹே புத்திரனே! என் அஸ்திகளை எடுத்துக்கொண்டு சுத்தரத்னேச்வர க்ஷேத்திரத் தில் ப்ரஹ்ம தீர்த்தத்திற்கு என்றைய தினம் வந்தாயோ, அன்றைய தினமே எனக்கு அமிருதம் கிடைத்து அதை சாப்பிட்டு திருப்தியடைந்தவனுக ஆய்விட்டேன். அந்த க்ஷேத்திரத்தை தேவ லோகத்தில் தேவர்கள் தக்ஷிண காசி என்று சொல்கிருர்கள். நீ கண்ட ஸ்வப்னமும் வாஸ்தவம் தான். ஆகையால், ஹே புதல்வ! அவ்விடத் திலிருக்கும் பிரும்மதீர்த்தக் கரையில் என்

அஸ்திகளைப்புதை” என்று சொல்லி தன் பிதா வானவர் மறைந்துவிட உடனே விழித்து அவ் வார்த்தையில் நம்பிக்கையுள்ளவனாய் தன் சிஷ்யர் களோடுகூட புறப்பட்டு சில மாதங்களில் ஆம்ர வணம் வந்து சேர்ந்தான்.

அங்கு நடுப்பகலில் வேதமித்ரனுக்குத் தாங்க முடியாத தாஹம் ஏற்பட்டது. ப்ரஹ்மதீர்த்தக் கரையில் இருந்தும் அந்த தீர்த்தம் இவன் கண்களுக்குத் தெரியவில்லை. அங்கு விரதோப வாஸாதி நியமங்களினால் மிகவும் இளைத்துப் போன சரீரமுள்ளவராயும், மரத்தினடியில் ஒரு தடியில் சாய்ந்து அமர்ந்திருப்பவராயுமுள்ள ஒரு பிராமணனையும் பக்கத்தில் ரொம்பவும் விருத்தாப்ய தசையையடைந்து தலையில் வெண்மையான கூந்தல்களோடுகூடின ஒரு பிராம்மண ஸ்திரீயை யும், பார்த்தான். வயோதிகத்தால் உடல் நடுங்கிக் கொண்டிருக்கிற ஸ்திரீ புருஷர்கள் இருவரையும் பார்த்து அவர்களை வணங்கி வேதமித்ரன் ‘நீங்கள் யார்? எதற்காக இவ்விடம் இருக்கிறீர்கள்? எனக்கு இப்பொழுது மிகவும் தாகமாயிருக்கிறது. நல்ல தீர்த்தம் எங்கு இருக்கிறது’ என்று கேட்க, அவர்கள் இங்கிருந்து கொஞ்ச தூரத்தில் பரிசுத்த மான தீர்த்தம் இருக்கிறது. அதைக்குடித்து தாக விடாய் தணித்துக்கொள் என்று சொன்னார்கள்.

உடனே வடக்கு திக்கில் கொஞ்சதூரம் சென்று பார்க்க அங்கு ஜலமானது குடிக்க யோக்யதை யில்லாமலிருக்கக்கண்டு தாகத்தால் மெய்வருந்தி

பிராணனைக் கையில் பிடித்துக்கொண்டு மறுபடியும் அவர்களிடம் வந்து அவர்கள் சமீபத்திலிருக்கிற பிரும்மதீர்த்தத்தைப் பார்த்து 'தெளிவான ஜலத்தையுடைய ஸரஸ் தங்கள் சமீபத்திலிருக்க என்னை இங்குமங்கும், அலையவைத்து கஷ்டப் படுத்துவதால் உங்களுக்கு என்ன லாபம்?' என்று கேட்டான். அதற்கு அம்முனிவர் அவனைப் பார்த்து 'ஏ பிராம்மணா! பெரிய காட்டின் வழியாக முன்னூறு யோஜனை தூரம் நடந்துசென்று மறுபடியும் இந்த க்ஷேத்திரம் வந்த உனக்கு என்ன இஃது ஒரு பிரமாதமா? இன்னும் நாலைந்து தடவைகூட போய்வரலாமே' என்று சொன்னார்.

இதைக்கேட்ட பிராம்மணன் 'ஏ முனி ச்ரேஷ்டரே! இந்த க்ஷேத்திரத்தின் மகிமை தெரியாமல் பூலோகத்தில் பிரக்யாதிபெற்ற காசி க்ஷேத்திரத்தைச் பார்த்து வந்தேன். தாங்கள் யார்? இந்த அம்மாள் யார்? நீங்களிருவரும் இந்த பிரும்ம ஸரஸ்ஸின் கரையில் இருக்கக் காரணம் என்ன? உங்கள் தரிசன மாத்திரத்தினாலேயே என் சிரமமெல்லாம் நீங்கிவிட்டது' என்று சொன்னான். உடனே அந்த முனிவர் "அப்பா நான் ஒரு ராஜா. என் பெயர் ராஜசேகரன் என்று சொல்வார்கள். இவள் என் மனைவி ஒரு ராஜாவின் பெண். இவளிடம் எனக்கு ஒரு பிள்ளை பிறந்தான். எங்களுகசு அதிக வயதாகிவிட்டபடியால் அவனை என் ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவிட்டு வானப்ரஸ்தாச்ரம மடைந்து வனத்திற்கு வந்து விட்டோம். ஏ பிராம்மணனே! இப்பொழுது

எங்களுக்கும் அதிக தாகமாக இருக்கிறபடியால் இந்த ஸரஸ்ஸிலிருந்து எங்களுக்குக் கொஞ்சம் ஜலம் கொண்டுவா'' என்று சொல்ல, உடனே வேதமித்ரன் குளத்துக்குச் சென்று அங்கிருக்கும் தாமரை இலையைப்பறித்து தொன்னையாகச் செய்து அதில் ஜலம் கொண்டுவந்து கொடுத்தான். அதை இருவரும் ஆசையுடன் வாங்கிப்பருகிய மாத்திரத்தில் பூர்ணிமா சந்திரனுக்கு ஸமமான சரீர காந்தியுள்ளவர்களாய் ஸர்வலக்ஷணங்களும் பொருந்திய வாலிபர்களாகி விட்டார்கள். பிறகு இருவரும் ஒன்ருகச்சேர்ந்து அர்த்தநாரீச்வர ரூபமாக அந்த பிராம்மணனுக்கு தரிசனம் தந்து சுத்தரத்னேச்வர லிங்கத்தையடைந்து மின்னலொளிபோல் மறைந்துவிட்டார்கள்.

உடனே அந்த பிராம்மணன் மிக்க வியப்படைந்து மனதில் இவ்விதமாக யோசித்தான். 'ஓகோ! இவர்கள் பார்வதீ பரமேச்வரர்கள். என் அக்ஞானம் நாசமடைவதற்கு பிரத்யக்ஷமாக தர்சனம் தந்து இந்த க்ஷேத்திரத்தின் மஹிமையை தெரியப்படுத்தி லிங்கத்தில் மறைந்து விட்டார்கள். நான் முன்னுல் இந்த க்ஷேத்திரத்திற்கு வந்தும் இதன் மஹிமையறியாமல் தூரத்திலுள்ள காசிக்குச் சென்றேன். கங்கையைவிட இந்த பிரம்மதீர்த்தம் உயர்ந்தது என்பதை எனக்குக் காட்டுவதற்காகத்தான், நான் தாகத்தால் தீர்த்தம் வேண்டுமென்று கேட்டபோது, இந்த பிரும்மதீர்த்தத்தை என் கண்ணுக்குப் புலப்படாமல் செய்து தூரத்திலிருக்கும் சேறுள்ள தண்ணீரைக் காண்பித்து அலையும்

படி செய்துவிட்டார். அந்தோ நானல்லவோ கிருதார்த்தன். என் ஜன்மம் இன்றல்லவோ ஸபலமானது. யோகிகளாலும் அறியமுடியாத அந்த பார்வதீ பரமேச்வரர்கள் என் கண்ணுக்குப் பிரத்யக்ஷமடைந்து என் கையால் தீர்த்தமும் வாங்கிக் குடித்து மறைந்தருளினுர்கள். இவர்கள் சொன்னதன் உண்மைப்பொருள் இப்பொழுதுதான் புரிகிறது. தான் சந்திரசேகரர் என்பதை ராஜசேகரர் என்ற பெயராலும் பர்வதராஜகுமாரியை அரசன் பெண் என்றும் ஸ்கந்தரை குமாரன் என்றும் குறிப்பிட்டிருக்கிருர். அனேகம் யாகங்கள், அன்னதானம், கோடைகாலத்தில் தண்ணீர்பந்தல் வைத்து நல்ல குளிர்ந்த ஜலமாக பிராம்மணர்களுக்குக் கொடுப்பது இவ்வளவு உயர்ந்த புண்யங்களின் பலன்களையும் ஏககாலத்தில் நான் அடைந்தேன். எல்லா உலகிற்கும் நாயகனுய் விளங்கும், இந்த பரமபுருஷன் என் கையிலிருந்து ஜலத்தை வாங்கிச் சாப்பிட்டார் அல்லவா' என்று நினைத்து, துக்கத்தையும் சந்தோஷத்தையும் அடைந்து சிஷ்ய வர்க்கங்களோடுகூட பிரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து பித்ருதர்ப்பணம் முதலிய நித்யகர்மானுஷ்டானங்களை விதிப்பிரகாரம் செய்து ஆம்ரவணேசரை நமஸ்கரித்து ஸ்தோத்ரம் பண்ணினுன்.

''எந்த புருஷனின் திருமுடியை காணவேண்டி பிரும்மாவானவர் ஹம்ஸரூபமாக ஆகாச மார்கத்தில் சென்ருரோ; எந்த புருஷனின் திருவடிகளை காணவேண்டி விஷ்ணுவானவர் பன்றி உருவம்

எடுத்து பாதாளலோகம் சென்ருரோ; அப்படிப் பட்ட மஹிமையுள்ள ஏ ஜகதீசா! ஆம்ரவண ரூபதே! எண்ணமுடியாத உன் குணங்களை முழுவதும் சொல்ல என்னல் முடியாது. உன்னை நமஸ்கரிக்கிறேன்.'' என்று கூறி அடிக்கடி வணங்கி அன்று இரவு சிஷ்யர்களுடன் பிரும்ம ஸரஸ்ஸின் கரையில் படுத்துத் தூங்கினர்.

காலையில் எழுந்து வெள்ளிப் பெட்டியைத் திறந்து பார்க்கும்பொழுது சுத்தரத்னங்களாகத் தெரிந்தன ஸந்தோஷத்துடன் க்ஷீரத்தால் அபிஷேகம் பண்ணி ஸ்வர்ணத்துடன் பிதாவின் அஸ்திகளை அங்கு நிக்ஷேபம் செய்தார். பித்ருக்களுக்கு பிரீதியை யுண்டுபண்ணக்கூடிய கோ பூதில ஸுவர்ணாதி தானங்களைச் செய்து சிரத்தையுடன் விதிப்பிரகாரம் சிராத்தம் செய்து அங்கு சிலநாள் தங்கி பிரதிதினமும் லிங்கத்தை ஆராதித்து அவ்விடத்தில் வசிக்கும் வேதவித்துக்களான பிராம்மணர்களுக்கு யதேஷ்டமாக அன்னமளித்து பரம ஸந்தோஷத்துடன் தன் நகரம் வந்துசேர்ந்து ஸோமசேகர பாண்ட்யனுக்கும் தன் பந்துக்களுக்கும் நடந்த விருத்தாந்தம் தெரிவித்து அவர்களால் புகழப்பட்டு ஈசுவர பக்தியுடன் காலத்தைக் கழித்தான்.

இக்கதையை எவன் கேட்கிருனே; படிக்கிருனே; எழுதுகிருனே; அவனுடைய பித்ருக்கள் நித்ய திருப்தர்களாக ஆவார்கள் அவர்களுடைய ஆசீர்வாதத்தினல் ஐசுவர்ய ஸம்பன்னர்களாய் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

பதினெட்டாவது அத்யாயம் முற்றும்.

பத்தொன்பதாவது அத்யாயம்

—:O:—

சௌனகாதி மஹரிஷிகள் சூதமுனிவரைப் பார்த்து, 'சூரியன் எதற்காக சுத்தரத்னேச்வரரை பூஜித்தான்? அதை விஸ்தாரமாகச் சொல்ல வேண்டும்?' என்று கேட்க சூதர் சொல்கிருர்.

முன்னொரு காலத்தில் ஈச்வரனுக்கு மாமனூரான தக்ஷபிரஜாபதி தேவதைகளோடுகூட ஒரு யாகம் செய்தார். தனக்கு ப்ரஜாபதி பதவி கிடைத்ததன் மூலம் ஏற்பட்ட கர்வத்தினல் ஈச்வரனுக்கு ஹவிர் பாகம் கொடுக்காமல் யாகஞ்செய்தான். தன் பிதா செய்யும் அந்த யாகத்திற்கு போகவேண்டுமென்று தாக்ஷாயணி வற்புறுத்தியபொழுது ஈசுவரன் அதற்கு சம்மதிக்கவில்லை. 'நம்முடைய பரமார்த்த மான ஸச்சிதானந்தஸ்வரூபத்தை உன் பிதா அறிந்துகொள்ளவில்லை. என் வெளிவேஷத்தைக் கண்டு என்னை அவமதிக்கிருன். அதனல் அங்கு போவது உசிதமில்லை' என்று சொன்னூர். 'ப்ரபோ! யக்ஞத்திற்கு வந்திருக்கும் பந்துக்களான தேவர் களைப்பார்க்க ஆசைப்படுகிறேன். நான் போவதற் காவது அனுமதியளிக்கவேண்டும்' என்று ஸ்திரீ சாபல்யத்தால் மேலும் மேலும் தேவி வற்புறுத்திக் கேட்கும்பொழுது பகவான் 'நான் எவ்வளவோ சொல்லியும் நீ கேட்கவில்லை. உன் இஷ்டப்படி செய். ஆனல் இதனல் அநர்த்தம்தான் ஏற்படப் போகிறது' என்று சொல்லிப் பேசாமலிருந்து விட்டார். அம்பிகை ப்ரமதகணங்களுடன்கூட புறப்பட்டு யாகசாலைக்குப் போய்ச்சேர்ந்தாள்.

தனது புத்ரியாயிருந்தபோதிலும் பவானியை தக்ஷன் 'வா' என்று ஒரு வார்த்தைகூட சொல்ல வில்லை. அவளைப் பார்க்காமலேயே இருந்து விட்டான். தக்ஷனிடமுள்ள மதிப்பால் சூரியன் முதலான தேவர்களும் வாயைத்திறந்து அவளிடம் பேசவில்லை. இதைக்கண்டு தாக்ஷாயணி தன் பர்த்தா சொன்ன வார்த்தையை நினைத்து தந்தை யிடம் மிகுந்த கோபம் கொண்டாள். இதைப் பார்த்து சூரியன் சிரித்தான். சில தேவர்கள் தலையையாட்டினார்கள். உடனே தேவி, 'என் கணவனை நிந்திக்கும் முட்டாளான இந்த தக்ஷனிட மிருந்து பெற்ற சரீரம் ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்யத்தக்கதல்ல. ஆதலால் இந்த சரீரத்தை அக்னியில் ஆஹுதி செய்துவிட்டு வேறு தேஹத்தை சம்பாதிக்கிறேன். இவரிடம் நான் சரீரத்தைப் பெற்றதற்கு இதுதான் பிராயச்சித்தம்' என்று மனதில் தீர்மானித்து கண்களில் நீர்பெருக 'மூடர்களான இந்த தேவர்களை சாஸ்தாவான பரமேசுவரன் சிக்ஷிக்கட்டும்' என்று சொல்லிவிட்டு யாகாக்னியில் பிரவேசித்தாள்.

இதைக்கண்டதும் ஸபையில் பரபரப்பும் 'ஹா ஹா' என்ற இறைச்சலும் ஏற்பட்டது. தேவர்கள் பயம்கொண்டு புலம்பினார்கள். ஸர்வக்ஞரான பரமேச்வரன் தேவிக்கு நேர்ந்த அவமானத்தையும் அவள் அக்னியில் பிரவேசித்த தையும் அறிந்து மஹாகோபத்துடன் ஜடா ரோமத்தை பூமியில் அடித்தார். அதிலிருந்து ப்ரள்ய காலாக்னி போல ஜ்வலிக்கிற வீரபத்ரர்

பயங்கர உருவத்துடன் ஆயிரக்கணக்கான கைகளில் பற்பல ஆயுதங்களை தரித்துக்கொண்டு தோன்றினர். 'தக்ஷனுடைய யாகத்தை நாசம் செய்' என்ற மஹேசுவரரின் ஆக்ஞையைப் பெற்றுக்கொண்டு வீரபத்ரர் தக்ஷனது யாக சாலைக்கு வந்து அவனுடைய தலையை அறுத்து அக்னியில் ஹோமம் செய்தார். சிரித்த ஸூர்ய னுடைய கன்னத்தில் அடித்ததில் ரக்தத்துடன் பற்களெல்லாம் கீழேவிழுந்து விட்டன. காலால் அடிபட்ட சந்திரன் பாதாள லோகத்தில் போய் விழுந்தான். மற்றும் சில தேவர்கள் கைகளிலும் கால்களிலும் அடிபட்டுக் கீழேவிழுந்தனர். பிருகு முதலான முனிவர்களின் மீசையைப் பிடுங்கினர் இவ்வாறு வீரபத்ரர் தக்ஷனது யாகத்தையழித்தார்.

பிறகு பகவான் நாராயணர் அங்கு வந்து பரமேசுவரனை ஸ்தோத்திரம் செய்து அவருடைய அனுமதியைப்பெற்று தக்ஷனது சரீரத்தில் ஆட்டுத் தலையை வைத்து யாகத்தைப் பூர்த்திசெய்தார். தாக்ஷாயணி ஹிமவானுக்குக் குமாரியாகப் பிறந்து கடுமையான தவம் செய்து பர்த்தாவான பரமேச்வரனையடைந்தாள் ருத்ரனிடம் பயத்தால் ஸூர்யன் எங்கேயோ போய் ஒளிந்துகொண்டு விட்டான். அந்த சமயத்தில் ஜ்யோதிஷ்மான் என்ற கணத்தலைவனைக்கொண்டு ஸூர்யன் வேலையை ஈசுவரன் நடத்திவைத்தார்.

பிறகு சூரியன் மிகவருத்தம் அடைந்து பிரும்மாவைச் சரணமடைந்தான். உடனே

பிரும்மா நீ செய்த பிழைக்கு ஆம்ரவணக்ஷேத்திரம் சென்று பூஜித்தால் நிவர்த்தியாகுமென்று சொல்ல அவ்வாறே சுத்தரத்னேச்வரரைப் பூஜித்து முன் போல் ஸூர்யன் திவஸேச்வரனாக விளங்கினான்.

பத்தொன்பதாவது அத்தியாயம் முற்றும்

இருபதாவது அத்யாயம்

'சூதமுனிவரே! சூரியன் கதையைக் கேட்டோம். சூரியன் மனைவியான ஸம்ஞாதேவி எதற்காக ஆம்ரவணம் வந்து பூஜித்தாள்? அதை விளக்கிச் சொல்லவேண்டும்' என்று ரிஷிகள் கேட்க, ஸூதர் ஸம்ஞாதேவியின் சரிதத்தைச் சொல்கிறார்.

தக்ஷபிரஜாபதியின் பெண்ணான அதிதியிடத்தில் மரீசி மஹரிஷியின் புதல்வரான காச்யப மஹரிஷிக்கு சூரியன் பிறந்தான். துவஷ்டாவின் புத்ரியான ஸம்ஞை அவனுடைய மனைவி. சூரியனுக்கு ஸம்ஞாதேவியிடம் மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களில் மூத்தவர் சூரியவம்ச அரசர்களுக்கு தலைமை பூண்டவராயும் இவ்வுலகை ஏக சக்ராதிபதியாக ஆண்டு ஸகல ஜனங்களையும் ஒழுங்காக இருக்கும்படி மனு ஸ்மிருதி என்ற தர்ம சாஸ்திரம் எழுதிய வைவஸ்வத மனு என்று சொல்லப்படுவார். இளையவன் ஒவ்வொரு பிராணியையும் அரைநிமிஷம்கூட தவறாமல் அவ அவர்கள் ஆயுள் கணக்குப்பிரகாரம் தன் இருப்பிடம்

கொண்டு சேர்க்கிற பிரேத ராஜாவான யமதர்மன். மூன்ருவது குழந்தை யமுனு நதி. இம்மூவரும் சூரியனுக்கு சம்ஞாதேவியிடத்தில் உண்டானர்கள்.

சூரியனுடைய தேஜஸ்ஸை ஸஹிக்கமுடியாமல் ஸம்ஞாதேவி தன் நிழலை தன் போன்ற உருவமுள்ள ஒரு பெண்ணுக சிருஷ்டித்தாள். அப்பெண்ணுனவள் ஸம்ஞாதேவியை வணங்கி 'அம்மணி! தங்களுக்கு நான் வேலைக்காரி இப்பொழுது என்ன செய்யவேண்டும்' என்று கேட்க, 'இந்த சூரியனுடைய தேஜஸ்ஸானது என்னுல் ஸஹிக்கமுடியவில்லை. நீ இவ்விடமே இரு நான் என் பிதாவின் கிருஹம் போகிறேன். இம்மூன்று குழந்தைகளையும் உன் குழந்தைகளைப் போல் பார்த்துக்கொள்ள வேண்டியது. இந்தவிருத்தாந்தத்தை கணவனிடம் தெரிவிக்கக்கூடாது' என்று சொல்லி பிதாவின் சமீபம் வந்து வணங்கி, 'ஏ தந்தையே! என் கணவனின் தேஜஸ்ஸை ஸஹிக்க முடியாமல் இவ்விடம் வந்தேன். நான் உங்கள் வீட்டிலேயே வசிக்க விரும்புகிறேன்' என்று சொன்னுள்.

அதைக்கேட்டு துவஷ்டா, 'ஹே புதல்வியே! நீ கணவனை அடைந்தபிறகு தகப்பனுர் வீட்டில் வசித்துக்கொண்டிருப்பது உசிதமாகாது. ஏனெனில் உலகில் ஸ்திரீகள் விவாஹம் ஆகும் வரை தந்தையிடமும், விவாகமானவுடன் கணவனிடமும், வார்த்தக்யத்தில் பிள்ளைகள் வசமும் இருக்க வேண்டும். எப்பொழுதும் ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்த்ர்யம் கிடையாது. உன் கணவன் எல்லா

மறிந்தவன் எல்லா ஜனங்களுக்கும் பிரகாசத்தைக் கொடுத்து இருளைப்போக்கி கண்ணாக இருக்கிறான். ஆகையால் உத்தமக்ஷேத்ரத்தில் தவம் செய்தாவது தேஜஸ்ஸை சகிக்க முயலக்கடவாய் இப்பேற் பட்ட பர்த்தாவை விட்டுச்செல்வது ந்யாயமல்ல. கணவனோடு கூடியிருந்தால்தான் ஸ்திரீகளுக்கு ஸௌபாக்யம். கணவனைப் பிரிந்தால் ஸ்திரீகளுக்கு எத்தனை ஐசுவரியபோகம் இருந்தால்தான் என்ன பிரயோஜனம்?' என்று சொன்னார்.

உடனே சம்ஞை எந்த இடம் சென்று தவம் செய்தால் மனோபீஷ்டம் நிறைவேறும் என்பதைப் பற்றி யோசிக்கலானாள். அப்பொழுது நாரதர் அங்கு வந்தார். ஸம்ஞாதேவி நாரதரை பூஜித்த தும் நாரதர் கூறினார். 'ஹே ஸம்ஞாதேவியே! உன் மனதிலுள்ளதைத் தெரிந்துகொண்டேன். உலகில் தன் இஷ்டத்தைப் பூர்த்திசெய்ய ஈசுவரா ராதனமில்லாமல் முடியாது. எந்த புருஷனை பரப் பிரும்மம் என்று சொல்வார்களோ, எவனது மாயை யால் இந்த எல்லா லோகங்களும் பரந்து விளங்கு கின்றனவோ, அந்தப் புருஷனே ஈசுவரன். அவனை ஆராதிக்கக்கடவாய். ஹே பெண்ணே! மேரு பர்வதத்திற்கு தெற்கில் பாரத வர்ஷத்தில் சுத்தரத்னேசுவரர் என்கிற லிங்கமொன்று இருக் கிறது. மஹேசுவரனுக்கு ஹவிர்பாகம் கொடுக் காமல் தக்ஷன் செய்த யாகத்திற்குச் சென்று உன் பர்த்தா ஹவிஸ்ஸை உண்டதால் தோஷம் ஏற்பட்டு பிரஹ்மாவின் வார்த்தையால் இந்த லிங்கத்தை ஆராதித்ததால்தான் பாபத்திலிருந்து விடுபட்டான்

ஆகையால் நீயும் அவ்விடம் சென்று ஆராதித்தால் உன் புருஷனுடன் சேர்க்கையடைந்து சுகம் அடைவாய்' இதைக்கேட்ட ஸம்ஞாதேவி குதிரை உருவம் எடுத்துக்கொண்டு உடனே தவம் செய்வதற்கு ஆம்ரவண க்ஷேத்திரம் சென்றுவிட்டாள்.

இந்த விஷயம் ஒன்றும் அறியாத சூர்யன் சாயா தேவியை சம்ஞை என்றே நினைத்துக் கொண்டிருந்தான். அவளிடம் இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் பிறந்தார்கள். மூத்தவன் எட்டாவது மனுவான சாவர்ணி என்பவன். இரண்டாவது புத்ரன் சனீச்வரபகவான். மூன்ருவது பத்ரை என்கிற பெண். ஒருநாள் எல்லாக் குழந்தைகளும் சேர்ந்து விளையாடிக்கொண்டிருக்கையில் பிதாவின் மடியில் சம்ஞையின் பிள்ளையான யமதர்மன் உட்கார்ந்தான். இதை சனீச்வரன் கண்டு பொருமையால் ''ஏ யமனே, பிதாவின் மடியில் உட்கார உனக்கு யோக்யதை இல்லை. உன் தாயார் இவ்விடமில்லை. எங்கோ ஓடிப்போய் விட்டாள். எந்த ஸ்திரீயிடத்தில் பிதாவானவன் ப்ரீதியுடனிருக்கிருனே, அந்த ஸ்திரீயிடத்தில் உண்டான குழந்தைகளைத்தான் பிதா லாளனம் பண்ணுவான். ஆகையால் என் தாயாரிடம் தான் பிதாவுக்கு மிகவும் பிரீதி உன் தாயாரிடம் இல்லை.' என்று சொல்லவே உடனே யமன் கோபாவேசமுள்ளவனுய் சாயையின் பிள்ளையான சனியை காலால் எட்டிஉதைத்தான். இவ்விதம் உதைபட்ட சனிக்கு ஒரு கால் நொண்டியாகி விட்டது. அது முதல்சனிக்கு பங்குபாதனென்ற பெயர் ஏற்பட்டது.

உடனே சாயை யமனைப்பார்த்து 'என் பிள்ளையை நொண்டியாகச் செய்தபடியால் நீ பிரேத ராஜனாகப் போகக்கடவாய்' என்று சபித்தாள். அதுமுதல் யமன் பிரேதராஜாவாக இருந்துவருகிறான். பிள்ளைகள் எவ்வளவு குற்றம் செய்தாலும், மாதாவானவள் சபிக்கமாட்டாள். மாதா சபித்துவிட்டால் சாபத்தை நிவர்த்திக்க எப்பொழுதும் யாராலும் முடியாது.

இவர்களின் பேச்சைக்கேட்ட சூர்யன் நடந்த விருத்தாந்தங்களை ஞானக்கண்ணால் தெரிந்து கொண்டு ஆம்ரவணத்தில் தன் பத்னியான ஸம்ஞா தேவி தவம் செய்துகொண்டிருப்பதையறிந்து தானும் அந்த ஆம்ரவணம் வந்து அவள் குதிரை ரூபமாக இருப்பதையும், உலர்ந்த புல்களையே தின்பதையும் நேரில் கண்டு அவள் குற்றமற்றவளென்பதைத் தெரிந்து தானும் குதிரை வடிவெடுத்து தன் மூக்கினால் அவள் மூக்கை முகர்ந்து ரமித்தான். அவளும் மூக்கின் உணர்ச்சியால் தன் கணவன் என்பதைத் தெரிந்துகொண்டு அவருடைய வீர்யத்தை தன் மூக்கின் இரண்டு த்வாரங்களால் கிரஹித்துக்கொண்டாள். உடனே அவ்விடத்தில் மிகுந்த அழகு உள்ளவர்களும் தேவ வைத்யர்களுமான அச்வினீ தேவதைகள் பிறந்தார்கள்.

பிறகு இருவரும் ஸ்வயருபத்தை எடுத்துக் கொண்டு ஆம்ரவணேசரைப் பூஜித்தார்கள். அப்பொழுது ஸம்ஞாதேவியின் பிதாவான த்வஷ்டா அங்கு வந்து சுற்றும் யந்திரத்தில் ஸூர்ய சரீரத்தை

வைத்துக் கடையவே சூரியனின் தேஜஸ் கெட்டியாக கீழே விழுந்தது. அதைக்கொண்டு த்வஷ்டா விஷ்ணுவின் சக்ரத்தையும், சிவனின் சூலத்தையும் ஸ்கந்தரின் சக்தி ஆயுதத்தையும் உண்டுபண்ணினான். பிறகு சூரியனுடைய தேஜஸ் ஸம்ஞா தேவிக்குப் பொறுக்கும்படியாக இருந்தது. சூரியன் ஸம்ஞை இருவரும் ஸந்தோஷமடைந்து தேவதைகளால் பூஜிக்கப்பட்டவர்களாய் ப்ரஹ்மானந்த புரீசுவரரான சுத்தரத்னேசுவரரை வணங்கி தன் லோகம் போய்ச்சேர்ந்தார்கள்.

இருபதாவது அத்யாயம் முற்றும்.

இருபத்தொன்ருவது அத்யாயம்

ஸூதமுனிவரே! சந்திரன் ஆம்ரவணேசரை பூஜித்து ராத்திரிக்கு நாயகனுன கதையைச்சொல்ல வேண்டும்.' என்று சௌநகாதி ரிஷிகள் கேட்க ஸூதமுனிவர் சொல்கிருர். "பிரும்மாவின் மானஸ புத்திரர்களில் அத்ரி என்பவர், தேஜஸ்ஸினுல் சூரியனுக்கு ஒப்பாயும், குணங்களினுல் பிரும்மாவுக்கு ஸமராயும் தேவதைகளினுல் பூஜிக்கப்பட்டவராயும் இருந்தார். இவர் இந்த்ரியங்களை ஜயித்து மனதில் ஈச்வரனை தியானம் செய்து மூவாயிரம் வருஷம் உத்தமமான தபஸ்ஸைச் செய்தார். தவம் செய்யும் அத்ரி மஹரிஷியின் தேஜஸ்ஸானது சரீரத்தில் மேலே கிளம்பிவந்து கண்களின் வழியாக வெளியே வந்தது. அதுவே சந்திரனுக

ஆயிற்று சுத்தரத்னம்போல் பிரகாசிக்கிறவனுயும், கண்களுக்குக் குளிர்ச்சியை உண்டுபண்ணுகிற வனுயுமிருக்கிற சோமனை, பிரஹ்மாவானவர் உலக நன்மைக்காக இரவில் தேரில் ஏற்றிவைத்துக் கொண்டு, தன் லோகம் அழைத்துக்கொண்டுபோய் அமிருதத்தைக் கொடுத்து வளர்த்தார்.

வெகுகாலம் கழித்து ஸோமன் தான் தவம் செய்யும் எண்ணத்துடன் ப்ரஹ்மாவின் அனுமதியைப்பெற அவர் முன்னுல் வந்து நின்ருன். சுத்த ரத்னம்போன்ற ஒளியுடன் தன் முன் நிற்கும் ஸோமனைப் பார்த்து பிரஹ்மாவானவர் 'ஹே ஸோம! நீ என் மானஸ புத்திரராயும் ஊர்த்வ தேஜஸ்ஸுடன் கூடியவராயுமுள்ள அத்ரி மஹரிஷியின் கண்களிலிருந்து உண்டாகி யிருக்கிருய். நீ பூலோகம் சென்று ஆம்ரவணத்தில் இருக்கும் சுத்தரத்னேசுவர லிங்கத்தை ஆராதனம் செய். அவர் அருளால் சூரியன் பகலுக்கு நாதனுக ஆனதுபோல் நீ நிசாநாதனுக ஆவாய். பகலில் சூரிய கிரணங்களால் துன்புற்ற பிராணிகளுக்கு நீ இரவில் உன்னுடைய அமிருத கிரணங்கள் மூலம் தாபத்தைப்போக்கி குளிர்ச்சியைக் கொடுத்து ஸந்தோஷப்படுத்து. இதனுல் உனக்கு சந்திரன் என்று பெயர். பொய் சொன்னதால் எனக்கு ஏற்பட்ட பாபம் அங்குபோய் தவம் செய்ததால் ஆம்ரவணேசர் அருளால் நீங்கியது. ருத்ர கோபத்தால் ஆனந்தமற்று இருக்கும் எனக்கு அந்த ஸ்தலம் போனதும் ஆனந்தம் ஏற்பட்டதால்

அதற்கு ப்ரஹ்மானந்தபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. என்னுல் ஸிருஷ்டிக்கப்பட்ட ப்ரஹ்ம தீர்த்தம் அங்கு உள்ளது. அங்கு தவம் செய்தால் எந்த ஸ்தானத்தையும் அடையலாம். நீ அங்கு போய் தவம் செய்'.

இவ்வாறு கூறிய ப்ரஹ்மாவின் வார்த்தையைக் கேட்டு சந்திரன் பூலோகம் வந்து காவேரிதீரம் சென்று ஆம்ரவனத்தை யடைந்து சுத்தரத்னேச்வரரை பூஜித்து, தேவவர்ஷத்தில் ஆயிரம் வருஷம் தவம் செய்தான். பகவான் சாம்பசிவமூர்த்தியானவர் பார்வதியோடுகூட தர்சனம் கொடுத்து அத்ரியினுடைய புத்ரனான சந்திரனைப்பார்த்து மந்தஹாஸத்தினுல் திக்குகளை எல்லாம் பிரகாசிக்கும்படி செய்து கொண்டு சொன்னுர். "ஏ குழந்தாய்! மிகவும் கடுமையான நியமத்தோடு நீ செய்த தவத்தால் நான் சந்தோஷமடைந்தேன். இரவில் உன்னுடைய கிரணங்களினுல் இருளைப்போக்கி கலைகளால் தேவதைகளை திருப்தி பண்ணுகிறவனுய் நிசாநாதனுக பிரகாசிக்கக்கடவாய். மத்யான்னத்தில் சூர்ய கிரணத்தினுல் வாட்டம் அடைந்த ஜந்துக்களை இரவில் உனது அம்ருதமயமான கிரணங்களினுல் சந்தோஷப்படுத்திக்கொண்டு பிரகாசிக்கக்கடவாய். பார்வதியோடுகூடிய என்னை பூஜித்ததினுல் உலகில் உனக்கு ஸோமன் என்ற பெயர் இருக்கட்டும். உன்னுடைய க்ஷேமத்தின் பொருட்டு என் சிரஸ்ஸில் உன் கலை ஒன்றை தரித்துக்கொள்

கிறேன்' இவ்வாறு அருள் புரிந்துவிட்டு பார்வதீ ஸமேதராய் அந்த லிங்கத்திலேயே மறைந்து விட்டார். இவ்விதம் சந்திரன் ஆம்ரவணேச்வரரின் பிரசாதத்தினுலே இரவிற்கு ராஜாவாக ஆகாசத்தில் பிரகாசிக்கிருன். அந்த சந்திரனுடைய உற்பத்தியையும், அவன் தவம் செய்ததையும் சிரத்தையோடு எவர்கள் படிக்கிருர்களோ, அவர்கள் பாபமற்றவர்களாக அம்ருதத்தைச் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள்.

இருபத்தொன்ருவது அத்யாயம் முற்றும்.

இருபத்திரண்டாவது அத்யாயம்

சௌனகாதி ரிஷிகள் சூதரைப்பார்த்து 'வார்த்யச்வ முனிவரின் தவத்திற்கு விக்னம் செய்து ஸமுத்ரராஜன் அவருடைய சாபத்தால் அசுத்தியைப் பெற்ற கதையைச் சொல்லவேண்டும்' என்று கேட்க சூதமுனிவர் கூறுகிருர்.

ரிஷிகளே! வார்த்யச்வர் என்ற பிரும்மரிஷியானவர் எவராலும் செய்யமுடியாததான தவத்தை சமுத்திரத்தில் ஓர் மடுவில் இருந்து கொண்டு செய்தார். அவருடைய தபோக்னியானது தேவலோகம் சென்று தேவதைகளை எல்லாம் எரித்தது. பற்பல ஜந்துக்களோடுகூடிய சமுத்திரமானது நான்குபக்கத்திலும் நெருப்பைப்போல் கொதித்தது. இந்த ரிஷியின் தபோக்னியை ஸகல தேவதை

களும் சகிக்கமுடியாதவர்களாய் இந்திரனிடத்தில் முறையிட்டார்கள்.

அதைக்கேட்டு இந்திரன் மலிம்லுசர்கள் என்னும் சில ராக்ஷஸர்களைக் கூப்பிட்டு, 'ஹே ராக்ஷஸர்களே! நீங்கள் செம்படவர் வேஷம் பூண்டு அனேக வலைகளை எடுத்துக்கொண்டு சமுத்திரமத்தியை அடைந்து, அவ்விடத்தில் தவம் செய்யும் ரிஷியை மீன் கூட்டத்தோடு கூட வலைகளால் இழுத்து கரையில் கொண்டுசேருங்கள்' என்று கட்டளையிட்டான். மிகவும் சாமர்த்திய முள்ளவர்களாயும், நினைத்தபடி உருவம் எடுத்துக் கொள்ளும் சக்தியுடையவர்களாயுமுள்ள அந்த ராக்ஷஸர்கள், அவ்வார்த்தையைக்கேட்டு சமுத்திரம் சென்று நான்கு பக்கங்களிலும் வலையை வீசியும் அந்த ரிஷியை ஓரிடத்திலாவது பார்க்கமுடியவில்லை.

அந்த சமயம் சமுத்திரராஜன் ரஹஸ்யமாக அவர்களிடம் வந்து "ஹே ராக்ஷஸர்களே! இங்கிருந்து வெகு தூரத்துக்கப்பால் இருக்கும் ப்லக்ஷத்வீபத்தில் நாகம் என்று ஒரு மடு இருக்கிறது. அம்மடுவில் தான் அந்த ரிஷி தவம் செய்கிறார். அவருடைய தபோக்னியால் நானும் மிகவும் கஷ்டப்படுகிறேன். நீங்கள் எப்படியாவது சென்று வலையைவீசி ரிஷியைக் கரைக்கு இழுத்து தவத்தை கலைத்துவிடுங்கள். நானும் வேண்டிய ஒத்தாசை செய்கிறேன்" என்று சொன்னான். ராக்ஷஸர்கள் ப்லக்ஷத்வீபம் சென்று அம்மடுவில் வலைவீசியும்

ரிஷியைப் பிடிக்கமுடியவில்லை. ஸமுத்ரராஜன் பெரிய அலைகளை கிளப்பி ரிஷியை மேலே கொண்டு வந்ததும் வலையில் அகப்பட்டுவிட்டார். உடனே ராக்ஷஸர்கள் ரிஷியை கரைக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.

உடனே ரிஷியானவர் நிஷ்டை கலைந்து கண் விழித்துப் பார்த்து சமுத்திராஜன் கோள்சொல்லிக் கொடுத்து தவத்தை விக்னம் செய்ததையறிந்து மிகவும் கோபமடைந்து சமுத்ரராஜாவான வருணனை சபித்தார். 'பரமபாகவதர்கள் ஸ்நானம் செய்வதாலேதான் தீர்த்தங்கள் புண்ய தீர்த்தங் களாகின்றன. உன்னுடைய தீர்த்தத்தில் ஸாக்ஷாத் ஜகத்பதியை தவத்தினுல் ஆராதித்துக்கொண்டிருக் கும் என்னை ராக்ஷஸர்களைக்கொண்டு மீன்களோடு கூடச்சேர்த்து கரைக்கு இழுத்துக்கொண்டு வரும் படி செய்தாய் அல்லவா! ஆகையால் ஹே வருணு! நீ எப்பொழுதும் சுத்தமில்லாமல் போகக்கடவாய்' என்று சபித்தார்.

உடனே சமுத்ரராஜாவான வருணன் அநேகம் சுத்த ரத்னங்களைக் காணிக்கையாக வைத்து மஹரிஷியை நமஸ்கரித்து 'ஹே முனிச்ரேஷ்டரே! தங்களுடைய தபோக்னியானது என்னையும் என்னிடம் வஸிக்கும் ஜந்துக்களையும் தஹித்தது தாபத்தைத் தாங்கமாட்டாமல் குற்றம் செய்து விட்டேன். என் அபராதத்தை க்ஷமிக்கவேண்டும்' என்று பிரார்த்திக்க; பிரும்மரிஷி சந்தோஷ மடைந்து 'என்னை ரத்னங்களினுலும், ஸ்தோத்ரங்

களினாலும், சந்தோஷப்படுத்தினபடியால் சாப நிவர்த்திக்கு ஓர் உபாயம் சொல்கிறேன். இங்கிருந்து வெகுதூரத்தில் காவேரி நதிக்கரையில் ஆம்ரவணம் என்ற வனத்தில் தேவதைகளால் பூஜிக்கப்பட்டதான சுத்தரத்னேச்வரர் என்ற லிங்கம் இருக்கிறது. அந்த ஆம்ரவணத்தை பிரும்ம வித்துக்கள் தக்ஷிண காசி என்பார்கள். அந்த க்ஷேத்திரமடைந்து அந்த லிங்கத்தை சுத்த ரத்னங் களினால் பூஜித்தால் அவருடைய அநுக்ரஹத்தினால் பர்வகாலங்களில் மட்டும் நீ சுத்தியடைவாய். மற்ற காலங்களில் ராமஸேதுவைத்தவிர மற்ற இடங்களிலெல்லாம் ஸமுத்திரம் அசுத்தமாகத்தான் இருக்கும். அவருடைய பிரஸாதத்தினால் ரத்னாகரம் என்ற பெயரையும் அடைவாய்' என்று அநுக்ரஹம் செய்தார்.

பிறகு சமுத்திரராஜன் புண்ய விருக்ஷங்களினால் பிரகாசிக்கிறதாயும், எப்பொழுதும் கண்ணுக்கு ரமணீயமாயும் இருக்கிற ஆம்ரவணத்தையடைந்து காயத்ரீ நதியில் நீராடி சுத்த ரத்னங்களினால் பரமேசுவரனை பூஜை செய்து வெகு காலம் தவம் செய்தான்.

பிறகு ஈசுவரன் பிரத்யக்ஷமாக தர்சனம் கொடுத்து 'ஹே சமுத்திரராஜனே! உனது தவத்தைக்கண்டு மகிழ்ந்தேன். என் பக்தரான மஹரிஷி சொல்லியபடி நீ பர்வகாலத்தில் மட்டும் சுத்தியடைவாய். மற்ற காலங்களில் ஸேதுவில் மட்டும் உனக்கு சுத்தி உண்டு. என் பக்தர்

சொன்ன வார்த்தை ஒருநாளும் பொய்யாகாது. கிரஹண சமயத்திலும் மற்ற பர்வ காலங்களிலும் மஹோதயத்திலும் ஸமுத்ரத்தில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செய்கிறவர்கள் எல்லாப் பாபங்களும் விலகி எனது லோகத்தையடைவார்கள். மேலும் நீ ஸர்வரத்னாகரனாக ஆவாய். உன்னுடைய தீர்த்தத்தில் 'சுத்தரத்னேசா, ஸர்வரத்னாகரா' என்று உன்னையும், என்னையும் நினைத்துக்கொண்டு எவர்கள் ஸ்நானம் பண்ணுகிறார்களோ அவர்கள் எண்ணற்ற முற்பிறவிகளில் செய்த கோடிக்கணக் கான கொடிய பாபங்களினின்றும் விடுபட்டு தேவ லோகம் சேர்வார்கள். இதில் சந்தேஹமில்லை. இந்தக்கதையை எவர்கள் கேட்கிறார்களோ, அவர்கள் புத்திர பௌத்ராதிகளோடுகூட நீண்ட ஆயுளையும் ஏராளமான ஐசுவர்யத்தையுமடைந்து இவ்வுலகில் ஸகலமான போகங்களையும் அனுப வித்துக் கடைசியில் என்னுடைய லோகத்தை அடைவார்கள்' என்று அனுக்ரஹம் செய்துவிட்டு மறைந்தார்.

ஏ ரிஷிகளே! இவ்விதம் ஈச்வர பிரஸாதத்தை அடைந்ததால் அதுமுதல் ஸமுத்திரத்தில் முத்து, பவழம் முதலான எல்லா ரத்னங்களுமுண்டாயின. அதற்கு முன்னால் இல்லை. வார்த்யச்வரும் கொஞ்ச காலத்திற்குள்ளாக ஈச்வர பிரஸாதத்தையடைந்து உலகம் முழுவதையும் சிவமயமாகப் பார்த்துக் கொண்டு சருகு, தீர்த்தம், காற்று இவைகளையே ஆகாரமாகக்கொண்டு அநேகம் புண்யாரண்யங்

களையெல்லாம் சுற்றிக்கொண்டு ஆம்ரவணம் அடைந்து பரிசுத்தமான அந்த சுத்தரத்னேச்வர லிங்கத்திலேயே லயமடைந்து விட்டார்.

இருபத்திரண்டாவது அத்யாயம் முற்றும்

இருபத்திமூன்ருவது அத்யாயம்

'பகவான் சம்பு, கௌரியுடன்கூட எதற்காக மான் உருவத்தை எடுத்தார்? இதைப்பற்றிச் சொல்லவேண்டும்' என்று சௌனகாதி முனிவர்கள் கேட்க சூதமுனிவர் கூறுகிருர்.

''கேளுங்கள் சௌனகாதி ரிஷிகளே! முன் ஒரு காலத்தில் இந்த ஆம்ரவணத்தில் ஒரு வேடன் காட்டில் வேட்டையாடி வரும்போது ஆணும் பெண்ணுமான இரண்டு மான்கள் குட்டிகளுடன் விளையாடிக்கொண்டு இருப்பதைக் கண்டான். உடனே அவைகளைக்கொல்ல நினைத்து வில்லை வளைத்து அம்பு எய்தான். இரண்டு மான்களும் வேடனின் அம்பால் இறந்துவிட்டன. அவைகளை வேடன் எடுத்துக்கொண்டு சந்தோஷத்துடன் இன்று நல்ல ஆகாரம் கிடைத்தது என்று நினைத்துத் தன் வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தான்.

பிறகு மான்குட்டிகள் தாய் தந்தையர்களைப் பிரிந்து மிகவும் துக்கமடைந்து ஆகாரமில்லாமல் நாவறண்டு கண்ணீரைக் கண்களினின்றும் தாரை

தாரையாகவிட்டு அழுதுகொண்டுதிரிந்தன. இந்த விருத்தாந்தத்தை இவ்விடம் வஸிக்கும் மிருகண்டு மகரிஷியின் சிஷ்யர்கள் கண்ணுற்று வருத்த மடைந்து மஹரிஷியிடம் தெரியப்படுத்தினர்கள். இதைக்கேட்ட ரிஷியானவர் மிகவும் துக்கத்தினல் ஹே சம்போ! கிரீசா! என்று பகவானை பிரார்த்தித்தார்.

மிருகண்டு மஹரிஷியின் குரலைக்கேட்ட பார்வதீதேவி இம்மான்குட்டிகளைப் பார்த்து துக்க மடைந்தவளாய் தன் கணவரைப்பார்த்து "ஹே நாதா! நாம் வசிக்கும் இந்த ஆம்ரவணத்தில் தாய் தந்தையர்களை இழந்த இம்மான்குட்டிகள் மிகவும் கஷ்டப்படுகின்றனவே லோகரக்ஷகனன தாங்கள் இவைகளைக் காப்பாற்றவேண்டும்" என்று சொன்னுள்.

உடனே சம்புவானவர் பார்வதியைப் பார்த்து கூறுகிருர். 'ஹே பார்வதி! உலகில் எவரெவர்கள் எந்தெந்த கர்மாக்களைச் செய்கிருர்களோ அந்தந்த கர்மாக்களின் பலனை அவரவர்கள் அனுபவித்தே தீரவேண்டும். அனேக பசுக்கூட்டங்கள் கும்பலாக இருந்தாலும் கன்றுக்குட்டியானது தன் தாயை யடையுமல்லாது வேறு பசுக்களைப் போயடையாது. அதைப்போல் அவனவன் செய்த பூர்வவினை அவனையே வந்தடையும்.

'' ஹே கௌரி! இந்த மான் குட்டிகள் முன் ஜன்மத்தில் கனகஜாங்கலம் என்ற அக்ரஹாரத்தில் பிரும்மண ஜாதியில் பிறந்திருந்தார்கள். இவர்கள்

கன்றுக்குட்டியை அவிழ்த்துவிட்டு பால் குடிப் பதற்கு முன்னமே கட்டிவிடுவார்கள். இவர்களின் தாய் தந்தையர்கள் பசுவுக்கு உணவுகொடுக்காமல் பாலை முழுவதும் கறந்துகொண்டு போவார்கள். மாடு மேய்க்கும் இடையனுக்குக் கூலி கொடுப்ப தில்லை. அந்த பாபத்தால் தாய் தந்தையர்கள் ஆண் பெண் மான்களாகவும் பிள்ளைகள் மான்குட்டி களாகவும் பிறந்திருக்கிறார்கள். அவ்வேடன் மாடு மேய்த்த இடையன். தனக்கு வரவேண்டிய கூலி யின் நிமித்தம் இவர்களைக்கொன்று மாமிசத்தை சாப்பிட்டுவிட்டான். இடையன் பசுமாடுகளை அடித்தபடியால் வேடனாகப்பிறந்தான்.

ஆகையால் எவர்கள் பசுவையடிக்கிறார்களோ; கன்றுக்குட்டியை பால் ஊட்டவிடாமல் கறக்கிறார் களோ; பசுக்களை வண்டியில் பூட்டி பாரத்தை இழுக்கும்படி செய்கிறார்களோ அவர்கள் யாவரும் காட்டில் வேடனாகப் பிறக்கிறார்கள். இருந்தாலும் புண்யமான இந்த ஆம்ரவணத்தில் பிராண வியோகம் ஏற்பட்டதால் இந்த ஆண் பெண் மான்கள் இரண்டும் இந்தப் புண்யத்தால் புண்ய லோகங்களையடைந்து கடைசியில் கைலாஸ லோகத்திற்கு வந்து சேருவார்கள்".

இதைக்கேட்ட பார்வதியானவள் 'பிரபோ, இத்தகைய பாபம் செய்த இவர்களுக்கு புண்யமான இந்த ஆம்ரவணத்தில் எப்படி பிறவி ஏற்பட்டது. புண்யம் செய்தவர்களுக்குத்தானே இங்கே ஜன்மா கிடைக்கும். ஸர்வக்ஞரான தாங்கள் இந்த எனது

ஸந்தேஹத்தை நீக்கியருளவேண்டும்' என்று கேட்கவே பரமசிவன் கூறுகிருர்.

"என் பக்தர்களில் மிகச் சிறந்தவரும் வேத சாஸ்திரங்களை நன்கு கற்றவருமான உக்ரதபஸ் என்பவர் யாத்திரையாக காசிக்குப் போகும் வழியில் இந்த கனகஜாங்கலம் வந்தார். கோடை காலம், நடுப்பகல், ஒரு தடாகத்தில் குளித்துவிட்டு எனது பூஜை செய்வதற்காக புஷ்பங்கள் பறித்துவர எண்ணிஞர். தாங்க முடியாத வெய்யிலால் தரையில் கால் வைக்கமுடியவில்லை. அப்பொழுது இந்த பிராமணச் சிறுவர்களைப் பார்த்தார். 'ஏ சிறுவர்களே! நான் சிவபூஜை செய்வதற்கு புஷ்பங்கள் வேண்டும். பூந்தோட்டம் எங்கே இருக்கிறது? சமீபத்திலிருக்கிறதா? வெய்யிலால் வெளியில் போகமுடியவில்லையே' என்று வினவிஞர். உடனே அச்சிறுவர்கள் ஸ்நானம் செய்து பரிசுத்தர்களாக வெகு தூரத்திலுள்ள தோட்டம் சென்று மலர்களையும் துளிர்களையும் பத்ரங்களையும் பறித்து தாமரை இலையில் வைத்துக் கொண்டு வந்து பிராம்மணரிடம் கொடுத்தார்கள். இதைக்கண்டதும் பிராம்மணருக்கு ஏற்பட்ட ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. சிறுவர்களைக் கொண்டாடிவிட்டு அந்த மலர்களால் என்னை பூஜித்தார். என் பக்தன் யாரிடம் ப்ரீதி கொள் கிருஞே அவன் எனக்கு மிகவும் பிரியமானவன். எனது பூஜைக்காக எனது பக்தருக்கு மலர்கள் பறித்துக்கொடுத்து அவருடைய ப்ரீதியைப் பெற்ற தால், பாபிகளாயிருந்தாலும் அந்தச் சிறுவர்களும்

அவர்களின் பெற்றோர்களும் புண்யமான ஆம்ர வணத்தையடைந்திருக்கிறார்கள். புத்ரர்கள் செய்த புண்யம் பெற்றோருக்கும் நற்பயனைக் கொடுத்தது. என் பக்தருக்கு முற்பிறவியில் உபகாரம் செய்திருக்கிறபடியால் நானும் நீயும் அவசியம் மான்குட்டிகளைக் காப்பாற்றவேண்டும்.''

இவ்வாறு கூறிவிட்டு பார்வதியோடுகூட பரமசிவன் மான் உருவம் எடுத்து அக்குட்டிகளுக்கு பால் கொடுத்து தாயைப்போல சம்ரக்ஷித்தார்கள். மிருகண்டு முனிவர் தன் சிஷ்யர்களைப் பார்த்து இப்பொழுது மான் குட்டிகள் எப்படியிருக்கின்றன என்பதை நேரில் கண்டு தெரிந்துவரும்படி கட்டளை யிட்டார். சிஷ்யர்களும் நேரில் போய் பார்த்து விட்டு குருவிடம் வந்து 'ஹே குரோ! மான் குட்டிகள் முன்போல் இப்பொழுது வாட்டத்துடன் சோர்ந்திருக்கவில்லை. தாய்ப்பாலையும் நல்ல உணவையும் பெற்று புஷ்டியடைந்து தாய் தந்தையர்களுடன் ஸந்தோஷமாகக் குதித்து விளையாடுகின்றன. தாயிடம் பால் சாப்பிடுகின்றன' என்று கூறினார்கள்.

இதைக்கேட்ட மிருகண்டு முனிவர் ஆச்சர்ய மடைந்து தானும் நேரிற்சென்று பார்த்து உண்மை யாக இருக்கவே ஞான திருஷ்டியால் பார்த்தார். அப்பொழுது பெரிய மான்களிடத்தில் சந்திர ரேகை ஜடாமுடி முதலிய ஈச்வர சின்னங்கள் இருக்கக்கண்டு வியப்படைந்து, இவர்கள் பார்வதீ

பரமேச்வரர்கள் என்று நினைத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து ஸ்தோத்திரம் பண்ணினார்.

'எந்த புருஷன் ஸமுத்ர மதனத்திலுண்டான விஷத்தையுண்டு உலகை ரக்ஷித்தாரோ; அந்த கருணாநிதியான ஆம்ரவணேச்வரர் இப்பொழுது மாயையால் மான்ரூபமெடுத்து மான் குட்டிகளை ரக்ஷித்துக்கொண்டு விளங்குகிறார். ஸநகாதி யோகிகளால் தியானிக்கப்படுகிறவரே! நெற்றிக் கண்ணால் காமனை எரித்தவரே! பக்தர்களுடைய துக்கத்தை நாசம் பண்ணுகிறவரே! என்னை ரக்ஷிக்க வேண்டும். உமக்கு ஜயமுண்டாகட்டும். ஹே கருணாநிதே! சரணாகத ரக்ஷகா! மனோக்ஞமான சந்திர கலையால் ரமணீயமாக இருக்கிற ஜடா முடியை தரித்தவரே! தூர்ஜடே! தீனபந்தோ! திவ்யமூர்த்தே! பிரும்மா முதலிய தேவதைகளால் ஆராதிக்கப்படுகிறவரே! பார்வதியால் ஆலிங்கனம் பண்ணப்பட்ட இடது பாகத்தையுடையவரே! சர்ப்பங்களை அணிந்தவரே! ஏ சம்போ! ஆம்ர வணேசா! என்னை ரக்ஷிக்கவேண்டும். உனக்கு ஜயமுண்டாகட்டும்'.

இவ்வாறு ஸ்தோத்ரம்செய்து ஆம்ரவணேசனை மனதில் நினைத்து வணங்கி ஆனந்தபாஷ்பம் பெருக ஆச்ரமம் போய்ச்சேர்ந்தார். அதுமுதல் இந்த க்ஷேத்ரத்திற்கு மிருகதீர்த்தபுரம் என்ற பெயர் ஏற்பட்டது. பிறகு பகவான் அந்த மான் குட்டிகளை ரக்ஷித்து இப்பிறப்பின் முடிவில் தன்னிருப்பிடமான கைலாஸபர்வதத்தில் அவைகளை தமது கணங்களின் தலைவர்களாக ஆக்கினார்.

இக்கதையைப் படிக்கிறவர்கள், கேட்கிறவர்கள், ஆம்ரவணேசன் கடாக்ஷவீக்ஷண்யம் பெற்று ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு மோக்ஷம் அடைவார்கள்.

இருபத்திமூன்ருவது அத்யாயம் முற்றும்.

இருபத்திநான்காவது அத்யாயம்

—:O:—

சௌநகாதி மஹரிஷிகள் காயத்ரீ நதியின் மஹிமையைக் கூறவேண்டுமென்று கேட்க ஸூதர் கூறுகிருர். "ஏ ரிஷிகளே! கேளுங்கள். காயத்ரீ நதியின் கதையைச் சொல்கிறேன். அதைக் கேட்டமாத்திரத்தில் ஸகல வேதங்களையும் பாராயணம் செய்த பலன் கிடைக்கும்.

முன்னொரு காலத்தில் இந்த ஆம்ரவணத்தில் பிரும்மா தேவதைகளோடுகூட வந்து அச்வமேத யாகம் செய்ய ஆரம்பித்தார். அந்த யாகம் முடிந்த பிறகு அவபிருத ஸ்நானம் செய்வதற்கு காயத்ரீ தேவியை நினைத்தார். உடனே காயத்ரீ தேவி அங்கு தோன்றவே, 'ஏ காயத்ரி! நீ சீக்கிரம் ஆம்ரவணத்தில் லிங்கத்திற்கு தென்பக்கம் நதிரூபமாக பிரவஹிக்கவேண்டும் கொஞ்சம் கிழக்குமுகமாகச் சென்று காவேரியில் ஸங்கமத்தையடையக்கடவாய். உன்னுடைய தீர்த்தத்தில் எவர்கள் ஸ்நானம் பண்ணுகிருர்களோ; அவர்களுடைய ஸகல பாபங்களும் நிவாரணமாகும்.

எப்பொழுதும் உன்னுடைய இரு கரைகளிலும் ஸஸ்யங்களை விருத்திபண்ணிக்கொண்டு நதிரூபி யாக இருக்கக்கடவாய்' என்று சொன்னார்.

பிரும்மாவின் ஆக்ஞையை சிரமேல்கொண்டு காயத்ரீ தேவி ஆம்ரவணத்தின் மேற்குத்திக்கில் நதீரூபமாகத் தோன்றி தேவதைகள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே அநேகம் மீன் ஆமை முதலிய ஸகல ஜந்துக்களோடும், நுரைகளோடும் லிங்கத்தின் தென்பாகத்தில் கிழக்கு முகமாய் பிரவ ஹித்து பிரேமபுரி என்ற (அன்பில்) க்ஷேத்ரத்தில் காவேரியோடு ஸங்கமமடைந்தாள். உடனே பிரும்மா ருத்விக்குகளோடும், தேவகணங்க ளோடும் அச்வமேத யாகத்தைமுடித்து அந்நதியில் அவப்ருதஸ்நானம் செய்து ஆம்ரவணேசனை நமஸ்கரித்து தன்னுலகம் போய்ச்சேர்ந்தார்.

ஹே ரிஷிகளே! அதுமுதல் நதிரூபிணியான காயத்ரீ தேவி தன்னிடம் ஸ்நானம் பண்ணும் மனுஷ்யர்களை பரிசுத்தம் பண்ணிக்கொண்டு இப்பொழுதும் பிரகாசிக்கிருள்.

ஹே முனிச்ரேஷ்டர்களே! இந்த காயத்ரீ நதிக்கரையில் நடந்த ஓர் ஆச்சர்யத்தைச் சொல் கிறேன் கேளுங்கள். முன்னொரு காலத்தில் சுவ்ரதன் என்ற பிரும்மணன் காயத்ரீ நதிக் கரையில் குருகுலவாஸம் செய்துகொண்டு விரதோப வாஸாதி நியமங்களோடு அத்யயனம் செய்து வந்தான். வெகுகாலம் இரவு பகலாக வித்யையை அப்யஸித்தும் முடிவுபெறவில்லை. இவனேடுகூட

படித்த சிநேகிதர்கள் யாவரும் முடித்துவிட்டனர். இதைக்கண்ட ஸுவ்ரதன் மிகுந்த துக்கமடைந்து 'ஸகல வேதங்களுக்கும் காரணம் காயத்ரீ. பிரும்மாவின் யாகத்தை உத்தேசித்து அவரால் வேண்டப்பட்டு அந்த காயத்ரீ இங்கு நதிரூபிணி யாக பிரவஹிக்கிருள். ஆகையால் இவளையே உபாசித்து வித்யையை அடையப்போகிறேன். இல்லாவிடில் வேறு கதியில்லை' என்று மனதில் நிச்சயம் செய்துகொண்டு குருவின் அனுமதியைப் பெற்று அவருடைய உத்தரவின்பேரில் ஆம்ர வணததிற்கு மேற்கு திசையிலிருந்து உத்பத்தியாகி வருகிற காயத்ரீ நதிக்கரையில் கதம்பவனத்துக்குக் கிழக்கே சித்த, சாரண, கந்தர்வாதி தேவகணங் களால் ஸேவிக்கப்படுகிற காயத்ரீநதியை மலர் களாலும் தூபதீப நைவேத்யாதிகளாலும் பூஜித்துக் கொண்டும், ஸ்தோத்திரம் செய்துகொண்டும் மிகுந்த நியமத்துடன் தபஸ் செய்தான்.

இவ்வாறு வெகுநாள் விரதத்தோடு செய்த தபஸ்ஸினுல் காயத்ரீ தேவியானவள் ஸந்தோஷ மடைந்து இடுப்பளவுள்ள ஜலத்தில் நின்றுகொண்டு ஸுவ்ரதனுக்குத் தெரிவதற்காக தன் ஸ்வர்ண வளைகளின் ஓசை இவன் காதில் படும்படி கைகளை ஆட்டினுள்.

மதுரமான கைவளைகளின் ஓசையைக்கேட்ட பிராம்மணன் நிஷ்டை கலைந்து கண்விழித்து ஜலத்தின் மத்தியில் இருக்கிறவளாயும், ஸ்வர்ண வளையல்களை அணிந்தவளாயும், ரத்னம் பதித்த

மோதிரங்களால் அலங்கரிக்கப்பட்ட விரல்களை யுடையவளாயும், கொடிபோன்ற கரங்களையுடைய வளாயுமிருக்கிற பெண் உருவத்தைக் கண்டு ஆச்சர்யமடைந்து ஜலத்திலிறங்கி கைகளில் தீர்த்தத்தை எடுத்து அர்க்யப்ரதானம் செய்தான்.

உடனே தேவியானவள் ஸ்வர்ணகாந்தியோடு கூடிய ஓர் நெல்லிக்கனியை இவன் கையில் கொடுத்து ஆச்சர்யமான தன் ஸ்வரூபத்தை இவனுக்கு பிரத்யக்ஷமாகக் காண்பித்து மின்னல் போல் ஒரு நொடியில் மறைந்துவிட்டாள். உடனே பிரும்மணன் மயிர்க்கூச்சுடன் சந்தோஷமடைந்து வேத முழுவதும் தன் கையில் வந்ததாக எண்ணிக் கொண்டு நெல்லிக்கனியை எடுத்துக்கொண்டு கரை சேர்ந்து குருவிடமும் மற்றுமுள்ள ரிஷிகளிட மும் இந்த விருத்தாந்தத்தை ஆனந்தத்துடன் கூறினன்.

அப்பொழுது பரமதார்மிகராயும், விருத்தராயு முள்ள உசங்கு என்னும் முனிவர் ஸுவ்ரதனைப் பார்த்து ஸந்தோஷத்துடன் கூறினர் 'ஏ சுவ்ரதா! லோக ரக்ஷணத்திற்காக நதிரூபத்துடன் ப்ரவஹிக் கிற காயத்ரீ தேவி உன் தவத்தால் ப்ரீதியடைந்து உனக்கு அருள்புரிந்திருக்கிருள். கிழத்தன்மையால் கட்டுத்தளர்ந்த என் சரீரத்தை தியாகம் செய்யும் எண்ணத்துடன் இந்த தேசம் வந்தேன். இன்னும் காயத்ரீ தேவியின் அருள் எனக்குக் கிடைக்க வில்லை. திவ்யமான இந்த நெல்லிக்கனியை நீ சாப்பிடு. இதன்மூலம் ஆறு அங்கங்களுடன்கூடிய வேதம் உனக்கு விளங்கப்போகிறது. அறிவாளி

களில் சிறந்தவனாக நீ ஆகப்போகிறாய். நீ கிருதார்த்தன். நான் கூறுவதைக்கேள். சில காலத்திற்குப் பின்னால் இந்த தேசத்தில் துர்பிக்ஷம் வரப்போகிறது. பசியால் வாடிய ஜனங்கள் வேத மார்க்கத்திலிருந்து நழுவி விடுவார்கள். வேதமே மறைந்துவிடும். மறுபடியும் துர்பிக்ஷம் நீங்கி ஸுபிக்ஷம் வந்த பிறகு இந்த நெல்லிக்கனியின் மகிமையால் துர்பிக்ஷத்தால் துன்புறாமல், வேதங்களை மறக்காமல் மனதில் தரித்துக்கொண்டிருக்கும் உன்னிடம் வந்து பிராம்மணர்கள் வேத பிக்ஷையை யாசிப்பார்கள் உன்னால்தான் மறைந்துபோன வேதம் மறுபடியும் தழைத்தோங்கப்போகிறது.'

இந்த வார்த்தையைக் கேட்டு ஸுவ்ரதன் வ்ருத்தரான உசங்குவை வணங்கி திவ்யமான நெல்லிக்கனியைக் கொட்டையுடன் சேர்த்துப் புஜித்தான். அந்த க்ஷணத்திலேயே ஆறு அங்கங்களுடன் கூடிய ஸகல வேதங்களும் அவன் மனதின்கண் பிரகாசித்தன. இவருடன் கூடப் படித்த நண்பர்கள் குருவுடன் வந்து 'ஏ ஸுவ்ரதா! நாங்கள் குருமுகமாக ஒவ்வொரு சாஸ்திரத்தையும் அப்யஸித்தோம். நீயோ தேவியின் அனுக்ரகத்தால் ஓர் நொடியில் ஸகல சாஸ்திரங்களையும் அறிந்துவிட்டாய். நீயே பாக்யவான், கிருதார்த்தன்.' என்று அவனைப் புகழ்ந்து தம்தம் இருப்பிடம் போனார்கள்.

பிறகு அப்பிராம்மணன் மஹாஸௌந்தர்யம் உள்ள ரைப்ய மஹரிஷியின் பெண்ணான சுசீலை

என்ற கன்னிகையை விவாஹம் செய்துகொண்டு அநேக யாகங்கள் செய்து கிருஹஸ்தாச்ரம தர்மத்தை வழுவாது நடத்தி முனிச்ரேஷ்டனுகி விட்டான். பலருக்கு வேதங்களைச் சொல்லி வைத்தான். அதுமுதல் புண்ய விருக்ஷங்கள் நிறைந்த இந்த ஆம்ரவணத்திற்கு, தேவியானவள் கைவளையல்களை அசைத்துக்காட்டியபடியால் 'வலயநாடி' என்ற பெயரும் பிரஸித்தமாக ஏற்பட்டது.

இந்த க்ஷேத்திரத்தின் மேற்குதிக்கில் கதம்ப மரங்கள் நிறைந்த ஓர் வனம் இருக்கிறது. இதனுல் இதற்குக் கதம்பவனம் என்று பெயர். இந்த க்ஷேத்திரத்தில் பிராம்மணர்கள் வேத பிக்ஷை யாசித்ததால் பிக்ஷாடன க்ஷேத்திரம் (பிக்ஷாண்டார்கோவில்) என்ற பெயர் ஏற்பட்டது. இந்த ஸுவ்ரதன் என்ற பிராம்மணன் ஸந்தோஷத்துடன் அநேக சிஷ்யகோடிகளுடன் வலயநர்த்தநம் என்ற மாந்துரையில் வெகுகாலம் வஸித்தான். சௌனகாதிகளே! இந்த காயத்ரீ தேவியின் சரித்ரத்தை எவர்கள் கேட்கிருர்களோ, அவர்கள் ஸகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு புண்ய லோகத்தை அடைவார்கள்.

இருபத்திநான்காவது அத்யாயம் முற்றும்.

இருபத்தைந்தாவது அத்யாயம்

சௌனகாதிகளே! சிலகாலத்திற்குப் பிறகு சில கிரகங்களின் வித்யாச கதியால் அந்த தேசத்தில் 12 வருஷம் க்ஷாமம் ஏற்பட்டது. மழையின்மையால் பூமியிலுள்ள பயிர்களெல்லாம் நாசமடைந்து விருக்ஷங்களும் கொடிகளும் நாசம் அடைந்தன. திரவ்யமில்லாததால் யாகம், ஹோமம், சிராத்தம் ஒன்றும் நடைபெறவில்லை. அங்கிருந்த ரிஷிகளெல்லாம் ஆகாரமின்மையால் வருந்திப் பல இடங்களுக்கு ஓடிவிட்டார்கள். அதைப் பார்த்து ஸுவ்ரதனும் சுபிக்ஷமாயிருக்கும் இடத்திற்குச் செல்ல எண்ணம்கொண்டான். அப்பொழுது காயத்ரீதேவியானவள் நதியிலிருந்து மின்னலைப்போல் கிளம்பி சரீரத்தைக் காட்டி மறுபடியும் மறைந்து அவனுக்குக் கேட்கும்படி அசரீரியாகச் சொன்னாள்.

"ஹே பிராம்மணனே! இவ்விடம் விட்டு ஓரிடமும் நீ போகவேண்டாம். உன் குடும்ப சகிதமாக சிஷ்யர்களுடன் நீ இங்கேயே இரு. நான் உங்களைக் காப்பாற்றுகிறேன். நீ தவம் செய்யும் வனத்தில் விசாலமான ஒரு கிணறு வெட்டு. அதில் மலையிலிருந்து நதிகள் பிரவஹிக்கிறதுபோல் சீக்கிரம் ஜலம் உண்டாகும். அதன் பக்கத்தில் சாமை தானியத்தை விதைத்து இந்த கிணற்று ஜலத்தினால் பயிர் செய். அந்த கிணற்றில் ஜலம் ஒருநாளும் வற்றாது. மேலும் மேலும் பெருகும்"

இவ்வாறு சொந்த புதல்வனுக்கு சொல்வதுபோல தேவி சொன்ன இவ்வார்த்தையைக் கேட்ட பிராம்மணன் மயிர்க்கூச்சுடன் சந்தோஷமுடையவனாக அவ்விடத்திலேயே தன்னுடைய பந்துக்களோடு ஸந்தோஷமாக வஸித்தான். தேவி சொன்னபடி கிணற்றை வெட்டி, சாமையை விதைத்து கிணற்று நீரால் பயிர் செய்து கிடைத்த தான்யங்களால் அதிதி அப்யாகதர்கள் எல்லோரையும் திருப்திபண்ணி தானும் புசித்து சுகமாக இருந்தான். அக்னி ஹோத்ரம், யாகம், சிராத்தம் செய்து தேவர்களையும் பித்ருக்களையும் திருப்தி செய்வித்தான்.

அந்தப் பஞ்சம் நீங்கியபிறகு இவ்விடமிருந்து போன மஹரிஷிகள் சரியாக ஆகாரமின்மையால் வேதங்களையெல்லாம் மறந்து தங்கள் தங்கள் இருப்பிடம் வந்துசேர்ந்தார்கள். மறந்துபோன வேதம் மறுபடியும் மனதில் ஞாபகம் வருவதற்கு என்ன உபாயம் என்பதைப்பற்றி ஆலோசித்தார்கள். அவர்களில் ஒருவர் சொன்ன வார்த்தையின்பேரில் எல்லோரும் கதம்பவனத்தில் தவம் செய்யும் மார்க்கண்டேய முனிவரிடம் சென்று வேதபிக்ஷை கேட்டார்கள். 'தபஸ்விகளில் சிறந்தவரே! நாங்கள் துர்பிக்ஷத்தால் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டிருந்தோம். பசியால் துன்புற்ற நாங்கள் வேதத்தைச் சொல்லாததால் அது மறந்துவிட்டது. தாங்கள் கருணையுடன் எங்களுக்கு வேதத்தைக் கற்றுக் கொடுக்கவேண்டும்' என்று பிரார்த்தித்தார்கள்.

இதைக்கேட்ட மார்க்கண்டேயர் "ஹே பிராம்மணர்களே! நான் சிறுவன், நீங்களோ விருத்தர்கள். உங்களுக்கு வேதாத்யயனம் செய்துவைப்பது உசிதமல்ல. முறைதவறி வேதத்தை அத்யயனம் செய்தவரும், சொல்லிக் கொடுத்தவரும் நரகத்தையடைவார்கள் என்பது வேதத்தின் கட்டளை. ஆனாலும் உங்களுக்கு வேதம் கிடைப்பதற்கு உபாயம் கூறுகிறேன். இந்தக் கதம்பவனத்திற்குக் கிழக்கே 2 மைல் தூரத்தில் காயத்ரீநதிக் கரையில் வலயநர்தன க்ஷேத்ரத்தில் வஸிக்கும் பரமதார்மிகரான ஸுவ்ரத முனிவர் துர்பிக்ஷ ஸமயத்திலும் எங்கும் போகாமல் இங்கேயேயிருந்து காயத்ரீதேவியின் அருளால் சிரமம் ஒன்றுமில்லாமல் ஆறு அங்கங்களுடன் வேதத்தையும் மறக்காமல் மனதில் தரித்துக்கொண்டிருக்கிறார். அவரிடம் சென்றால் நீங்கள் மறந்த வேதத்தையடையலாம்" என்று சொன்னார்.

உடனே ஸந்தோஷத்துடன் பிராம்மணர்கள் ஸுவ்ரதரையடைந்து பிரார்த்தித்தார்கள். சுவ்ரதருடைய அனுக்ரஹத்தால் முன்போல் வேத வித்வான்களாய் ஆனார்கள். இப்பிராம்மணர்கள் யாவரும் காயத்ரீ நதியின் கரையில் சிஷ்யர்களோடு கூட ஸத்கர்மானுஷ்டானபரர்களாய் வெகுகாலம் இப்பூமியின் கண் உத்கிருஷ்டமான ஸுகமனுபவித்து மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைந்தார்கள். இக்கதையை எவர்கள் சொல்கிறார்களோ; எழுதுகிறார்களோ; அல்லது சிரவணம் பண்ணுகிறார்களோ

அவர்கள் மகாமூடர்களாயிருந்தாலும், வேத வேதாங்க அறிவுள்ளவர்களாய் ஆவார்கள் என்பதில்சந்தேஹமில்லை.

இருபத்தைந்தாவது அத்யாயம் முற்றும்.

இருபத்தாறுவது அத்யாயம்

"ஸூதமுனிவரே, மாமரத்தின் அடியில் ஆவிர்பவித்த ஆம்ரவணேச லிங்கத்திற்கு எந்த பாக்யசாலி விமானம், கோபுரம், ப்ராகாரம், இவைகளுடன் கூடிய ஆலயத்தைக் கட்டினான். இதைக் கேட்க எங்களுக்கு மிக்க ஆவல் இருக்கிறது. தாங்கள் சொல்லவேண்டும்" என்று சௌநகாதி முனிவர்கள் கேட்க ஸூதர் கூறுகிறார்.

"ஏ ரிஷிகளே! கேளுங்கள். இந்த ஆம்ர வணேசருக்கு ஆலய கைங்கர்யம் செய்த மஹா புண்யவானுடைய கதையைச் சொல்கிறேன். முன் ஒருகாலத்தில் வைஜயந்தமென்கிற பட்டணம் ஒன்று இருந்தது. அதை மஹாசிவபக்தனான ச்வேதகேது என்னும் அரசன் தர்மம் தவறாது ராஜ்யபரிபாலனம் செய்துவந்தான். அந்த அரசன் அநேக யாகம், தானம் முதலியவைகளை சிரத்தையுடன் செய்தும் தன் வம்சவிருத்தியுள்ள ஒரு புத்ரன் உண்டாகவில்லை. இதனால் மிகவும் துக்கமடைந்தவனாய் மிகவும் வெறுப்படைந்து அரசன் 'பிள்ளையில்லாதவனுக்கு இந்த ராஜ்யத்

தாலும் ஐசுவர்யத்தாலும் என்ன பிரயோஜனம்? இவனுக்கு இவ்வுலகில் புகழும் கிடையாது. பரலோக ஸுகமும் இல்லை. ஆகவே நான் மனைவியுடன் கூட வனம்சென்று புத்ரனை வேண்டி ஈசுவரனைக் குறித்து தவம் செய்கிறேன்' என்று மனதில் தீர்மானித்து, எல்லா மந்திரிகளையும் வரவழைத்து அவர்களிடம் தன் மனதில் உள்ள வருத்தத்தைக் கூறினான்.

''மந்திரிகளே! நான் அநேக யாகங்கள் செய்தும் குழந்தை எனக்குப் பிறக்கவில்லை. புத்திரன் இல்லாத எனக்கு இந்த ராஜ்யத்தினாலும், யானை, குதிரை முதலியவைகளாலும் என்ன பிரயோஜனம்? ஆதலால் இந்த ராஜ்யத்தை உங்களிடம் ஒப்படைத்துவிட்டு நான் நாளை காலையில் வனம் போய் தவம் செய்யப்போகிறேன்' என்று சொன்னான். மந்திரிகளில் ஒருவரும் பதில் கூறமுடியவில்லை. அரசன் அன்று இரவு அன்ன மருந்தி ராணியுடன் ஈசனை மனதில் நினைத்து அந்தப்புரத்தில் ஹம்ஸ தூளிகா மஞ்சத்தில் நித்திரை செய்தான்.

பிறகு பக்தபராதீனனான சாம்பசிவமூர்த்தியானவர் அரசனது கனவில் பிராம்மணவேஷத்துடன் தோன்றி ராஜாவைக் கூப்பிட்டு, 'ஏ அரசனே! திருவானைக்காவலுக்குக் கிழக்கில் கொஞ்சம் ஈசான்ய திக்கில் காயத்ரீ நதியின் கரையில் ஆம்ரவண க்ஷேத்ரம் ஒன்று இருக்கிறது. ரிஷிகளால் சூழப்பட்ட அந்த வனத்தில் மாமரத்

தடியில் ஸ்வயம்புவான லிங்கம் ஒன்றிருக்கிறது. லிங்கரூபியான அந்தப் பரமேசுவரனுக்கு அந்த ஸ்தலத்தில் விமானத்துடன் கூட ஆலயம் நிர்மாணம் செய்யக்கடவாய். லிங்கத்திற்கு ஈசான்ய திக்கில் தேவிக்கு ஒரு ஆலயமும் கட்டிப் பிரதிஷ்டைசெய். பரிவார தேவதைகளையும் பிரதிஷ்டைசெய். ஆகமவிதிப்படி பிராகாரம், மண்டபம் முதலியதை நிர்மாணம் செய்து, அந்த க்ஷேத்ரத்தில் ஒருமாதகாலம் வஸித்துக்கொண்டு தினமும் ப்ரஹ்மதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அபிஷேகம், பூஜை, பிரதக்ஷிணம், நமஸ்காரம், ஸ்தோத்ரம் இவைகளை செய்து ஆம்ரவணேசரை ஸந்தோஷப்படுத்து. அந்த க்ஷேத்ரத்தில் வஸிக்கும் பிராம்மணர்களுக்கு யதேஷ்டமாகப் போஜனம் அளிக்கவேண்டும். ஒரு மாதம் பூர்த்தி யானபிறகு உனது இருப்பிடம் வந்து பிரஜைகளை தர்மமாகப் பரிபாலனம் பண்ணக்கடவாய். உனக்கு ஆம்ரவணேசர் கிருபையால் ஆயுள், ஸம்பத்து, கீர்த்தி இவைகள் நிறைந்த, பெற்றோர்களுக்கு அநுகூலனுன ஒரு ஸத்புத்ரன் உண்டாவான்” என்று சொல்லி பிராம்மண வேஷம் தரித்த பரம சிவன் மறைந்துவிட்டார்.

காலையில் விழித்துக்கொண்டதும் அரசன் ஸ்வப்னத்தை நினைத்து ஆச்சர்யமடைந்து மந்திரி களிடத்தில் கூறினுன். மந்திரிகளும் சந்தோஷ மடைந்து 'பிராம்மணர் கூறியபடி கட்டாயம் உனக்கு வம்சவிருத்திகரனுன ஸத்புத்திரன் பிறப்பான். நீ ஆம்ரவணேசரை சரணமடை'

என்று கூறினார்கள். அரசனும் பிராம்மணர்களுக்கு வஸ்திரம், ஆபரணம், கோக்கள், தனம் இவைகளை தானம் கொடுத்துவிட்டு ஜோஸியர்களால் தீர்மானிக்கப்பட்ட சுப லக்னத்தில் மனைவியுடன் கூட தேரில் ஏறிக்கொண்டு புறப்பட்டு மேற்கு திக்கில் சென்றான். ரதம், கஜம், குதிரை, காலாட் படைகளும் கூடச்சென்றன. புண்ய க்ஷேத்ரங் களும், புண்ய தீர்த்தங்களும், பல விருக்ஷங்களும் நெல்வயல்களும் நிறைந்த தன் சோழ தேசத்தைப் பார்த்துக்கொண்டே சென்றான்.

தன் வைஜயந்தமென்ற பட்டணத்திலிருந்து ஒரு யோஜனை தூரம் மேற்கு திக்கில் இருக்கும் கும்பகோணம் வந்து பல பிரிவுகளாகப் பிரிந்து சென்று சோழ பூமியைச் செழிக்கச்செய்கிற சமுத்ர ராஜனின் பட்டமஹிஷியான காவேரி நதியைப் பார்த்தான். அங்குள்ள பிராம்மணர்களால் வரவேற்கப்பட்டு ஆசியைப்பெற்று ஸ்னானம் பண்ணி, பித்ரு தர்ப்பணம், பிராம்மண சந்தர்ப் பணம் முதலியவைகளைச் செய்து, அங்கு ஒரு நாள் தங்கி மறுநாள் காலையில் புறப்பட்டு பஞ்சநத க்ஷேத்திரம் வந்து, அங்கிருந்து வடாரண்யத் திலுள்ள பிரேம புஷ்கரிணீ தீர்த்தத்துடன் விளங்கும் பிரேமபுரி என்ற அன்பில் க்ஷேத்திரம் வந்தடைந்தான். இவ்வாறு வழியில் மூன்று நாள் தங்கிவிட்டு நான்கு பக்கமும் சுகந்த பரிமளம் வீசிக் கொண்டிருக்கும் ஆம்ரவணம் வந்தான். அங்கு கிளிகளும், மயில்களும்கூட 'ஏ சம்போ! ஏ கிரீசா! எங்களை ரக்ஷிக்கவேண்டும்' என்று சப்தமிட்டுக்

கொண்டிருப்பதைப் பார்த்து ஆச்சர்யமடைந்தான். அங்குள்ளவர் யாவரும் பஸ்மருத்ராக்ஷதாரிகளாக காயத்ரீ நதீதீரத்தில் புஷ்பங்களால் சிவலிங்க பூஜை செய்வதைக்கண்டு ஈசுவர பக்தியால் மெய் மறந்து அவ்விடத்தில் சகல ஜீவராசிகளையும் சிவமயமாகப் பார்த்து ஆனந்தித்தான்.

இருபத்தாருவது அத்யாயம் முற்றும்.

இருபத்தேழாவது அத்யாயம்

பிறகு சோழராஜா தனது ஸைந்யங்களை வெகுதூரத்திலேயே நிறுத்திவிட்டு காயத்ரீ நதியில் ஸ்நானம்பண்ணி நியமத்தோடு கூடினவனாய் பக்தியுடன் விபூதி ருத்ராக்ஷமணிந்து ஆம்ர வணத்தில் ஓர் மாமரத்தடியில் சுத்தரத்ன ஸ்வரூபமாய் பிரகாசிக்கும் ஸ்வயம்பூ லிங்கத்தை தர்சித்து இருகண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் விட்டுக் கொண்டு மயிர்க்கூச்செரிந்து பரமபக்தியுடன் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணினான். மஹாலிங்கத்தை எத்தனை தடவை பார்த்தும் அரசனுக்கு திருப்தி ஏற்படவில்லை.

உடனே அநேகம் சில்பிகளைக் கூப்பிட்டு ஆலய நிர்மாணம் செய்ய உத்தரவிட்டான். அவர்களும் ராஜவிச்வாசமுள்ளவர்களாய் ஈசுவர பக்தியுடன் நான்கு பக்கங்களிலும் திடமாயும், உன்னதமாயுமுள்ள பிராகாரங்களெழுப்பி முன்பக்கத்தில்



திருமாந்துறை ஸ்ரீ பாலாம்பிகை

அழகிய கோபுரம் ஒன்று கட்டி விசித்ரமான அநேகம் பிம்பங்களமைத்து, கோடி சூர்ய பிரகாச மான விமானத்தை உண்டுபண்ணி தேவிக்கும் மற்ற பரிவார தேவதைகளுக்கும் சாஸ்திர பிரகாரம் ஆலயங்கள் கட்டி அரசனிடம்தெரிவித்தார்கள்.

இதைக்கண்டு அரசன் சந்தோஷமடைந்து சில்பிகளை தன கனக வஸ்திர பூஷணுதிகளால் உபசரித்து ஆகமநிபுணர்களான அநேகம் பிராம்ம ணுேத்தமர்களை வரவழைத்து சுப லக்னத்தில் சிறந்த சில்பிகளால் சாமுத்ரிகா லக்ஷணப்படி அங்கவிந்யாஸங்களுடன் நன்கு அமைக்கப்பட்ட நல்ல லக்ஷணமுள்ள அழகான தேவீ பிம்பத்தை 'பாலாம்பிகா' என்ற நாமத்துடன் பிரதிஷ்டை செய்து, மற்றுமுள்ள கணநாதர் முதலிய பரிவார தேவதைகளை சாஸ்திர பிரகாரமாக அந்தந்த ஸ்தானத்தில் ஸ்தாபித்து ஸஹஸ்ர கலசம் வைத்து பிராமணர்கள் ருத்ரம் முதலான மஹாமந்திரங்களை ஜபித்தபின், பிராம்மணச்ரேஷ்டர்கள் நல்ல சுப முகூர்த்தத்தில் ஈசுவரனுக்கும் தேவிக்கும் பரிவார தேவதைகளுக்கும் வாஸனை திரவ்யங்கள் கலந்த கலச தீர்த்தங்களால் மஹாபிஷேகம் செய்தார்கள்.

இம்மஹாபிஷேகத்தைப் பார்க்க ஆசையுள்ள வர்களாய் பிரும்மாவும் இந்திரன் முதலிய எல்லா தேவர்களும் கும்பல் கும்பலாக ஆகாயத் தில் வந்து கூடினுர்கள். தேவர்கள் கல்பகமலர்களை வாரிவாரியிறைத்தார்கள். தும்புருவும், நாரதரும் வீணுகானம் செய்ய, அப்ஸரஸ்திரீகள் திவ்ய

நர்த்தனம் செய்தார்கள். பத்து திக்குகளும் செவிடுபட அஷ்டாதச வாத்யங்களும் முழங்கின. அத்யானந்தத்தினுல் மெய்மறந்து அரசன் ஆனந்த நர்த்தனம் செய்தான். பிறகு ஷோடசோபசாரங் களால் ஆம்ரவணேசனை ஆராதித்து ஸகல ஜனங் களாலும் புகழப்பட்டவனுய் ஆம்ரவணேசனை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து, கோதானம், பூதானம், கன்னிகாதானம் முதலிய ஷோடச மஹா தானங்களையும் பக்தியுடன் செய்து, ஆயிரக்கணக் கான பிராம்மண ச்ரேஷ்டர்களுக்கு ஷட்ரஸோபேத மாக அன்னமளித்து, பூரிதக்ஷிணை முதலியவை களும் அளித்து அவர்களால் ஆசீர்வாதம் பெற்ருன்.

பிறகு அவ்விடத்தில் பகவானுடைய பூஜைக் காக விசாலமாக புஷ்பச் செடிகள் நிறைந்த நந்தவனமொன்றை ஏற்படுத்தினுன். நித்திய பூஜையை உத்தேசித்து, ஆகம சாஸ்திரங்களில் நிபுணர்களான அர்ச்சகர்களை பகவதாராதனுர்த்த மாக நியமித்து அவர்களுக்கு அனேகம் பூமிகளை மான்யமாகக் கொடுத்தான். தன்மனைவியுடன்கூட அரசன் பிரும்மதீர்த்தத்தில் பிரதிதினமும் ஸ்நானம் செய்து ஈச்வரனையும், தேவி பாலாம்பிகையையும், வணங்கி தியானித்துக்கொண்டு ஒரு மாதகாலம் அவ்விடம் வஸித்து தினமும் ஆயிரக்கணக்கான பிராம்மணர்களுக்கு அன்னமளித்தான்.

பிறகு அவ்விடம் விட்டுப்புறப்பட்டு அந்த க்ஷேத்திரத்திற்கு ஈசான்ய திக்கிலுள்ள ஸ்ரீமங்கள புரமென்ற திருமங்கலம் வந்து ஸாமவேதநாதனை

நமஸ்கரித்து, அவ்விடமிருந்து ஸ்ரீ தபஸ் தீர்த்த நகரமென்கிற லால்குடி க்ஷேத்திரம் வந்து ஸப்தரிஷீச்வரரை பிரதக்ஷிணம் நமஸ்காரம் செய்து, அங்கிருந்து ஆதிபுரமென்கிற ஆதிகுடி வந்து, ஆதிபுரேச்வரரை வணங்கி கிரமமாக தன் பட்டணம்போய்ச் சேர்ந்தான்.

பிறகு ஆம்ரவணேச்வரன் அருளால் சோழ ராஜாவான சுவேதகேது நல்லகுணமுள்ளவனையும், புத்திமானையும், தர்ம சிந்தனையுள்ளவனையுமிருக்கும் ஒரு புதல்வனைப் பெற்றான். அப்புதல்வனால் வெகு காலம் சுகமனுபவித்து தனது அந்திய காலத்தில் பிள்ளையிடம் ராஜ்யத்தை ஒப்பித்து ஈச்வரசாயுஜ்ய மடைந்தான்.

ஏ சௌனகாதி ரிஷிகளே! என்னால் சொல்லப் பட்ட இந்த ஆம்ரவணக்ஷேத்ர மாகாத்மியத்தை எவர்கள் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ; அவர்கள் ஸகல பாக்யங்களையும் அடைந்து புத்திர பௌத்ராதிகளோடுகூட இஹலோகத்தில் பரம சுகமனுபவித்து முடிவில் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைவார்கள்.

ஸ்திரீகள் பிரதிதினமும் பிரும்மதீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணி பாலாம்பிகைக்கும் சுத்த ரத்னேச்வரருக்கும் அபிஷேகம் செய்வித்து தூப தீப நைவேத்யாதி ஷோடசோபசாரபூஜை நடத்தி வணங்குவார்களேயாகில் நிச்சயமாக அவர்களுக்கு குழந்தைகள் உண்டாகும். பிரும்மஹத்யாதி மஹா பாபங்களைச் செய்தவர்களானாலும் இந்த க்ஷேத்ரம்

வந்து ஒரு மாஸம் வஸித்து பிரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சுத்தரத்னேச்வரரையும், பாலாம்பிகையையும் தர்சித்து வணங்கி பூஜிப்பார்களேயாகில் ஸகல பாபங்களினின்றும் விடுபட்டு இவ்வுலகில் வெகுகாலம் ஸுகமனுபவித்துவிட்டு மோக்ஷமடைவார்கள். ஏ ரிஷிகளே! இவ்விஷயத்தில் கொஞ்சமேனும் ஸந்தேஹம் வேண்டாம். இதற்கு மருதாந்தன் சாக்ஷி.

காயத்ரீ நதியில் ஸ்நானமும் சுத்தரத்னேச்வர தர்சனமும், ஆயுள், ஆரோக்யம், கீர்த்தி, ஸம்பத்து இவைகளை எளிதில் பெறுவதற்கு மூல காரணமாகும். ஆம்ரவண க்ஷேத்ர வாஸம், சுத்தரத்னேச்வரரின் ஆலய கைங்கர்யம், அவரது தர்சனம், பூஜை, இவைகள் ஸாமான்யர்களுக்குக் கிடைப்பதரிது. அனேக ஜன்மங்களில் புண்யம் செய்தவர்களுக்குத்தான் கிடைக்கும்.

இவ்வாறு ஸௌதர்முகமாக ஆம்ரவண க்ஷேத்ர மாஹாத்ம்யத்தை விரிவாகக்கேட்டு பரமானந்தமடைந்த சௌனகாதி மஹரிஷிகள் சூதமுனிவரை வணங்கி வெகுவாகப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

இருபத்தேழாவது அத்யாயம் முற்றும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆம்ரவண க்ஷேத்ரமாஹாத்ம்யம் முற்றுப்பெற்றது,

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த

திருமாந்துரைத் தேவாரம்

செம்பொனுர்தரு வேங்கையு நாழலுஞ் செருந்தி
செண்பகமானை
கொம்பு மாரமூ மாதவி சுரபுனை குருந்தலர் போந்துந்தி
யம் பொனேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
வெம்பிரானிமையோர் தொழுபைங்கழ லேத்துதல்
செய்வோமே

விளவு தேனெடு சாதியின் பலங்களும் வேய்மணி
நிரந்துந்தி
யளவி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானத்
துளவ மான் மகனைங்கணைக் காமனைச்சுட விழித்தவநெற்றி
யளக வாணுத லரிவைதன் பங்கனை யன்றி மற்றறியோமே

கோடு தேன்சொரி குன்றிடைப் பூகமுங் கூந்தலின்
குலைவாரி
யோடு நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைநம்பன்
வாடினூர் தலையிற் பலி கொள்பவன் வானவர்
மகிழ்ந்தேத்துங்
கேடிலா மணியைத் தொழலல்லது கெழு முதலறியோமே

இலவனுழலு மீஞ்சொடு சுரபுன்னையிள மருதில வங்கம்
கலவி நீர்வரு காவிரி வடகரை மந்துறை யுறைகண்ட
னலைகொள்வார் புனலம் புலிமத்தமு மாடரவுடன் வைத்த
மலையை வானவர் கொழுந்தினையல்லது வணங்குத
லறியோமே

கோங்கு செண்பகங் குருந்தொடு பாதிரி குரவிடை
மலருந்தி
யோங்கி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானைப்
பாங்கினு லிடுந்தூபமுந் தீபமும் பாடவிம்மலர் சேர்த்தித்
தாங்குவாரவர் நாமங்களு ளினிற்றலைப்
படுந்தவத் தோரே

பெருகு சந்தனங்காரகில் பீலியும் பெருமர நிமிர்ந்துந்திப்
பொருது காவிரி வடகரை மாந்துறைப் புனிதனெம்
பெருமானைப்
பரிவினு லிருந்திரவியு மதியமும் பார்மன்னர் பணிந்தேத்த
மருதவானவர் வழிபடுமலரடி வணங்குதல் செய்வோமே

நறவ மல்லிகை முல்லையு மௌவலு நாண்மலரவை வாரி
யிறவில் வந்தெறி காவிரி வடகரை மாந்துறை
யிறையன்றங்
கறவனுகிய கூற்றினைச்சாடி யவந்தணன் வரையில்லா
னிறையவாங்கி வலித்தெயி லெய்தவ னிரைகழல்
பணிவோமே

மந்தமார் பொழின் மாங்கனிமாந்திட மந்திகண் மாணிக்க
முந்தி நீர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைவானை
நிந்தியா வெடுத்தார்த்த வல்லரக்கனை நெரித்திடு
விரலானைச்
சிந்தியா மனத்தாரவர் சேர்வது தீ நெறியதுதானே

நீலமாமணி நித்திலத்தொத்தொடு நிரைமலர் நிரந்துந்தி
யாலியாவரு காவிரி வடகரை மாந்துறை யமர்வானை
மாலு நான்முகன் றேடியுங் காண்கிலா மலரடியிணை நாளுங்
கோலமேந்தி நின்றுடுமின் பாடுமின் கூற்றுவ னலியானே

நின்றனுஞ் சமண்டேரு நிலையிலர் நெடுங்கழை நறவேல-
நன்று மாங்கனி கதலியின் பலங்களு நாணலினுரை வாரி
யொன்றி நேர்தரு காவிரி வடகரை மாந்துறை
யொருகால
மன்றியுள்ள ழிந்தெழும் பரிசழகிது வதுவவர்க்கிடமாமே

வலர வளங்கவர் காவிரி வடகரை மாந்துறை
யுறைவானைச்
சிரபுரம் பதியுடையவன் கவுணியன் செழுமறை
நிறைநாவ
னரவெனும் பணிவல்லவன் ஞான சம்பந்த னன்புறுமாலை-
பரவிடுந் தொழில் வல்லவ ரல்லலும் பாவமு மிலர்தாமே

திருமாந்துறைத் திருப்புகழ்

தாந்ததன தந்த தாந்தன தந்த
தாந்ததன தந்த தனதான

ஆக்குடல் வளர்ந்து நீங்குபல் நெகிழ்ந்து
ஆஞ்சு தளர் சிந்தை தடுமாறி

ஆர்ந்துளகடன்கள் வாங்கவு மறிந்து
ஆண்டு பல சென்று கிடையோடே

ஊங்கிருமல்வந்து வீங்குடல் நொந்து
ஓய்ந்துணர் வழிந்து உயிர்போமுன்

ஓங்கு மயில் வந்து சேண்பெறவிசைந்து
ஊன்றிய பதங்கள் தருவாயே

வேங்கையுமுயர்ந்ததீம்புனமிருந்த
வேந்திழையின் இன்ப மணவாளா

வேண்டுமவர் பூண்ட தாங்கள் பதமிஞ்ச
வேண்டிய பதங்கள் புரிவோனே

மாங்கனியுடைந்து தேங்கவயல் வந்து
மாண்பு நெல் விளைந்த வளநாடா

மாந்தர்தவர் உம்பர்கோன் பரவிநின்ற
மாந்துறை யமர்ந்த பெருமானே